# தமிழரசு

1-11-1973 40 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்





செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.



தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3506


தமிழரசு
மலர்: 4 11-1973 இதழ்:
கோழி வளர்ப்புச் சிறப்பிதழ்
இது எங்களுக்கில்லை!



# சென்னை நகரத்திலேயே நீளமான பாலம்





1842-ஆம் ஆண்டு அடையாற்றில் கட்டப்பட்டது எல்பின்ஸ்டன் பாலம். ஏறக்குறைய 130 வயதை எட்டிவிட்டதால் இந்தப் பாலம் பலவீனமுற்றுவிட்டது. நாள்தோறும் பெருகி வரும் போக்குவரத்தின் காரணமாக மிகவும் நெரிசல் மிகுந்த பகுதியாக மாறிவிட்டது. எனவே, போக்குவரத்தைச் சமாளிக்கப் புதிய பாலம் ஒன்று தேவைப்பட்டது. இந்தப் பாலத்தின் அருகில் ஏறக்குறைய ரூ. 58 இலட்சம் செலவில் திரு.வி.க. பாலம் உருவாக்கப்பட்டிருக்கிறது.



பாலத்தின் இருபுறமும் இடம் பெற்றுள்ள யாளிகள்



போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக நான்கு வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தின் இரு புறத்திலும் நடந்து செல்வோருக்கு நடைபாதைகளும் சைக்கிளில் செல்வோருக்குத் தனிப்பாதையும் கொடுக்கப் பட்டுள்ளன.

சென்னை நகரிலேயே மிக நீளமான பாலம் இது தான். இதன் நீளம் 298·2 மீட்டர் (960·6 அடி); அகலம் 19·65 மீட்டர் (65·5 அடி) இதனை உருவாக்கிட 980 டன் இரும்பு, 2500 டன் சிமெண்ட் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

20 மீட்டர் அகலமுள்ள 14 கண்கள் கொண்ட இந்தப் பாலத்தின் இருபுறமும் தண்ணீர் தேங்கி அரித்து விடாமல் இருக்கச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. வி. க. பாலத்தை 20—10—1973 அன்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் சென்னை நகர மேயர் திரு ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில், முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பாலத்திற்கு, முதல்வர் கலைஞர் அவர்கள் 4-6-1971 அன்று அடிக்கல் நாட்டும் பொழுது குறிப்பிட்டார்கள்,

"இப்பாலத்திற்கான செலவு மதிப்பீடு 58 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையை திருத்திய மதிப்பீடு என்று மாற்றாமல் இத் தொகைக்குள் கட்டி முடித்தால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன்"—என்று!

முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட படியே 58 லட்சம் ரூபாய் செலவிலேயே, திருத்திய மதிப்பீடு இல்லாமல் இந்தப் பாலம் கட்டி முடிக்கப் பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

"வேண்டுகோள் நிறைவேறியிருக்கிற பாலம் இந்தப் பாலம் என்பதை எண்ணுகிற நேரத்தில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்" என்று, பாலத் திறப்பு விழாவின் போது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"இந்த வேண்டுகோள் இந்தப் பாலத்தோடு நின்றுவிடாமல், அடுத்தடுத்து எல்லாக் காரியங்களிலும் நிறைவேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றும் முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

போக்குவரத்தினை எளிதாக்குவதற்கு இந்தப் பாலம் பயன்படும் என்பது உறுதி.




# பிற்பட்டோர் முன்னேறப் பெருந்தொண்டு புரிந்திடுவோம்!

முதல்வர் கலைஞர்

உத்தரப் பிரதேசம் இந்தியாவில் பெருமை வாய்ந்த ஒரு மாநிலமாகும். பண்டித நேருவினுடைய குடும்பம் இந்த மாநிலத்திற்குப் பெருமை சேர்த்தது என்று கூறலாம். இந்தியாவின் அடித்தள மக்களுடைய குரலைப் பிரதிபலித்த திரு. டாக்டர் லோகியாவும் இந்த மாநிலத்திலேதான் பிறந்தார். இந்தப் புகழ் பெற்ற ஊரான அலகாபாத்திற்கு வந்ததில் நான் பெருமை அடைகிறேன்.

யமுனையும், கங்கையும் கலக்குமிடமான திருவேணி சங்கமம் இங்கு இருக்கின்றது. இந்த மாநாட்டில் பின்தங்கியோரும், தாழ்த்தப்பட்ட மக்களும் கலந்திருக்கிறீர்கள். அதாவது யமுனையும் கங்கையும் கலந்திருப்பது போல நீங்கள் கலந்திருக்கிறீர்கள்.

திருவேணியில் சரஸ்வதி நதியும் கலப்பதாகச் சொல்லுவார்கள். ஆனால் அது கண்ணுக்குத் தெரிவதில்லை. அது போல நானும் பிரித்துப் பார்க்க முடியாதபடி, உங்களோடு கலந்திருக்கிறேன்.

தமிழர்கள், மலையாளிகள், வங்காளிகள், பஞ்சாபிகள், மராட்டியர்கள், இந்திக்காரர்கள் என்று மொழிவாரியாக ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை உண்டு. ஆனால் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் என்ற அடிப்படையில் இந்தியா முழுவதுமுள்ள மக்களுக்கு ஒரே தன்மைதான் வேண்டும். அதற்குப் பெயர்தான் சுயமரியாதைத் தன்மை.

பிரம்மாவினுடைய முகத்தில் பிறந்தவன் பிராமணன்; பிரம்மாவினுடைய தோளிலே பிறந்தவன் சத்திரியன்; பிரம்மாவினுடைய தொடையிலே பிறந்தவன் வைசியன்; பிரம்மாவினுடைய காலிலே பிறந்தவன் சூத்திரன். அதாவது நாமெல்லாம் காலிலே பிறந்தவர்கள் என்பது சிலருடைய கற்பனை. அதையே வாதத்திற்கு ஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். கடவுளுடைய உடம்பில் எல்லா அவயவங்களும் ஒன்றுதான். இதில் எந்த அவயவத்தில் யார் பிறந்தாலும் எல்லோரும் மனிதர்கள்தான்.

தமிழ்நாட்டில் ஒரு மரம் இருக்கிறது. அதற்குப் பெயர் அத்தி மரம். அதுபோன்ற மரம் வேறு பெயரில் உங்கள் மாநிலத்தில்கூட இருக்கலாம். அந்த மரத்தில் இலைகளிலும் காய் காய்க்கும். கிளையிலும் காய் காய்க்கும். அடிமரத்திலும் காய் காய்க்கும். வேரிலும் காய் காய்க்கும். எல்லாக் காய்களையும் அத்திக்காய் என்றுதான் சொல்லுவோம். அதைவிட்டு, உச்சியில் காய்த்த காயை ஆப்பிள் காய் என்றும், அடிமரத்தில் காய்த்த காயை திராட்சை என்றும், வேரிலே காய்த்த காயை ஆவக்காய் என்றும் சொல்லமாட்டோம்.

அதைப்போலவே கடவுளுடைய உடம்பில் எந்த இடத்திலே பிறந்தாலும் அவன் மனிதனே தவிர, சாதி வாரியாகப் பிரிக்கப்படக் கூடியவன் அல்ல.

இன்றையதினம் சமுதாயத் துறையில் ஒரு பெரும் புரட்சியை நாம் எதிர்பார்க்கிறோம். இந்தப் புரட்சி உருவாக வேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே நாம் முன்னுரை எழுதி வைத்திருக்கிறோம். சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி இவைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டுமென்று அரசியல் சட்டத்தின் முன்னுரை கூறுகிறது. சமத்துவம், தோழமை, சமவாய்ப்பு இவை

களெல்லாம் தேவை என்று அரசியல் சட்டத்தின் முன்னுரை எடுத்துச் சொல்கிறது. ஆனால் அந்த முன்னுரையில் நாம் பொருளாதார நீதிக்கும் அரசியல் நீதிக்கும், முயற்சித்ததுபோல் சமுதாய நீதிக்கு முயற்சிக்கவில்லை.

சமுதாய நீதிக்கான அரிச்சுவடிப் பாடத்தைக்கூட நாம் இன்னும் முடிக்கவில்லை. சமநீதி, சமவாய்ப்பு இவைகள் வழங்கப்பட வேண்டுமென்று யோசிக்கிற நேரத்தில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஓட்டப் பந்தயத்தில் கொஞ்சம் பலவீனமாக இருக்கின்றவனைக் கொஞ்சம் முன்னால் நிறுத்தி ஓடச் செய்வதைப்போல, சமுதாயத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டாக வேண்டும்.

அப்படிப்பட்ட சலுகைகளை வழங்கிச் சமநீதியை உருவாக்குவதற்கு எங்களுடைய தமிழ்நாட்டில் முயற்சி செய்து வருகிறோம். அந்தக் காரியங்களை நாங்கள் முழுவதும் செய்து முடிக்காவிட்டாலும் அதில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் வேலை வாய்ப்பு, கல்வி வசதி அளித்தல் இவைகளில் குறிப்பிட்ட சதவிகிதத்தை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். கல்விச் சலுகை, கலைக்கல்லூரிகளில் மாத்திரமல்லாமல் மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் நாங்கள் வழங்குகிறோம்.

இப்படி நாங்கள் பின்தங்கிய மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் வழங்குகின்ற சலுகையினுடைய விகிதாச்சாரம் 49 சதவிகிதமாகும்.

வேலைவாய்ப்புகள் மூலமும், கல்வி மூலமும் பொருளாதார நீதியில் சமுதாயத்தில் உயர்வைத்தான் கொண்டு வரமுடியும். ஆனால் சமூக நீதி பெறுவதற்குச் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் உள்ள கட்டுப்பாடுகள் உடைத்தெறியப் பட வேண்டும்.

உதாரணம் வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட தோழன் ஐ.ஏ.எஸ் அதிகாரியாக ஆக முடியும். ஆனால் கோவிலில் ஓர் அர்ச்சகராக ஆக முடியாது. அப்படி அர்ச்சகராக ஆக முடியாத நிலைமை எங்கள் மாநிலத்தில்

அலகாபாத் பொதுக் கூட்ட மேடை

முதல்வர் கலைஞர் தமிழில் பேசுவதை இந்திப் பயிற்சித் திட்டத்தின் வட்டார அலுவலர்(சென்னை) டாக்டர் சந்திரகாந்த் இந்தியில் மொழி பெயர்க்கிறார்.



இன்னமும் இருக்கிறது.

ஆகவே, ஆண்டவனைப் பூசிக்கின்ற அர்ச்சனைகளைச் செய்வதில் தேர்ச்சி பெறுகின்ற தகுதி படைத்த யாராக இருந்தாலும், அவர்கள் எந்தச் சாதிக்காரராக இருந்தாலும், அர்ச்சகராக ஆகலாமென்று இப்பொழுது நாங்கள் சட்டத்தைப் போட்டிருக்கிறோம்.

அந்தச் சட்டத்தின் மூலம் உயர்ந்த சாதிக்காரனும் பூசாரியாகலாம்; தாழ்ந்த சாதிக்காரனும் ஆண்டவனைப் பூசிக்கின்ற பூசாரியாகலாம். ஆனால் அந்தச் சட்டத்தினுடைய நிலைமை இப்பொழுது என்ன தெரியுமா? தமிழ்நாட்டிலே உள்ள சில சனாதனிகள் அந்தச் சட்டத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி அந்தச் சட்டம் இப்பொழுது எழுந்து நடமாட முடியாத நொண்டியாக இருக்கின்றது. அந்தச் சட்டம் எழுந்து நடமாட வேண்டுமானால் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

ராஜமான்யத்தை ரத்துச் செய்தது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு, சுப்ரீம் கோர்ட் ராஜமான்ய ரத்துச் செல்லாது என்று தீர்ப்பு அளித்தது. ஆனால் கொள்கையை நிறைவேற்றுவதென்று நாடாளு மன்றத்தில் புதிதாக ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். சில நூறு ராசாக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தியபோது, ஏன் பல கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது என்று நான் கேட்கிறேன்.

தகுதியின் அடிப்படையில் மார்க்குகளைப் பெற்றவர்கள் கல்வியில் சலுகை பெற வேண்டும் என்று தமிழ்நாட்டிலே இருக்கிற பத்திரிகைக்காரர்கள் வாதாடுகிறார்கள். ஆனால் ஆண்டவனை வணங்குவதில் அர்ச்சகர்களுக்குத் தகுதி கூடாது. சாதிதான் தேவை என்கிறார்கள். மக்கள் ஆண்டவனின் குழந்தைகள் என்று சொல்லுகிறோம். எந்தத் தாயாவது இந்தக் குழந்தை தன்னைத் தொடலாம், இந்தக் குழந்தை தன்னைத் தொடக்கூடாது என்று சொல்லுவாளா? சொன்னால் அப்படிப்பட்டவள் தாயாக இருக்க முடியாது. பேயாகத்தான் இருக்க வேண்டும்.

இரண்டாவது முயற்சியாக, தமிழ்நாட்டிலே இன்னொரு புரட்சியை நாங்கள் செய்திருக்கிறோம். தமிழ்நாட்டிலே உள்ள ஆலயங்களை நிருவகிக்க அறங்காவலர்கள் இருக்கிறார்கள். அந்த ஆலய நிர்வாகிகளில் கட்டாயம் ஓர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவரும் இருக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றிலேதான் இப்போது நாங்கள் விதி செய்திருக்கின்றோம்.

எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் எவ்வளவு வசதி, திறமை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சாதியின் பெயரால், தாழ்த்தப்பட்டவர், பின்தங்கியவர் என்ற பெயரால் ஒதுக்கப்படுவது நீண்டகாலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் நந்தன் என்று ஓர் அரிசன பக்தன் இருந்தான். அவன் ஆண்டவனைத் தரிசிக்கக் கோவிலுக்குச் செல்ல நினைத்தான். அவன் தாழ்ந்த சாதி என்ற காரணத்தால் நெருப்பிலே குளித்து விட்டு உள்ளே வர வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அவன் நெருப்பிலே குளித்தான். நெருப்பிலே குளித்த பின்பு வெளியே வந்தானா? வரவில்லையா? என்று எனக்குத் தெரியாது.

யாதவர்களுடைய கடவுளான கிருஷ்ணனைப் பற்றிக் கூட ஒரு கதை சொல்லுவார்கள். அவன் திறமை படைத்தவன். பெரிய ராசதந்திரி என்றெல்லாம் புராணம் சொல்லுகின்றது. ஆனால் அவன் யாதவ வகுப்பைச் சேர்ந்தவன்; ஆகவே சத்திரியர்கள்தான் நாட்டை ஆளலாம் என்று சொல்லி அவனுக்கு ஆளும் உரிமை இல்லை என்று கூறி விட்டார்கள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் பிறந்த கிருஷ்ணன் இங்கே ராஜ்யத்தை அமைக்க முடியாமல், குசராத்திற்குச் சென்று அங்கே 'துவாரகா' என்ற புதிய ராஜ்யத்தை அமைத்தான். ஆக, சாதி வித்தியாசம் கிருஷ்ணன் என்ற அவதாரத்தையும் விடவில்லை.

மராட்டிய 'வீரன்' சிவாஜியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவன் எதிரிகளை முறியடித்தவன்; மாபெரும் நாட்டை உருவாக்கியவன். ஆனால் பட்டம் சூட்டிக் கொள்ளக்கூடாது என்று உயர்சாதிக்காரர்களால் அவன் தடுக்கப்பட்டான். அவன் 'யாகம்' செய்து சத்திரியனாக மாறினால்தான் அரசாளத் தகுதி உடையவன் என்று சொல்லப்பட்டான். ஆகவே சாதி வித்தியாசம் சரித்திரக் காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒரு சாபக்கேடு.

சாதியை ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்ட உதட்டளவு பேச்சுக்கூடாது, செயலில் காட்ட வேண்டும். நீ செய்து காட்டி இருக்கிறாயா என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள்.

என் தந்தை செய்யத் தவறிய காரியத்தை நான் தந்தையாக இருந்து செய்திருக்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன்பு என்னுடைய மகனுக்கு ஓர் அரிசனப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தேன். அந்த வகையில் நான் அரிசனங்களுக்குச் சம்பந்தி.

என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளிக்கின்ற ஒரு முறையை அரசாங்கத்தில் கொண்டு வந்தார்கள். அதை நாங்கள் தொடர்ந்து அமல் நடத்தி



வருகிறோம். கலப்புத் திருமணம் என்றால் சர்மா வீட்டுப் பெண்ணுக்கும், சாஸ்திரி வீட்டுப் பையனுக்குமல்ல; யாதவ் வீட்டுப் பையனுக்கும் 'ஜாட்' வீட்டுப் பெண்ணுக்குமல்ல. மாப்பிள்ளையோ அல்லது பெண்ணோ இருவரில் ஒருவர் கட்டாயம் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் கலப்புத் திருமணம். அவர்களுக்குத்தான் தங்கப்பதக்கம் பரிசு!

40 வருடங்களுக்கு முன்னே தமிழ்நாட்டில் ஒரு புதிய திருமண முறையை நாங்கள் கண்டிருக்கிறோம். அதற்குச் சுயமரியாதைத் திருமணம் என்று பெயர். அதற்குப் புரோகிதர் வருவது கிடையாது. புரோகிதர் பார்வையாளராகத்தான் வருவார். மந்திரமில்லை; மந்திரம் சொன்னாலும் யாருக்கும் புரிவதுமில்லை. அக்கினி சாட்சியில்லை. சாட்சிக்கு, கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும்; திருமணத்திற்கு வரத்தேவையில்லை! மணமகனும், மணமகளும் மாலை மாற்றிக்கொள்வார்கள். நூறு பேர் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நடைபெறும். இந்த முறையை பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஆரம்பத்திலேயே பலத்த எதிர்ப்பு நாட்டிலே இருந்தது. சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டால், புரோகிதர் இல்லாமல் திருமணம் செய்து கொண்டால், குழந்தை பிறக்காது என்று கூறினார்கள். நான் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவன்தான். எனக்குக் குடும்பக் கட்டுப்பாட்டையும் மீறி ஆறு குழந்தைகள் இருக்கிறார்கள். புரோகிதத் திருமணம் செய்து கொண்டவர்கள் புத்திர பாக்கியத்திற்காகக் காசி, ராமேஸ்வரம் என்று அலைகிறார்கள். சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்களோ, போதும் போதும்! இனிக் குழந்தைகள் வேண்டாம் என்று அலறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திருமண முறை சட்டப்படி செல்லாத நிலைமை தமிழ்நாட்டில் இருந்தது. 1967-க்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தத் திருமணத்தை எல்லாம் சட்



டப்படி செல்லுபடி ஆக்க வேண்டுமென்று நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு போனோம். ஆனால் வாய் அளவில் சீர்திருத்தம் பேசுகின்ற காங்கிரஸ் ஆட்சி எங்கள் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும் என்று சட்டசபையிலேயே ஒரு மசோதாக் கொண்டு வந்து அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

இனிமேல் நடக்கின்ற சுயமரியாதைத் திருமணங்கள் மாத்திரமல்ல, இதுவரை நடந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லும் என்ற அந்த மசோதா கூறியது. அதற்கான ஒப்புதலை அளிக்க மத்திய அரசு முதலில் தயங்கியது. அதற்காக எங்களுடைய சட்ட அமைச்சர் டெல்லியிலேயே தவம் கிடந்தார். கடைசியாக அதற்குச் சம்மதம் கிடைத்தது.

சமுதாயத்தில் நல்ல விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்துவதற்குக் கல்வியும் ஒரு கருவியாகும். ஆகவேதான் தமிழ்நாட்டில் புகுமுக வகுப்பு வரையில் நாங்கள் இலவசக் கல்வியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பின்தங்கிய மாணவர்களுக்கும் அரிசன மாணவர்களுக்கும் பட்டப் படிப்பில் 70 சதவிகிதம் உதவித் தொகை வழங்குகிறோம். இந்த மாநாட்டின் மூலம் மத்திய அரசுக்கு நான் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது மத்திய அரசு வேலை வாய்ப்பில் அரிசனங்களுக்கு மாத்திரம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. இதைப் பிற்பட்டோருக்கும் அமல்படுத்த மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். மத்திய அரசு அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பில் இடம் அளிப்பது போல, பின்தங்கிய வகுப்பினருக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று இந்த மாநாட்டின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இந்தக் காரியம் மாநில அரசு அளவிலே தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது. பின்தங்கியோர் நலனை அறிய மாநில அளவிலே ஒரு குழுவைப் போட்ட முதல் மாநிலம் தமிழ்நாடுதான். பின்தங்கிய நலக்குழு செய்த பரிந்துரைகளை எல்லாம் ஏற்றுப் படிப்படியாக நாங்கள் காரியங்களைச் செய்து வருகிறோம்.

பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களிடையே ஒரு பத்துப்பேர் உயர்ந்துவிட்டால் சமுதாயம் உயர்ந்து விட்டதாகப் பொருளல்ல. உயர்ந்துவிட்ட அந்த பத்துப்பேரும் மிச்சமிருக்கின்றவர்களைக் கைதூக்கிவிடப் பயன் படவேண்டும்.

இப்போது உள்ள நிலைமை என்னவென்றால் ஓர் அரிசனச் சேரியிலே ஒரு வாலிபன் படித்து முன்னேறி உத்தியோகத்திற்குப் போய்விட்டால் உடனே தனது வீட்டை வேறு இடத்திற்கு மாற்றி விடுகிறான். அதற்குப் பதிலாக அவன் இந்த இடத்திலேயே குடியிருந்து தன்னைப் போலவே மற்றவர்களையும் உயர்த்தி விடவேண்டும்.

ஒவ்வொருவனும் உயர்ந்த சாதிக்காரனாக ஆக ஆசைப் படக்கூடாது. எல்லோரும் மனிதர்களாக ஆக வேண்டுமென்றுதான் ஆசைப்பட வேண்டும்.

அமெரிக்காவிலேகூட நீக்ரோக்களில் சிலபேர் தாங்கள் வெள்ளை நிறமாக மாறு



வதற்கு ஊசி போட்டுக்கொள்கிறார்கள். சில நீக்ரோக்கள் சுருண்டு கிடக்கின்ற தங்கள் தலைமுடியை நீண்டதாக ஆக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இதை எதிர்த்து அங்கே உள்ள பெரும்பாலான நீக்ரோக்கள் நாங்கள் நீக்ரோவாக இருப்பதில்தான் பெருமை அடைகிறோம் என்கின்ற கோஷத்தை இப்பொழுது கிளப்பி இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்களையும் உயரச் செய்வதிலேயே தான் முனைந்திருக்க வேண்டுமே அல்லாமல், தாங்கள் உயர்ந்தால் போதும் என்று எண்ணி இருக்கக் கூடாது.

சாதி ஒழிய சமத்துவம் நிலை நாட்டப்பட இந்தியப் பூபாகத்தில் பல பெரியவர்கள் வழி காட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் காந்தி அடிகளை மறக்க முடியாது. அம்பேத்காரை மறக்க முடியாது. தமிழ்நாட்டில் பெரியாரை மற்றும் அண்ணாவை மறக்க முடியாது. பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நான் அப்படி ஒரு சபதத்தைத் தமிழ்நாடு சட்டசபையில் எடுத்துக் கொண்டேன். நான் சபதம் எடுத்துக்கொள்வது திரு. ராஜ்நாராயணைப்போல வெகு வேகமாக இருக்காது. நான் எடுத்துக் கொள்கிற சபதம் மென்மையான முறையில் இருந்தாலும் உறுதியானதாக இருக்கும்.

நான் சட்டசபையிலே எடுத்துக் கொண்ட சபதம் ''என்னுடைய ஆட்சிக் காலத்தில் பின்தங்கிய மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் என்னுடைய உயிரைப் பணயமாக வைத்து வாதாடுவேன், போராடுவேன்'' என்பதாகும்.

பின்தங்கிய தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்காகப் பாடுபட இங்கே நாம் மாநாடு கூட்டியிருக்கிறோம். இந்த மாநாட்டில் நீங்கள் நல்ல பல தீர்மானங்களை எல்லாம் நிறைவேற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நெடுந்தொலைவிலிருந்து என்னை இந்த மாநாட்டிற்காக நீங்கள் அழைத்திருக்கிறீர்கள். நாம் இடையிலே உள்ள தூரத்தால் தான் இடைவெளி அதிகமாக உள்ளவர்களாகக் காணப்படுகிறோம். ஆனால் இதயத்தால் நாம் அதிகத் தூரத்திலில்லாமல் ஒன்றாக இருக்கிறோம்.

உங்களுடைய உணர்ச்சியை —என்னைப் புகைவண்டி நிலையத்தில் வரவேற்றபோதும், இங்கேயும் உணரமுடிகிறது. உங்களோடு இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய தலைவர்கள் பலரும் இங்கே பேச இருக்கின்றார்கள். நான் சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்களை மாத்திரம் இந்த மாநாட்டில் கூறி இருக்கிறேன்.

இதிலே நான் அரசியல் ரீதியிலே எடுத்துச் சொன்ன சமுதாயக் கருத்தை மத்திய அரசு நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மீண்டுமொரு முறை கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு வேலை வாய்ப்புக்களில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக, முழுமையாகப் பூர்த்தி செய்யப் பட வேண்டும். இது ஒன்று.

அதுபோல மத்திய சர்க்காருடைய உத்தியோகங்களில் இனிமேல் பின்தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப் பட வேண்டும். அதையும் மத்திய அரசு, உடனடியாகச் செய்ய வேண்டும்.

இந்த வேண்டுகோளை இந்த மாநாட்டின் மூலம் விடுக்கின்றேன்.

**14—10—73 அன்று அலகாபாத்தில் நடந்த உத்தரப்பிரதேச அரிசன, பிற்பட்டோர் மாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

---

## வெண்பாப் போட்டி 67

*'அரிசி' எனத் தொடங்கி*
*'அரசு' என முடித்தல்*

முடிவு நாள் 12—11—73

## வெண்பாப் போட்டி 68

*அகம்' எனத் தொடங்கி*
*புறம்' என முடித்தல்.*

முடிவு நாள் 24-11-73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



# உலகில் இரண்டு கிளிகள்

டி. என். சுகி சுப்பிரமணியன்.

## 15. கண்ணியத்திற்குச் சோதனை.

உதகையில் படிக்கும் பாபுவுக்கு நெய் லட்டும் தேன்குழலும் செய்துமுடித்துப் பார்சல் வழியே ராதை அனுப்பிக் கொண்டிருந்தாள்.

''ராதை! நான் கோர்ட்டுக்குப் போகிறேன்''

''என்ன விஷயம்?''

''அஞ்சலையின் காலை நான் துண்டித்தது பற்றி நீதி விசாரணை''

''வக்கீல் யார்?''

''வக்கீல்-மணிவாசகன்''

''அட தெய்வமே''

தெய்வம் போல டாக்டர் நர்மதை காரில் போய்க் கொண்டிருந்தாள். நீதி மன்றத்தில் அவள் சாட்சியைக் கூறினாள். குறுக்கு விசாரணை செய்தவர் அவள் கணவன். பல கேள்விகளைக் கேட்ட வக்கீல் ''டாக்டரம்மா நோயாளியைக் காப்பாற்றுவதற்காகவா அவள் முழங்காலை வெட்டி எடுத்தீர்கள்?''

''அப்படியானால் தான் பிழைக்கமுடியும்''

''நோயாளியா? நீங்களா?''

நீதிமன்றமே கலகலவெனச் சிரித்தது.

''இருவரும் பிழைக்க முடியும் அது நீதி'' என்றாள் கோபமாக.

''இது நீதிமன்றம். விசாரணைக்குட்பட்டவர்கள் கோபப்படக் கூடாது. இன்னும் ஒரே கேள்வி. அதாவது இதே அஞ்சலை எப்போதாவது உங்களால் சிகிச்சை செய்யப்பட்டது உண்டா?''

''உண்டு. நாலைந்து வருடங்களுக்கு முன்பு கார் விபத்தில் காலில் அடிபட்டு இதே ஆஸ்பத்திரிக்கு வந்தாள்.''

''யாரால் விபத்து ஏற்பட்டது என்பதைப் பத்திரிகையில் அறிந்திருப்பீர்கள்.''

''ஆமாம். அவள் கணவன் ஓட்டிவந்த காரில் அவள் விபத்துக்குள்ளாகி காலில் அடிபட்டு ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தாள்.''

''அதே அஞ்சலை! அதே காலுக்கு ஆபத்து. அஞ்சலைக்கு எங்கே வேலையென்று தெரியுமா?''

''கார் விபத்து நடந்த நாலைந்து மாதத்திற்குப் பின்பு செண்பகாமில்லில் வேலை கிடைத்தது.''

''மிக்க நன்றி டாக்டர். விபத்தினால் அஞ்சலையின் கால் ஊனமேற்பட்டது. அதே காலைத் துண்டிக்கும் வேலையும் உங்களுக்கே கிடைத்தது.''

டாக்டர் பதில் கூறவில்லை.

மணிவாசகன் வாதத் திறமையால், ஊனமுள்ள கால் உள்ளவள் அஞ்சலை; அவள்மீது பரிவு காட்டினார் முதலாளி முத்தய்யா; ஐந்தாண்டுக்காலத்திற்குப் பின்னர் அதேகாலில் ஏதோ பளுவான பொருள் விழுந்து காலைத் துண்டிக்கும்படியான சூழ்நிலை உண்டாகி விட்டது.

ஊனந்தான்-பழைய ஊனந்தான் கால்முறிவுக்குக் காரணம். மில்லின் வேலைப்பளுவோ மில்லின் கவனக்குறைவோ காரணமில்லை. இது வக்கீலின் வாதத்திறமை.

வழக்குத் தள்ளுபடியாயிற்று.

அதேதினம் மாலை முதலாளி முத்தய்யா ரோஜாப்பூ மாலை ஒன்றை வாங்கிக் கொண்டுபோய் மணிவாசகன் கழுத்தில் போட்டுக் கை குலுக்கினார். பாராட்டினார்.

''என்னைக் காப்பாற்றினீர்கள் வக்கீல் ஸார்''.

''அது என் கடமை.''

''ஒன்று செய்யப் போகிறேன். ஆஸ்பத்திரியில், தனக்கு பணம் ஆயிரம் வரும், ஐயாயிரம் வரும் என்று கனவு கண்டுகொண்டிருக்கும் அஞ்சலையைப்பார்க்கப்போகிறேன்''

''பார்த்து?''

''உண்மையாகவே ஐயாயிரம் கொடுக்க எண்ணுகிறேன். நீதி நமக்குச் சாதகமாக இருந்தாலும் அநீதியாக ஐயாயிரம் பணம் கொடுக்கப் போகிறேன். அவளது மகள் திருமணம் நடக்கட்டுமே''.

''பணக்காரர்கள் எதுவும் செய்யலாம்! ஏழைகள் எதையும் செய்யக்கூடாது—''

மலைப்பாம்பு ஒன்று பன்றியை விழுங்குவதைக் கண்டால், மான் குட்டி என்ன செய்ய இயலும்?

எட்டிநின்று தான் இரையாகிவிடாமல் பார்த்துக் கொண்டும் பயந்து கொண்டும் நிற்கும். இவ்வாறு நின்றாள் டாக்டர் நர்மதை.

ராதை அங்குவந்து, ''அக்காள்! வழக்கைப் பற்றியோ வழக்கின் முடிவைப் பற்றியோ நீ எதுவும் பேசாதே'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

உள்ளே நுழைகிறான் மாலையுடன்

''ராதை''.

''என்ன அத்தான்?''

இந்த மாலை நியாயமாக டாக்டர் நர்மதாவிற்குத் தான் கிடைக்க வேண்டும்.''

"நீங்கள் எது சொல்லுகிறீர்களோ, அதுதான் நியாயம்.''

''நீதி மன்றத்திற்குள்தான் நியாயம் இல்லை. சட்டம் இருக்கிறது என்று எண்ணினேன். இங்கேயும் சட்டம் இருக்கிறது.''

இது என்ன புதிய போர்க் கொடி. டாக்டர் நர்மதை வாய் திறக்காது போனாலும் அவள் மனத்தை இறுக மூடி வைக்க முடியவில்லை.

''ராதை! நீ என்னைச் சட்டம் படிக்கும்படி வளர்த்தாய். என்னைச் சட்டத்தில் ஊற வைத்தாய். டாக்டரம்மா அவர்கள் என் சட்ட ஞானத்திற்குச் சவால் விட்டு, என் அறிவுக்குச் சாணைக் கல்லாக நின்று கூர்மைப்படுத்தினார்கள். என்னைப் படிப்பால் வளர்த்தவர்களைவிட, பணத்தாலும் அறிவுச் செறிவாலும் வளர்த்தவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவன். நான் எதை விரும்புகிறேனோ அது உயர்வாக இருக்கும் என்பதை அடிக்கடி நீ சொல்வாய். நான் எதை விரும்புகிறேனோ அது விஷமாக இருக்குமென்று டாக்டரவர்கள் சொல்லுவார்கள். அவர்களது படிப்பும் பழக்கமும் அப்படி. ஆனாலும் இனியாவது அறிவு பூர்வமாக சிந்தித்து, இதயபூர்வமாகச் செயலாற்றும்படி சொல்.''

''நீங்கள் சொல்வதை அக்காள் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.''

''கேட்டுக்கொண்டு இருக்கிறாளா? இல்லை கெடுத்துக் கொண்டு இருக்கிறாளா? ஆஸ்பத்திரியில் என்னை முத்தய்யா முன் அவமானப்படுத்தினார்கள். இன்று, வீட்டிற்கே வந்து மலர்மாலை போட்டு விட்டுப் போகிறார். டாக்டரே சாட்சிக் கூண்டில் ஏறி அஞ்சலையின் காலை விபத்துக்குள்ளாக்கியவள் அவள் கணவன் என்னும் உண்மையை மறக்காமல் சொன்னதற்கு என் நன்றியின் காணிக்கை இதே மாலை. இதனைக் கொடு.''

இதனை எதிர்க்கவும் ஏன் என்று வினவவும் ராதைக்கு அறிவு இருந்தும் அன்பு தடுத்தது. குழந்தை போல் அதனை எடுத்துக்கொண்டுபோய் டாக்டர் நர்மதையின் கையில் கொடுத்தாள். குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையாக அன்று, குரங்காட்டியிடம் அகப்பட்ட மந்தியாக விழித்தாள்; வெறித்துப் பார்த்தாள். அவமானப்படுத்துவதற்கும் எல்லைகிடையாதா? குரோதமே உருவான, தன் எண்ணமே முன்னே நிற்க வேண்டுமென்ற ஒருவரோடு தொடர்ந்து வாழவேண்டுமானால்.....''

அவள் செவிடாகிவிட வேண்டும்.

அவள் குருடாகி விட வேண்டும்.

அவளுக்கென்று தனித்த நன்மைகள் இருக்கக் கூடாது.

ஹால்பக்கம் நின்றால், ''அவள் கழுத்தில் மாலையை போடு'' என்று வக்கீல் சொல்லலாம். அவள் மறுக்கலாம். எனவே மீண்டும் போர்க்களம் ஆகலாம். பூக்களம் உதிரலாம். எனவே முன் யோசனைப்படி நர்மதையைத் தன் அறைக்குள் இழுத்துக் கொண்டு போனாள்.

இரண்டு கிளிகள் ஜோடியாகப் புறமுதுகுகாட்டிப் போகும் வெற்றியை எண்ணி விளையாட்டாகச் சிரித்துக் கொண்டிருந்தான் மணிவாசகன்.

## 16. வழக்கின் முடிவினிலே

வழக்கின் முடிவை, காரோட்டி சண்முகம் வந்து சொன்னபோது மூன்றாம் முறையாக அவள் விபத்துக்குள்ளான உணர்ச்சியைப் பெற்றாள். ஆயிரம் வரும் ஐயாயிரம் வருமென்று எண்ணியதுபோக ''எந்தவிதமான நஷ்டஈட்டுப் பணமும் கொடுக்க வேண்டியதில்லை என்ற தீர்ப்பு அவளுக்குப் பெரிய விபத்தாக இருந்தது. தீர்ப்பு வேறு நியாயம் வேறு என்பதை எளிய உள்ளம் புரிந்து புழுவாய்த் துடித்தது. தன் வாழ்க்கை மட்டுமின்றித் தன் மகளின் வருங்கால வாழ்வும் ஒடிந்து விட்டதாக நைந்தே போனாள்.

என்றோ கார் விபத்துக்குள்ளான போது அவள் கண்ணீர் வடித்தாள்.

ஆலையில் அடிபட்டபோது அவள் கண்ணீர் வடித்தாள்.

நன்றி—ஒருமனிதன் அவசியம் கைக் கொள்ள வேண்டிய கடமை; ஆனால், எவரும் எதிர்பார்க்கக் கூடாத உரிமை!

ரோசேயு

நீதிமன்றத்தின் தீர்ப்புக் கேட்டு இப்போது அழுது கொண்டிருக்கிறாள்.

இனி மகளுக்கு வாழ்வு கிடைக்காது என்னும் முடிவையும் நெருங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் படுக்கை அருகாக முதலாளி முத்தய்யா சிரித்த முகத்தோடும் சென்ட் தரும் மணத்தோடும் ஜம்மென்று நிற்கிறார். துக்கத்தைத்தொண்டைக்குள் அடைத்துக் கொண்டவளாக ''முதலாளி'' என்று பாதி மனசுடன் பழகிய பாசத்தால் கைகூப்பினாள்.

''அஞ்சலை! நீதியின் தீர்ப்பு உனக்கு எதிராகப் போய் விட்டது. இதற்கு முன்பு சண்முகம் விபத்தை ஏற்படுத்திய போது அதற்காக நான் பத்தாயிரம் தருவதாக வந்தேன். அவனும் மறுத்தான்; நீயும் வாங்க மறுத்தாய். இன்று நான் பணம் கொடுக்க வருவது உங்களுக்காக இல்லை. சின்னஞ்சிறுசு கனகாம்பரம். அவள் வாழட்டும் என்பதற்காக நான் பணம் தருகிறேன். இருவரும் இங்கு இருக்கிறீர்கள். என்ன சொல்லுகிறீர்கள்?

முதலாளித்துவம் என்பது என்றுமே கேள்விக்குறிதான். நல்லது செய்வாரா? அல்லது செய்யநினைப்பாரா?

அந்த ஏழைகள் இப்போது கோழைகளாக இருந்தார்கள்.

''முதலாளி! அன்றைக்கு நான் இருந்த நிலைமை வேறு. இது நீதி தராத பணம். ஆனால் நல்ல செயலுக்கு உரிய பணம். நான் வாங்கிக்கொள்கிறேன் முதலாளி.''

''புத்திசாலி! சண்முகம் நீ என்னப்பா சொல்லுகிறாய்?''

''நான் கஷ்டப்பட்டவன். வேலைக்கு அலைந்தவன்.''

''கஷ்டத்தை நீயாக வரவழைத்துக் கொண்டாய்.





வேலைக்காரன் மூடனாக இருக்கக்கூடாது. முதலாளி கஞ்சகக்கூடாது. கார்னாக இருக்கக்கூடாது. விபத்துக்காக என் நெஞ்சம் பதறிப் பணஉதவி செய்தேன். அவமானப்படுத்தப் பட்டேன். இன்றும் அவமானம் செய்யும் வாய்ப்பைத் தந்திருக்கிறேன்.

''இல்லீங்க. உங்கள் உதவியை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.''

''நீதியும் நீதிமன்றமும் தராத காரியத்தை யாருக்கும் பயந்து நான் செய்யவில்லை. இனியும் உன் குடும்பம் துன்பமடையக் கூடாது. பொன்னுக்குப் பையனைப் பார்த்து விட்டாயா?''

''பார்த்தாச்சு''

''கல்யாணத்திற்கு எனக்குப் பத்திரிகை கொடு. இல்லை தகவல் கொடு.''

மறுகணம் அஞ்சலை கையில் ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்களை வைத்துவிட்டு அவர் புன்சிரிப்புடன் மறைந்தார். நெல்லிலிருந்து உமியும் துணியிலிருந்து அழுக்கும், நீங்கியது போல தம்மீதுள்ள குரோதம் அந்தக் குடும்பத்திலிருந்து நீங்கிவிட்ட திருப்தியில் அவர் போய்க் கொண்டிருந்தார். பாவ-புண்ணியங்களை அல்லது இகழ்ச்சி-புகழ்ச்சிகளை அவர் பணத்தை அளவாகக்கொண்டு கணக்குத் தீர்க்கும் வழியை அறிந்தவர்.

அவர் கணக்குத் தீர்ந்தது.

ஆனால் அந்தப் பணம் யார் கணக்கைத் தீர்ப்பதற்கு வெடி வைக்கப் போகிறதோ!

அன்பு பிறக்கவும் அமைதி உண்டாகவும் நல்கிய பணத்திலிருந்து அம்பொன்று பிறக்கும்; அது டாக்டர் நர்மதையின் இதயமாம் மன மலரை உதிர்த்து வைக்குமென்று யார் அறிவார்!

## 17. சட்டப்பூனையும் விஷக்கிளியும்

டாக்டர் நர்மதை குழம்பிய மனத்தைத் தெளிவு செய்து கொண்டாள். ''மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' பிறரைத்திருத்தாமல் தானாகத் திருந்துவது மிகப் பெரிய நாகரிகம் என்பதனை முடிவு கட்டினாள். தெய்வம் ''சித்தமிசை குடிகொண்ட அறிவாகவும் இருக்கும்; சித்தமிசை குடி கொண்ட அன்பாகவும் இருக்கும்''. தன் சித்தத்திற்குள் அறிவுக்கும் அன்புக்கும் போட்டி நிகழாமல் விட்டுக் கொடுக்கும் வித்தையை அவள் வளர்க்கக் கற்றுக் கொண்டால், அகத்துக்குள் வீசிய புயலை அவள் மறைத்து முகத்திலே புன்முறுவலுடன் வீட்டிற்குள் வாழ ஆரம்பித்தாள்.

கணவனுடன் எந்தக் கருத்திலும் மாறுபாடு கொள்வது இல்லை; இதனை மனமாரக் கடைப்பிடிக்கவும் எண்ணினாள். கணவனிடம் வலிந்து பேசி அவன் மனத்திற்குள் இருக்கும் ஆணவத்தைத் தன் ஸ்பரிசத்தால்—தன் சிரிப்பால்—தன் செயலால் மாற்றிக் கரைத்து அன்பைப் பெருக்கவும் செயற்பட்டாள்.

பழகிய யானை போல் டாக்டர் நர்மதா மாறி விட்டாலும், வக்கீல் உள்ளத்துள் பசுமையாக ஒரு விஷ வித்து ஒளிந்து கிடந்தது. ''என்னை அவமானப்படுத்திய இந்த நிகழ்ச்சி என் நெஞ்சத்திலிருந்து மறையாது; இது ஆறாத புண். மாறாத ரணம். பழிவாங்குவேன். பழிக்குப் பழி வாங்குவேன்'' என்ற விஷ வித்து கம்பும் கிளையுமாக வளர்வதற்கு ஈரப் பசையை எதிர்பார்த்துக் கொண்டு, தூண்டில் மிதப்பு சும்மா கிடக்குமே அவ்வாறு கிடந்தது. கணவனாகத் தலை நிமிர்ந்து மனைவியுடன் கூடிக் குலாவிப் பேசி மகிழ்ந்தாலும் மனத்தின் மேல் தளத்தில் தூண்டில் மிதப்பாகக் கிடந்த அந்தச் சபதம் அவன் நெஞ்சையும் நினைவையும் விட்டு மறையவில்லை!

மாதங்கள் ஓடின. மனம் மாறியது. டாக்டருக்கு மனம் கனத்தது.

அந்த விஷ வித்துக்கு உயிரூட்டுவது போல பழக்கூடையும் கையுமாகக் கனகாம்பரம் வந்து கொண்டிருந்தாள்.

அந்த வீட்டிற்குள் அதற்கு முன்பு அவள் நுழைந்தது இல்லை. ஒரு பகுதி டாக்டர் நர்மதையின் வீட்டுப் பகுதியாகவும், ஒரு பகுதி வக்கீல் மணிவாசகன் வீட்டுப் பகுதியாகவும் அமைந்திருந்தன. அவளுக்குப் படிப்பு வாசனை இல்லாத காரணத்தால், கூடையுடன் வந்த கனகாம்பரம் எங்கு நுழைவது எனத் தெரியாது திணறினாள்.

வாசலில் இருபக்கமும் நாற்காலிகள், பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. டாக்டர் அறைக்குள் இருந்தவள் நோயாளிகள் வர வேண்டிய நேரத்தில் ஏதோ நடமாட்டம் இருக்கிறதே என்று எண்ணி எட்டிப் பார்த்தாள்.

வந்து நிற்பவள் கனகாம்பரம்?

''இதெல்லாம் என்ன?''

''மாம்பழம்.'' என்று பழங்களை பெஞ்சியில் எடுத்து வைத்தாள்.

''இத்தனை பழங்களை யார் கொண்டு வரச் சொன்னது?''

''பதினைஞ்சு நாளைக்கு முன்னாலே விஷம் குடித்துச் சாகக் கிடந்த என்னைக் காப்பாற்றினீர்கள்''.

''அதற்காக?......''

''என் நன்றியைத் தெரிவிச்சுட்டுப்போக''

''ஒருபழம் போதும். மற்றதை கூடைக்குள் எடுத்து வை''.

''இல்லீங்க....''

''ஆமாம். நான் வக்கீலய்யாவிடம்''.

உன்வழக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர் வருகிற நேரம் நீ இத்தனை பழங்கள்வாங்கி வந்ததுமிகவும் தப்பு! அத்தனையும் எடுத்துக் கூடைக்குள் போட்டு உன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போ''

ராதை அங்கு வந்தாள்.

''யாரக்கா உனது மாஜி நோயாளியா'' என்று கேட்டாள்.

''பதினைந்து நாட்களுக்கு முன் விஷம் குடித்து என் நர்சிங்ஹோமில் அனுமதிக்கப் பட்டிருந்த......''

''கனகாம்பரம் இவள் தானா? இத்தனை சிறிய வயதில் தற்கொலை செய்ய எப்படித்தான் உனக்கு மனம் துணிந்தது? உயிரை மாய்த்துக் கொள்ளும் பிரச்சினை பற்றி அக்காள் சொன்னாள்''

ராதையிடம் சொல்லுவதா வேண்டாமா என்று தயங்கினாள்.

''கனகாம்பரம்! இவளிடம் சொன்னால் உனக்கு இரட்டை லாபம்! வக்கீல் ஐயா இவள் சொன்னால் உன் வழக்கை நன்கு யோசிப்பார்!''

''என்னத்தை சொல்லறது? எம்மனசுக்குப் புடிக்காத ஒருத்தனைக் கூட்டிவந்து கட்டு தாலியின்னு சொன்னாங்கள்; என் அப்பாவும் அம்மாவும் பிடிவாதம் புடிச்சாங்க. எனக்கு இஷ்டமில்லை. வற்புறுத்தினாங்க. மூட்டைப் பூச்சி மருந்தை வாங்கித் தின்னிட்டேன்.''

''அப்பாவி! எத்தனை அழகா இருக்கே! உன் உயிரைக் கொல்லும் துணிச்சல் எப்படி வந்தது?''

''அதைக் காப்பாத்தினது நம்ம டாக்டரம்மா. அதுக்காக நன்றி சொல்லிவிட்டுப் போகலாமுன்னு வந்திட்டேன்''

வக்கீல் மணிவாசகன் தன் காரில் வந்து இறங்கியவன், ''அடடே! எனக்கு மாம்பழமுன்னா உயிர்! டாக்டரம்மாவுக்கு என் ருசி கூடத் தெரிய ஆரம்பிச்சுருக்கு; என்ன விலை சொல்லுகிறாள் மாம்பழக்காரி!'' என்று கேட்டான் மணிவாசகன்.

''அவள் மாம்பழக்காரி இல்லை. உங்களிடம் ஒரு விஷயம் இரண்டு நாளைக்கு முன்பு சொன்னேனே! நினைவு இல்லை விஷங்குடித்த ஒரு பெண் .... உங்களிடம் வழக்கைச் சொல்ல வருவாள் என்றேனே?''

''எனக்கு வழக்குக் கிடைக்காதென்று நீயே வழக்காளிகளைப் பிடிக்கிறாயா?'' என்று உறுமினான்.

''அவள் ஏழை! அவளுக்குக் கருணை காட்டுங்கள் என்பதற்காக நானே வரச் சொன்னேன்.''

மீண்டும் சாந்தம் தவழ்ந்தது.

''யாரோ கனகாம்பரம் விஷம் சாப்பிட்டு உன் நர்சிங்ஹோமுக்கு வந்தாள். அவளை நீ காப்பாற்றினே! அந்த விஷம் இவள் தானா?''

''இவளைப் பார்த்தால் அமிர்தம்மாதிரி இருக்கிறாள்?'' என்று சான்றிதழ் தந்தாள் நர்மதை.

''நர்மதா. அமிர்தம் உரு வெடுத்தால் உன்னை மாதிரி வடிவத்தில் இருக்கும். விஷம் உருவெடுத்தால் என்னை மாதிரி இருக்குமென்று இந்த விநாடி வரை நினைத்தேன். இப்போது மாற்றிக் கொள்ளுகிறேன். விஷம் கனகாம்பரம் மாதிரியும் வடிவெடுக்குமென்று தெரிய வருகிறது. இவளுடைய 'கேஸ்' என்ன?'' என்றவன் கைக்குள் அடங்கக் கூடிய இரண்டு மாம்பழத்தை எடுத்துக் கொண்டான்.

நல்லது செய்யப்போகிறோம் என்று நம்பிய டாக்டர் நர்மதை நெஞ்சத்துக்குள் இனிமை கொப்புளித்தது. இரக்கம் வேர் விட்டது. கருணை அருவியாகக் கொட்டிற்று.

''அத்தான்! இவள் வழக்கு விசித்திரமானது. இவள் விஷம் அருந்தியதும் உடனே நர்சிங்ஹோமுக்குள் அனுமதிக்கப் பட்டாள். அப்புறம்....''

''நானே அவள் வழக்கைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வா .....உள்ளே....''

இந்த வார்த்தையை நம்பி வழக்குரைஞர் அறைக்குள் நர்மதை நுழைந்தாள்.

''உன்னை யார் வரச் சொன்னது. வழக்காளியை உள்ளே அனுப்பு, நீ போ வெளியே?'' என்று கர்ஜனை செய்தான். குரலில் எடுபிடி கெடுபிடி கடுமையாகக் குதிபோட்டன.

''இதோ'' என்று பயந்து நடுங்கிக் கொண்டு வெளியே வந்தவள் ''வக்கீலய்யா முன் கோபக்காரர்; உன் வழக்கின் விவரத்தை நிதானமாகச் சொல்!'' என்று நயமாகக் கூறி அனுப்பி வைத்தாள்.

சட்டப்பூனையின் கூண்டுக்குள், விஷக்கிளி நுழைவது போல கனகாம்பரம் நுழைந்து கொண்டிருந்தாள்.

அதே சமயம் ''அக்கா.. அக்கா, அடுப்பில் பால் பொங்கி விடப் போகிறது. டெலிபோனில் உங்களை 'பாபு' கூப்பிடுகிறான் என்று அவசரப் படுத்தினாள் ராதா.

டாக்டர் நர்மதை நல்லதைச் செய்துவிட்ட மகிழ்ச்சியில் 'டிரங்கால்' பேச ஓடினாள்.

வக்கீல் மணிவாசகன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்தவன் மானாக மிரட்சி பெற்றும் தேனாகத் திரண்டு நிற்கும் மாம்பழக்காரி கனகாம்பரத்தை நோக்கினான்.

''இப்படி வந்து எதிர் நாற்காலியில் உட்கார்'',

''பரவாயில்லீங்க! நிற்கறேன்.''

''நீ மாம்பழக்காரி இல்லே நிற்பதற்கு! வழக்கைச் சொல்ல வந்தவள். கை ரேகை பார்ப்பவர்கள் காத தூரத்தில் நிற்கிற மாதிரி நிற்காதே. காதும் காதும் வைத்த மாதிரி சொல்....''

பயந்து கொண்டு எதிர் நாற்காலியின் விளிம்பில் அவள் உட்கார்ந்துசொன்னாள். டாக்டர் எச்சரிக்கை செய்திருந்த காரணத்தால் தன் தாய் அஞ்சலை தகப்பன் சண்முகம் என்பதை அவள் பேச்சு எடுக்கவில்லை. டாக்டரின் விழிகளைச் சந்திக்க அவள் விழிகள் நடுங்கின. வாய் குளறியது.

''கேட்கிற கேள்விக்கு பதில் சொல்''

''ஆகட்டுமுங்க''

''உன்னைப் பார்த்தா.... உனக்கு வயது .. இருபது..''

''போன மாசம் முடிந்தது!''

''இருபது வயசு மங்கை. கருங்கூந்தல். கருவிழி கண்மை. எல்லாம் கருப்பு. முகம் நிறைந்த விழி; விழி நிறைய மர்மம். கனகாம்பரம்.''

'ஐயாவுக்கு பீசு....தர.''

பேசித்தான் நான் பணம்

வாங்குவேன். ஆனா உன் முகத்தைப் பார்த்தா எனக்குப் பேசத் தோன்றவில்லை. உருவத்தைப் பார்த்தால் என் சர்வமே நடுங்குகிறது. கண்ணைப் பார்த்தா விண்ணைப் பார்க்கும் கவர்ச்சி இருக்குது. உன்னைப் பார்த்தா?....

பயந்து "வக்கில் சார்.... என் உயிரை அம்மா காப்பாத்திஞங்க. என் உடலுக்கு எந்த விஞடியும் அம்மா அப்பாவால ஆபத்து வரும்."

"வருமென்று கவலைப் படாதே. நீ மேஜர். உன் தாய் தந்தை பிடியிலிருந்து நீ விடுபடனும். இது தானே உன் எண்ணம்?"

"ஆமாங்க"

"சரி. நான் இருக்கிறேன். வழக்கை என்னிடத்தில் கவலைப் படாமல் பெரிய பெரிய முதலாளிகளே கொடுத்த பிறகு போய்ச் சேருவாங்க. நீ போய்ச் சேர்....."

"அப்புறம்?"

"நீ காரோட்டி சண்முகம் மகள். அஞ்சலையின் மகள். அதையேன் மறைத்தாய்?"

"அது.. அது.. அது.... டாக்டரம்மாதான் மறைக்கும்படி சொன்னுங்க...... உதவி செய்ய மாட்டீங்க அவங்க உங்க விரோதியின்னு சொன்னுங்க...."

"அவங்க என் விரோதி இல்லையே. கனகாம்பரம் நீ என் விரோதி இல்லை. நான் இருக்கிறேன். கவலையை விட்டுவிட்டுப் போ...."

பயம் நீங்கிய தெளிவோடு பச்சைக் கிளியாக வெளியே வந்து கொண்டிருந்தாள்.

ஈரப்பசையை எதிர் பார்த்து மிதப்பாக இருந்த தூண்டிலுக்குள் கனம் பிடித்தது; ஈரம் பிடித்தது. அந்த மிதப்பு அடிமனத்திற்குள் ஆழ்ந்து கொண்டிருந்தது.

'பாபு' வுடன் பேசிக் களித்த நர்மதை கனகாம்பரத்திற்காகத் தன் அறை வாசலில் நின்ருள்.

"ஐயா என்ன சொன்னர்?"

"என் கையில் வழக்கை ஒப்படைத்தால் கவலையை மறந்து விடலாம். 'நான் இருக்கேன் கவலையை விடு' என்ருர்."

**விசைப்படகு இயந்திர உற்பத்திச் சாலை.**

தமிழ்நாட்டில் மீனளத் தொழிலை நவீனப்படுத்துவதன் மூலமே மீனவர்களின் வாழ்வில் நன்மைகள் பல சேர்க்க முடியும் - அவர்கள் வாழ்வில் வளம் பெருக்க முடியும் என்பதால், இந்தத் தொழிலை வேகமாக வளர்த்துச் செல்வதற்குத் தேவையான - தகுந்த அடித்தளம் இம்மாநிலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இதன் தொடர்பாக, விசைப் படகுகளுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யச் சென்னை அருகே எண்ணூரில் 3 கோடி ரூபாயில் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. தமிழகத் தொழில் முதலீட்டு நிறுவனமான யுட்கோ இதை அமைக்கஇருக்கிறது.

"இனிமேல் நீ கவலைப் படவேண்டாம். வழக்காடி ஜெயம் பெற்றுத் தருவார்."

கனகாம்பரம் பரமதிருப்தியுடன் போய்க் கொண்டிருந்தாள். அவள் வாழ்க்கை செவ்வையாக நடக்குமென்னும் ஆனந்தத்துடன் டாக்டர் நர்மதா தனதறைக்குள் போய்க் கொண்டிருந்தாள்.

"அத்தானைச் சாப்பிடக் கூப்பிடுங்கள் அக்கா. பாபு என்ன கேட்டான்? போன் பேசினீர்களே!"

"இந்த வருடம் நீ பாஸ் செய்து விடுவாயா? அதுதான் அவன் கவலையாம்?"

"பாஸ் செய்வேன் என்று சொல்லி யிருப்பாய்"

"ஆமாம்...." என்றவள் மணிவாசகன் அறைக்குள் நுழைந்து "அந்தப் பெண் கனகாம்பரம் தெம்போடு போகிருள். அவள் வழக்குப் பிழைக்கும்" என்று நிறுத்திஞள்.

"அவள் பிழைத்துக் கொள்வாள். என்னிடம் ஒரு உண்மையை நீ மறைத்து விட்டாய்."

"என்ன?"

"அவள் அஞ்சலையின் மகள் என்று ஏன் சொல்லவில்லை?"

நெருப்பை மிதித்தது போல இருந்தது.

"தவறு தான்? மன்னித்து விடுங்கள்".

"டாக்டர் உங்கள் தொழிலில் நோயாளியிடம் கேட்டும் கேளாமலும் தெரிய வேண்டிய வழிகள் உண்டு. வக்கில் தொழிலில்...."

"தொழில் சம்பந்தமாக நமக்குள் விவாதம் வேண்டாம். நான் செய்தது தவறு.

"அதை நினைத்துக் கொண்டிருந்தால் போதும்! வக்கீலை ஏமாற்ற நினைப்பவர்கள் ஏமாறுவார்கள்."

"நீங்கள் சாப்பிட வாருங்கள்."

"இந்த இரண்டு மாம்பழங்களைச் சாப்பிடப் போகிறேன். நீ சாப்பிட்டுவிட்டு உன் வேலையைக் கவனிக்கலாம்."

"சரி...."

டாக்டர் நர்மதை பயந்தபடியே வெளியே வந்தாள்.

ராதை, அத்தானை நான் சமாதானப் படுத்துகிறேன் நீ போ" என்ருள்.

"அத்தான்! உங்களுக்குப் பிடித்தமான பால்கறி! சிப்ஸ்....முருங்கைக்காய் சாம்பார்."

"உனக்காக என் எண்ணத்தை மாற்றுகிறேன்"

"அக்காளை அழவைப்பதில் உங்களுக்கு என்ன குஷி?"

"என்னை ஏமாற்றுவதில் அவளுக்கு ஏன் அக்கறை?"

இனி பேசினல் ஆபத்து என்று ராதை நகர்ந்தாள். மணமணத்துக் கொண்டிருக்கும் சாப்பாட்டு அறைக்குள் மணிவாசகன் புகுந்தான். மூவரும் உண்ணத் தொடங்கினர்கள். மௌனமாக இருந்தது அறை.

ஒவ்வொருத்தர் மூளைக்குள் ஒவ்வொரு யோசனை; ஒவ்வொருவிதக் கற்பனை.

தான் தேர்வு பெற்றுவிடுவதாக ராதை நினைக்கிருள்.

தான் தக்க உதவி செய்து விட்டதாக டாக்டர் நினைக்கிருள்.

நர்மதைக்குத் தக்க பாடம் சொல்லிவைக்கக் கனகாம்பரத்தைப் பயன்படுத்த வக்கீல் நினைக்கிருர்.

உணவின் ருசியை விட உள்ளத்தின் ருசிக்குத் தானே மதிப்பு!

(வளரும்)

# மாவட்டங்களிலிருந்து...

## மதுரை மாவட்டம்

மதுரை கிழக்கு: கிராம வளர்ச்சி அளவுத் திட்டத்தின் கீழ் மண் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் செப்டம்பர்த் திங்களில் ரூ. 35,101 வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வூராட்சி ஒன்றியப்பகுதியில் இம்மாதத்தில் 13 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

மதுரை மேற்கு: இவ்வொன்றியத்திலுள்ள பரவை பேரூராட்சி சத்தியமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள சமயநல்லூர் ஆரம்பச் சுகாதார குடும்பநல மருத்துவ மனைக் குடியிருப்பு இல்லங்களை 19.7.73-ல் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் திறந்துவைத்துள்ளார்.

உசிலம்பட்டி: இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள தச்சு உற்பத்தி நிலையத்தில் நடப்பு மாதம் ரூ. 1,773 பெறுமான தளவாடச்சாமான்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. சிறுசேமிப்புத்திட்டத்தின் கீழ் இம்மாதம் ரூ. 1,730 வசூல் செய்யப்பட்டுள்ளது.

சேடபட்டி: வெள்ளிவிழாச் சீரூர் கிராமமான குப்பல் நத்தத்திற்கு இணைப்புச்சாலை 1. கி. மீ. தூரம் செப்பனிடப் பட்டுள்ளது. சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 1,280 வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த அணியினர் 4 உறிஞ்சு குழிகள் அமைத்துள்ளனர்.

கள்ளிக்குடி: சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5,500 வசூல் செய்யப்பட்டுள்ளது. குடும்பநலத்திட்டத்தின் கீழ் 8 தாய்மார்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தே. கல்லுப்பட்டி: கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ரூ. 1,231 செலவு செய்து இணைப்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன. ரூ. 4,223 செலவில் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

குசிலியம்பாறை: இவ்வூராட்சி ஒன்றியத்தில் கடந்த 23.8.73ம் நாள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் மனுநீதித்திட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஏறத்தாழ 5500 விண்ணப்பங்களுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. 44,000 பேர்களுக்குப் பட்டாவும், பாஸ் புத்தகங்களும் வழங்கப்பட்டன. இலவசமாகத் தொழிற் கருவிகளும், சீருடைகளும், மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தாதநாயக்கன் பட்டி ஊராட்சியைச் சேர்ந்த தெற்கு தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் புதிய ஆரம்பப் பள்ளித் துவக்க விழா செப்டம்பர் 22ம் நாள் நடைபெற்றது.

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த சூலைத் திங்கள் 2-ம் நாள் தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம் விருதுநகர் அரசாங்க மருத்துவமனையில் தொடங்கி 42 நாட்கள் நடந்தன. சூலை 17-ம் தேதி சிவகெங்கை மருத்துவ மனையில் துவங்கி 42 நாட்கள் நடைபெற்றது. ஆகஸ்ட் 17-ம் தேதியன்று தொடங்கி இராமநாதபுரம் தாய்-சேய் அரசாங்க மருத்துவ மனையில் 42 நாட்கள்வரை நடைபெற்று . அண்மையில் முடிவுற்றது. ஆரம்பச் சுகாதார நிலையத்துக்கு 35 வீதம் 32 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் சேர்ந்து மொத்தம் 1120 அறுவைச் சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்பது குறியீடு. ஆனால், இப்போது நடைபெற்றிருப்பதோ 1300 அறுவைச் சிகிச்சைகள். அதாவது குறியீட்டிற்கு மேல் 180 அறுவைச் சிகிச்சைகள் கூடுதலாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்து முடிந்துள்ள இந்த அறுவைச் சிகிச்சை முகாம்கள் மிக முக்கியமானவை என்று கருதப்படுகின்றன. இத்தகைய ஆறு வார முகாம்கள் இம்மாவட்டத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவை. இங்கு மூன்று இடங்களில் முகாம்கள் நடைபெற்றன. முகாமுக்கு 6 வாரம் வீதம் மூன்று முகாம்களுக்கும் சேர்த்து 18 வாரங்கள் எடுத்திருக்கலாம். அவ்வாறில்லாமல் 12 வாரக் காலத்தில் மூன்று முகாம்களும் முடியும் விதமாக முகாம் காலங்கள் ஒன்றுக்கொன்று இணைத்து நடத்தப்பட்டுள்ளன.

வெளி மாவட்டத்திலிருந்து வந்த ஆறு வண்டிகளைக் கொண்டே மூன்று முகாம்களையும் வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பதும், குறைந்த செலவில் நிறைந்த சாதனையாக 1300 அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கோயில் புலிக்குத்தி என்னும் கிராமத்தில் தகுதி வாய்ந்த பெற்றோர்கள் நூற்றுக்கு நூறு பேரும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை மேற்கொண்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் இப்படி ஒரு சாதனை இப்போதுதான் நடந்திருக்கிறது.

## தஞ்சை மாவட்டம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒன்றியங்கள் 15.9.73 முதல் 21.9.73 வரை அறிஞர் அண்ணா பிறந்த வாரத்தைச்

சீரணி வாரமாகச் சிறப்பாகக் கொண்டாடின.

20-9-73 அன்று தஞ்சை மாவட்டச் சீரணி, தஞ்சைக் கோட்டத்திலுள்ள ஐந்து ஒன்றியங்களைச் சேர்ந்த சீரணியர்களுக்கு விளையாட்டுப் பந்தயங்களும், மாணவர்களுக்குச் சீரணிபற்றிய பேச்சுப் போட்டியும் நடத்தின. காலையில் மேலவெளி அரிசன காலனியில் துப்புரவுப் பணிநடந்தது. பேச்சுப்போட்டியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சீரணியின் குறிக்கோள்களையும் இதுவரையில் மாவட்டத்தில் செய்யப்பட்ட பல்வேறு பணிகளைப்பற்றியும் பலர் பேசினர்கள்.

## செங்கை மாவட்டம்

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மூன்று குழந்தைகள் காப்பகத்தில் 1-9-73 அன்று மதிய உணவுத் துவக்க விழா நடைபெற்றது. முத்தியால்பேட்டை குழந்தைகள் காப்பகத்தில் மதிய உணவுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர் துவக்கி வைத்தார். குழந்தைகள் 50 பேருக்கும், பாலூட்டும் தாய்மார்கள் 20 பேருக்கும், மதிய உணவு வழங்கப்பட்டது. ஆம்பாக்கம் குழந்தைகள் காப்பகத்தில் 50 குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் 20 பேர்களுக்கும் வேடல் குழந்தைகள் காப்பகத்தில் 70 பேருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ''மாவட்ட விளம்பர ஒத்துழைப்புக்குழு' நிறுவப்பட்டுள்ளது. மாவட்டத்தில் விளம்பரப் பணிக்காக ''விளம்பர ஒத்துழைப்புக்குழு'' மாத நிகழ்ச்சிகளை வரையறுக்கும். இந்த விளம்பர ஒத்துழைப்புக்குழு செய்தி-ஒலி பரப்புத்துறையின் மூலமாகவும், மாநில விளம்பரத் துறை மூலமாகவும் செயல்படும்.


## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : **திரு பழனிவேல் ராஜன்**, பி. எஸ்ஸி., பி. எல்., எம். எல். ஏ.

உபதலைவர் : **திரு பி. கஸ்தூரி பிள்ளை.**

பொருளாளர் : **திரு என். பழனிசாமி**, எம். ஏ.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ... ... | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | | ரூ. 10,12,30,217 |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

**பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.**
இணைப்பதிவாளர்—செயலாளர்.

# கோழி வளர்ப்பு




**கோ**ழி வளர்ப்பு ஓர் சிறந்த துணைத் தொழிலாகும். அதைக் கருத்துடன் மேற்கொள்வோர் தக்க ஊதியம் பெறுவதுடன், குழந்தைகளுக்கும், தாய்மார் களுக்கும் அவசியமாகத் தேவைப்படும் சத்துணவாகிய முட்டை, இறைச்சி ஆகியவற் றின் உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் நற்பணியில் பங்கு பெறும் வாய்ப்பினைப் பெறுகி றார்கள். எத் தொழிலுக்கும் ஏற்பட்டுள்ளதைப் போல, கோழி வளர்ப்பிலும் சில விதி முறைகள் உண்டு. அவற்றை நன்கறிந்து நல்ல முறையில் பேணி வந்தால், கோழி வளர்ப்பு நல்ல பயனைத் தருகிறது. கோழிகளுக்கு வசதியான குடியிருப்பு, தரமான தீவனம், பாங்கான பராமரிப்பு, நோய் அற்ற வாழ்வு ஆகியவைகளை அளித்து, அதிகப் பயன் பெறு வதே கோழி வளர்ப்பு முறை களின் நோக்கமாகும்.

**கோழி இனங்கள் :**

1. வெள்ளைக் கோழிகள்.
2. சிவப்பு போந்தாக் கோழிகள்.
3. கலப்பு இன வகைகள்.

மேற்கூறிய 3 இனங்களில், வெள்ளைக் கோழிகள் அதிக முட்டைகள் இடும் திறன் கொண்டவை. சிவப்புக் கோழி கள், இறைச்சி வகையைச் சேர்ந்தவையாகும். கலப்பு இனத்தில் பல வகைகள் உண்டு. பொதுவாக இவை யாவுமே அதிக முட்டைகளும், அதிக இறைச்சியையும் கொடுக் கும் தன்மையுடையவை. ஒவ் வொரு இனத்திலும், நல்ல முட்டைகள் இடும் தரமான கோழிகளும், அல்லாத மற்ற கோழிகளும் உண்டு. இத்தர மறிந்து நல்ல கோழிகளை வளர்ப்பதே இலாபகரமான தாக இருக்கும்.

**முட்டையிடும் தன்மையுள்ள தரமான கோழிகளின் தன்மைகள் :**

அ. நல்ல வளர்ச்சி.

ஆ. உடல் நலம்.

இ. சுறுசுறுப்பான தன்மை.

ஈ. பளபளப்பான கண்கள்.

உ. பெரியசிவந்தகொண்டை

ஊ. பரந்த மார்பு.

எ. ஆழ்ந்த உடலமைப்பு.

ஏ. 3 விரல்கள் அகலத்தில் உள்ள பின்புற அமைப்பு.

ஐ. மிருதுவான இறகுகள்.

ஒ. நடுத்தர எடை (0.5 முதல் 2 கிலோ.)

மேற்கூறிய தன்மைகளைச் சிறிது பழக்கத்திலேயே தெரிந்து கொள்ளலாம். இத் தன்மைகள் கொண்ட நல்ல கோழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு வசதியான வீடு அமைக்க வேண்டும்.

**வசதியான வீடு (டீப் லிட்டர் —ஆழ்குப்பை)**

1. நல்ல காற்றோட்டம்.
2. ஈரம் கசியாத அமைப்பு.
3. பூனை, நரி, நாய் இவை களிடமிருந்து நல்ல பாது காப்பு.



4. கோழிக்கு 2.5 சதுர அடி வீதம் இட வசதி.

5. தரமான ஆழ் குப்பை (மரத் தூள், உமி, உலர்ந்த சருகு).

6. தக்க தீவனம்.

7. தேவையான தண்ணீர்.

மேற்கூறிய ஏழு வசதிகளும் கொண்டதாகக் கோழி வீடு இருக்க வேண்டும்.

**குறைந்த செலவில் கோழி வீடு**

கோழிக்கு 2.5 சதுர அடி வீதம், 40 கோழிகள் வளர்ப்பதற்கு 100 சதுர அடி கொண்டதாகக் கோழி வீடு இருக்க வேண்டும்.

அதாவது 10 அடி சதுரமாகக் கட்ட வேண்டும். நீண்டசதுர அமைப்பு விரும்பத் தக்கது. மேற்கூறிய அளவில் கோழிவீடு அமைக்கக் கீழேகண்ட அட்டவணையில் கண்டவாறு செலவு ஆகும்.

| | | | | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. தென்னை ஓலை 200 | ... | ... | ... | 30.00 |
| 2. மூங்கில் கட்டு 4×25 | ... | ... | ... | 32.00 |
| 3. கால்கள் (சவுக்கு) 4 | | ... | ... | 8.00 |
| 4. கயிறு பாலை 4 | ... | ... | ... | 8.00 |
| 5. கம்பி வலை (3 அடி அகலம் × 40 அடி நீளம்) | | | ... | 20.00 |
| 6. 6 அடி மூங்கில் குடைந்த தீனித் தொட்டி 2 | | | ... | 5.00 |
| 7. மண் தண்ணீர்த் தொட்டி 4 | | ... | ... | 2.00 |
| 8. முட்டையிடப் பானைகள் 4 | | ... | ... | 5.00 |
| 9. கூலி ... | ... | ... | ... | 15.00 |
| | | மொத்தம் | ... | 125.00 |

தண்ணீர் தேங்காத மேடான இடத்தில் 10 அடிக்கு 10 அடிக் கடைக்கால் எடுத்து, மண் சுவர் 2 அடி உயரத்திற்கு எழுப்பிக் கால்களை நட்டு, கூரை வேய்ந்து, கம்பி வலை அடைத்து, வீட்டை அமைக்க வேண்டும். தரையைக் கெட்டித்து, மெழுகி, 6 அங்குல உயரத்திற்கு உமி அல்லது மரத் தூளை இட வேண்டும். தீனி, தண்ணீர் வசதிகளை அமைத்து, முட்டையிடப் பானைகளையும் சுவர் ஓரமாக அமைக்க வேண்டும். உமி மழையில் நனையாமல் இருக்கக் கூரையைத் தாழ்வாகவும், சரிவாகவும் அமைக்க வேண்டும்.

**கோழி வீட்டில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை**

1. ஆழ்குப்பை எக்காரணம் கொண்டும் ஈரமாக இருக்கக் கூடாது.

2. 20 கோழிக்கு ஒரு 6 அடி மூங்கில் தீனித் தொட்டி இருக்க வேண்டும்.

3. 10 கோழிக்கு ஒரு தண்ணீர்த் தொட்டி வேண்டும்.

4. 10 கோழிக்கு ஒரு முட்டையிடும் பெட்டி அல்லது பானை வேண்டும்

5. கிளிஞ்சல் பொடி எப்பொழுதும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

**தரமான தீவனம்**

கோழிகள், அதிக முட்டைகள் இட, தரமான கலப்புத் தீவனம் அளிக்க வேண்டும். இத் தீவனம் அரசு நிறுவனங்களிலும், தனிப்பட்ட நிறுவனங்களிலும் தயாரித்து விற்கப்படுகிறது. கோழிகளுக்கு 24 மணி நேரமும், தீனி கிடைப்பதற்கு ஏற்ற வசதி செய்ய வேண்டும். கோழி ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 100 கிராம் வீதம் கணக்கிட்டுத் தீனியைத் தொட்டியில் விரவ வேண்டும்.

கோழிகள் தீனியை இரைத்து வீணாக்கக் கூடுமாதலால், ஒரு நாளைக்கு வேண்டிய தீனியை மட்டுமே இட வேண்டும். கோழி வளர்ப்பில் 75 சதம் செலவு தீனிக்குத்தான் ஆகிறது! ஆகவே அதை வீணாக்காமல் உபயோகப் படுத்த வேண்டும். எலிகளும் தீனியை விரயமாக்குவதால், இரவில் எலி அணுகா வண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

**பராமரிப்பு**

கோழி வளர்ப்பில் இது முக்கியமானதாகும். நல்ல கோழிகளை வசதியான வீட்டில் வைத்துத் தரமான தீனி கொடுத்தாலும் வளமான பராமரிப்பு இன்றேல், தக்க பயனளிக்காது. காலையிலிருந்து மாலை வரை அவ்வப்போது கோழிகளைக் கவனித்துப் பின் கண்டவாறு தேவையானதைச் செய்து வருவதே பராமரிப்பாகும்.

1. காலையில் கோழி வீட்டைப் பார்வையிடுதல்.

2. தண்ணீர்த் தொட்டிகளைக் கழுவி, நல்ல நீரை நிரப்புதல்.

3. தீனித் தொட்டிகளைச் சுத்தம் செய்து தீனி நிரப்புதல்.

4. ஆழ் குப்பையைக் கிளறி விடுதல்.

5. முட்டையிடும் பெட்டிகளைச் சரியாக வைத்தல்.

6. கோழிகளின் தன்மையைக் கவனித்தல்.

7. நலமற்ற கோழிகளைக் கவனித்தல்.

8. மழை, வெய்யில், காற்றுக் காலங்களில் தக்க பாதுகாப்புகளைச் செய்தல்.

9. தீவனம் வீணாகாமல் தடுத்தல்.

10. தண்ணீரில் மருந்துகள் கலப்பது.

11. வயிற்றுப் பூச்சிக்கு அவ்வப்போது மருந்து கொடுத்தல்.

12. பேன் மருந்து தெளித்தல்.

13. கோழிகள் ஒன்றை ஒன்று கொத்தாமல் தடுத்தல்.

14. முட்டை உடைப்பதைத் தடுத்தல.

15. தொற்று நோய்களைத் தடுப்பது.

16. மற்ற நோய்களுக்குச் சிகிச்சை.

இவையெல்லாம் பராமரிப்பின் கீழ் வருவதால், கோழி வளர்ப்பு இலாபகரமாக இருக்க அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

**முட்டைகள் பாதுகாப்பு**

முட்டைகள்கெடாமலிருக்கக் கோழிப் பண்ணைகளில் பின் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. மூன்று அல்லது நான்கு முறை முட்டைகளைச் சேகரிக்க வேண்டும்.

2. ஒன்றை ஒன்று ஒட்டாமல் முட்டைகளை வைக்க வேண்டும்



கோழியின் மூக்கு நுனி கத்தரிக்கப்படுதல்

# சிக்ஸ் இந்தியா கோழிப்பண்ணை

## கடலூர் சித்தூர் ரோடு, நெல்லிக்குப்பம்

முதலாண்டு நிறைவு விழா ! வெற்றிச் சாதனை !!

முதலாண்டில், 1,90,503 "ராணி ஷேவர்" பெட்டைக் கோழிக்குஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விவசாயிகளுக்குக் கோழிகள் வாங்குவதற்காகக் கடன் வழங்கிய மாநில வங்கியினருக்கும், கால்நடை வளர்ப்புத் துறையினரால் கோழிப்பண்ணைகளை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தமைக்கும் எங்களுடைய உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது எங்களிடம் 10 முதல் 16 வாரம்வரை வயதுள்ள உலகப் பிரசித்திபெற்ற உயரின "ராணி ஷேவர் ஸ்டார் கிராஸ் 288" பெட்டைக்கோழிக் குஞ்சுக்ள் முற்றிலும் நோய்த்தடுப்பு செய்யப்பட்டவை விற்பனைக்கு உள்ளன.

விலை விபரங்களுக்கு அணுகுங்கள் :
10. பீச் ரோடு, கடலூர்-1.
போன் : 18



# STANES

## தரமான கோழித் தீவனங்கள்

(கோழி மற்றும் குஞ்சுகளுக்கான முழுத்தீனிகள் மற்றும் அடர்த் தீனி)

## உத்திரவாதமுள்ள தீவன உப பொருட்கள் :

(பக்குவப்படுத்தப்பட்ட எலும்புத்தூள், மீன்தூள், கிளிஞ்சல் கப்பி, சிளிஞ்சல் தூள் முதலியன)

# T. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1312 — கோயமுத்தூர் 641018.

தந்தி : "ஸ்டேன்ஸ்"

போன் : 33514 To 33518.

3. காற்றோட்டமான குளிர்ந்த இடத்தில் முட்டைகளைப் பத்திரப்படுத்த வேண்டும்.

4. கோழிகளுக்குக் கிளிஞ்சல் குறையாமல் கொடுத்துவர வேண்டும்.

5. முட்டைகளின் அகலமான பக்கம் மேலிருக்கும்படி வைக்க வேண்டும்.

6. உடைந்த முட்டைகளை, நல்லவைகளோடு வைக்கக் கூடாது.

7. முட்டைப் பெட்டிகளில் உமியோ, மரத் தூளோ இட்டு வைக்க வேண்டும்.

8. குளிர் காலங்களில் ஒரு வாரத்திற்கு மேல் முட்டைகளைச் சேகரித்து வைக்கக் கூடாது.

9. அழுக்கு, மற்றும் கறைகள் உள்ள முட்டைகளைத் துணியால் துடைத்து வைக்க வேண்டும்.

குஞ்சுகள் வளர்ப்பு

கோழிக் குஞ்சுகள் மிக மென்மையானவை. அவற்றை பின்கண்டவாறு மிகக் கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

1. பொரித்த பிறகு 12 மணி நேரமாவது கோழிக் குஞ்சுகள் குஞ்சு பொரிக்கும் பெட்டியிலேயே இருக்க வேண்டும்.

2. பின் அவைகளைக் காற்றோட்டமுள்ள ஈரமில்லாத அறையில், உமியைப் பரப்பி வளர்க்க வேண்டும்.

3. வளர்ச்சிக்கு ஏற்ற சூடு அளிக்க, வகை செய்ய வேண்டும்.

முட்டை ஓர் கலப்படமில்லாத சரிவிகித உணவு!

வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும்,
வலிமைக்கு வேண்டிய கொழுப்புச் சத்தும்,
எலும்புக்கும், பற்களுக்கும் வேண்டிய சுண்ணும்புச் சத்தும்,
உடல் நலத்திற்கு வேண்டிய வைட்டமின் 'ஏ'யும்,
வேண்டிய அளவு உள்ளது முட்டையில்.

4. அவை ஒன்றின் மேல் ஒன்று ஏறி நசுங்கி விடாமல் இருக்கத் தடுப்புகள் வைக்க வேண்டும்.

5. தீவனம் எளிதில் கிடைக்குமாறு ஒரு தட்டில் தீனி வைக்க வேண்டும்.

6. பொரித்த 3 நாட்களுக்குள் எப். 1 கோழிக் கழிச்சல் தடுப்பு மருந்து செலுத்த வேண்டும்.

7. 15 நாட்களுக்குள் (பிஜியன் பாக்ஸ்) தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும்.

8. 6 வாரத்தில் 'ராணிகெட்' தடுப்பு மருந்துசெலுத்த வேண்டும்.

9. 8-வது வாரத்தில் (பௌல் பாக்ஸ்) தடுப்பு மருந்தைச் செலுத்த வேண்டும்.

10. 8-வது வாரத்தில், ஆண் குஞ்சுகளைப் பிரித்து, வேண்டாதவைகளை விற்று விட வேண்டும்.

11. குஞ்சுகளைத் தரம் பிரித்து நல்லவைகளை வைத்துக் கொண்டு அல்லாதவைகளை விற்று விட வேண்டும்.

12. ஒன்றை ஒன்று கொத்திக் கொள்ளாமல் இருக்க மூக்கு நுனியைக் கத்தரிக்க (Debeaking) வேண்டும்.

13. 12-வது வாரத்தில் வயிற்றுப் பூச்சிக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

14. 24-வது வாரத்தில் பேன் மருந்து தெளித்துக் கோழி வீட்டில் விடத் தயாராக வைக்க வேண்டும்.

15. 24-வது வாரத்தில் அதாவது 6-வது மாதத்தில் முன்னமே கூறியபடி நல்ல கோழிகளுக்கான சோதனைகளைச் செய்து, கோழி வீட்டில் விட வேண்டும்.

கோழி வளர்ப்பில் தவிர்க்க வேண்டியவை!

1. நலமற்ற கோழிகளை விலக்காதிருத்தல்.

2. அதிகக் கோழிகளைக் குறுகிய இடத்தில் வைத்தல்.

3. ஈரமான ஆழ்குப்பை.

4. அசுத்தமான தீனி, தண்ணீர்த் தொட்டிகள்.

5. அசுத்தமான முட்டையிடும் பெட்டி.

6. பாதுகாப்பற்ற கோழி வீடு.

7. அடிக்கடி கோழிகளைக் கையாளுதல்.

8. அடிக்கடி இடம் மாற்றுதல்.

9. தட்ப, வெப்ப நிலைகளைப் பொறுத்துக் கொள்ளும் வசதியில்லாமல் இருத்தல்.

10. வயதான கோழிகளை வைத்திருத்தல்.

11. இளங் கோழிகளையும், வயதானவைகளையும், ஒன்றாக வைத்திருத்தல்.

12. தேவைக்கு அதிகமான சேவல்களைக் கோழிகளுடன் வைப்பது.

13. தீவனம் இரைந்து வீணாவது.

14. சிக்கனத்தின் பெயரால் தரக் குறைவான தீவனம் அளிப்பது.

15. அடிக்கடி தேவைக்கு அதிகமான மருந்தளித்தல்.

16. மருத்துவரிடம் ஆலோசனை கேட்காமல் இருத்தல்.

17. உடனுக்குடன் செய்ய வேண்டியவைகளைக் கவனியாதிருத்தல்.

மேற்கூறிய முறைகளைத் தவிர்த்துக் கோழி வளர்த்தால் கோழி வளர்ப்பு இலாபகரமானதாக இருக்கும்.

—டாக்டர் அ. ராமச்சந்திரன்,





முட்டை வெளிவரும் பாதை

**கோ**ழி வளர்ப்பில் தற்சமயம் தமிழக மக்களிடையே ஆர்வம் ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 43 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி மாநில வங்கிக் (State Bank of India) கடனுதவியுடன் சுமார் 5 இலட்சம் கோழிகள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல், ஏனைய மாவட்டங்களிலும் கோழிப் பண்ணைகள் நாள்தோறும் ஏராளமாக நிறுவப்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி கணிசமான அளவில் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. முட்டையின் உபயோகம் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் தரமான முட்டைகளை விரும்புகின்றனர். இதனால் முட்டைகள் தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தரமான முட்டைகளை விரும்புவோர் முட்டையின் அமைப்பு, முட்டையில் அடங்கிய பொருள்கள், அம்முட்டை எவ்விதம் உருப்பெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே முட்டை எவ்வாறு உருவாகிறது என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

''வீட்டுக்கு ஒரு பண்ணை!
ஆளுக்கு ஒரு முட்டை!''

'' ஆறிரண்டு கோழிகள்
வாங்கிடுவீர்—அவை
உலவிடவே வீடொன்றும்
அமைத்திடுவீர்
ஒன்று பலவாகும் புரிந்திடு
வீர்—நல்ல
உணவாகும் முட்டைதரும்
கண்டிடுவீர்
கூடிடும் முட்டைதனை
விற்றிடுவீர்—தினம்
நாடிடும் லாபமதைப்
பெற்றிடுவீர்
நாளும் பண்ணையதை
வளர்த்திடுவீர்
நல்லதோர் உரமதையும்
அடைந்திடுவீர்
பயிரெல்லாம் செழித்திங்கே
வளமடைய—நம்ம
பண்ணையிலே கோழிப்
பண்ணை நிறுவிடுவீர்!

—டாக்டர் சு. ஆறுமுகம்,

## முட்டை எப்படி உற்பத்தி ஆகிறது ?

ஒரு கோழியை அறுத்துப் பார்த்தால், வயிற்றின் மேல் பாகத்தில் திராட்சைக் கொத்தைப்போன்ற அமைப்புள்ள உறுப்பைக் காணலாம். இவையெல்லாம் பிற்கால முட்டை அணுக்களே. ஆயிரக் கணக்கான முட்டை அணுக்கள் ஒரு தண்டுடன் (Stalk) ஒட்டியிருப்பதைப் பார்க்கலாம்.

பாலூட்டும் மிருகங்களில் கரு, தாயின் கருப் பையில் வளர்ச்சியுறுகிறது. கருவில் வளரும் சிசுவிற்கு வேண்டிய உணவு, தாயின் கருப்பை வழியாகச் செல்கிறது ; முழு வளர்ச்சியடைந்த பின்புதான் மகப் பேறு ஆகிறது. ஆனால் கோழி போன்ற பறவைகளில் சிசுவான குஞ்சுகள் வளர்வது கோழிகள் முட்டையிட்ட பிறகுதான்.

முட்டையிலிருந்து வெளி வந்த சிறு குஞ்சுகள், ஒரு வாரம் வரை வளர்வதற்கு வேண்டிய உணவை முட்டை

யிலிருந்து வருமுன், முட்டையில் இருந்தே பெற்றுவிடுகின்றன. ஆகையால் முட்டையை உயிரூட்டும் உணவு என்றே அழைக்கலாம். கோழி முட்டைகளை, குஞ்சுகள் உருவாக்கும் தொழிற்சாலை என்றே அழைக்கலாம்.

ஒரு கோழியானது 5 முதல் 6 மாதங்களில் பருவ முதிர்ச்சியடைகிறது. அப்பொழுது முட்டை அணுக்கள் பெரிதாகின்றன. இந்த ஆயிரக் கணக்கான முட்டை அணுக்களில் ஒன்று பெரியதாகி, தண்டிலிருந்து பிரிந்து புனல்போன்ற அமைப்புள்ள 'இன்பன்டிபுலம்' என்ற குழலின் ஆரம்ப பாகத்தை அடைகிறது. இம்மாதிரி முட்டை அணு முதிர்ச்சியடைந்து புனல் போன்ற பாகத்தை அடைவதற்கு 'முட்டைப் பெயர்ச்சி' (Ovulation) என்று பெயர். பல முட்டை அணுக்கள் ஒட்டியிருக்கும் தண்டுப் பாகத்தில் இரத்தக் குழாய்கள் கிடையாது. ஆனால் முட்டை அணுக்கள் தண்டைத் தவிர மற்ற இடத்திலிருந்து முட்டை அணுபையிலிருந்து பிரியும் பொழுது இரத்தக் குழாய்கள் உடைந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். இவ்வாறு வெளியேறிய இரத்தம் முட்டையின் வெள்ளைக் கருவில் கலக்கும் பொழுது இது இரத்தவளையம் அல்லது இரத்தப் பொட்டு (Blood Spot) என்று கூறப்படுகிறது. முட்டைப் பெயர்ச்சி ஏற்படுவதற்குச் சில நாட்களுக்குமுன் இவ்விதம் இரத்தக் கசிவு ஏற்படலாம். இவ்விதம் கசியும் இரத்தம் உறைந்து செம்பழுப்பு நிறமாகிறது. இது ஊன் புள்ளி (Meat Spot) என்று கூறப்படுகிறது. கோழிகளின் கருக்குழல் சுமார் 25 முதல் 27 அங்குல நீளமிருக்கும். இந்த நீளமான பாதையில் முட்டை அணு செல்லும் பொழுது, முட்டையிலுள்ள பொருள்கள் உற்பத்தியாகி முட்டையுடன் சேருகின்றன.

உயரினக் கோழிகளில் நல்ல பராமரிப்பில், ஒரு முட்டையிட்டபின் மறுபடியும் சுமார் 30 நிமிடங்கள் கழித்து முட்டைப் பெயர்ச்சி நடைபெறுகிறது. கருக் குழலில் புனல் போன்ற இடம் ஆரம்ப இடமாகும். இது, முட்டை அணுவின் பையிலிருந்து பெயர்ந்து வந்த முட்டை சிறிது நேரம் தங்குவதற்கு இடமாகிறது. இது சுமார் 3 முதல் 4 அங்குல நீளமிருக்கும். இங்கிருந்துதான் முட்டையானது ஊனுடலை விட்டு வெளியுலகிற்குத் தனது பயணத்தைத்தொடங்குகிறது. விந்துவிலிருந்து வரும் ஆண் அணுக்கள் கருக் குழலின் வழியாக மேல் நோக்கி வந்து புனல் போன்ற பாகத்தை அடைந்து முட்டையைக் கருத் தரிக்கச் செய்கின்றன. கருத் தரித்த முட்டை புனல் போன்ற பாகத்தில் கீழே இறங்கி கருக் குழலின் அடுத்த பாகமாகிய 'மேக்னம்' என்ற பாகத்தை அடைகிறது. இதற்கு 15 நிமிடங்கள் ஆகின்றன. இப் பாகத்தில்தான் வெள்ளைக் கருவின் பெரும் பாகம்—ஏறத்தாழ 55 சத வீதம் 'அல்புமின்' பாகமும், வெள்ளைக் கருவிலுள்ள புரதத்தின் பெரும் பாகமும்—முட்டையுடன் கலக்கிறது. 'மாக்ன'த்தின் நீளம் சுமார் 15 அங்குலமாகும். இத் தூரத்தைக் கடப்பதற்கு முட்டைக்குச் சுமார் 3 மணி நேரமாகிறது. இதற்கு அடுத்த பாகம் 'இஸ்த்மஸ்' என்பதாகும். இப் பாகம் மிகவும் குறுகலானது. சுமார் 4 அங்குல நீளமுள்ளது. இப் பாகம் மிகவும் குறுகலாக இருப்பதால் இப் பாகத்தைக் கடக்க முட்டைக்குச் சுமார் 1-15 மணி நேரம் பிடிக்கும். இப் பாகத்தில் சிறிதளவு தண்ணீரும், உப்புகளும் முட்டையுடன் சேருகின்றன. கருக் குழலின் கடைசிப் பாகம் கருப்பை ஆகும். இது தடித்த சுவர்களையுடையது. சுமார் 4 அங்குலமுள்ளது. இப் பாகத்தில்தான் முட்டைக்கு வேண்டிய மற்ற பாகங்களும் உப்புக்களும், முட்டை ஓடும், அதற்கு வேண்டிய நிறமும் முட்டையுடன் சேர்ந்து முட்டை முழுமையடைகிறது. இங்கு முட்டை சுமார் 21 மணி நேரம் தங்குகிறது. இதன் பின்பு முட்டை இங்கிருந்து பெண்ணுறுப்பை அடைகிறது. இதன் நீளம் சுமார் 2 அங்குலமாகும். கடைசியாக ஆசனவாயை அடைந்து முட்டை



வெளி வருகிறது. இந்த முட்டையின் பயணத்திற்குச் சுமார் 25 மணி நேரமாகிறது. முட்டைக்கு முதலில் காற்றிடம் கிடையாது. கோழி உடம்பின் வெப்ப நிலை 107 டிகிரி பாரன்கீட் ஆகும். முட்டை வெளி வந்து குளிர்ச்சி அடைகிறது. இதனுல் முட்டை ஓட்டின் உட்பாகத்தில் சுருக்கம் ஏற்பட்டு, காற்று அந்த இடத்தை அடைத்துக் கொள்கிறது.

### முட்டையில் ஏற்படும் கோளாறுகள்

**இரு கருவுள்ள முட்டைகள் :**

ஒரே சமயத்தில் இரு முட்டையணுக்கள் பெயர்ச்சி அடைந்து புனல் போன்ற பாகத்தை அடைகின்றன. இங்கே ஆண் அணுக்களால் கருத் தரிக்கப்படுகின்றன.

**முட்டையில் மற்றொரு முட்டை :**

சில சமயங்களில் கீழே இறங்கி வரும் முட்டை, கருக்குழல் மேல் நோக்கிச் சுருங்குவதால் மேல் நோக்கி வந்து அடுத்த நாள் முட்டையுடன் சேர்ந்து இரு முட்டைகளாகின்றன.

**ஓடு இல்லாத முட்டை :**

முட்டை முதிர்ச்சியடையாமல் பெயர்வதாலும், கருப்பையில் குறைந்த நேரம் தங்குவதாலும் ஓடு ஏற்பட வேண்டிய நேரம் கிடைப்பதில்லை.

**மெல்லிய ஓடுள்ள முட்டை :**

முட்டையில் ஓடு ஏற்படுவதற்கு வேண்டிய சுண்ணும்புச் சத்தும், வைட்டமின் 'டி'யும், மாங்கனீஸ் என்ற தாது உப்பும் கோழியின் உணவில் இல்லாததால், முட்டை மெல்லிய ஓட்டுடன் வெளி வருகிறது. சில சமயங்களில் வம்ச வழிக் குணமாகவும் இருக்கலாம். சில நோய்களின் போதும், மிகவும் வெப்பமான நாட்களிலும் மெல்லிய ஓடுள்ள முட்டைகள் ஏற்படலாம். இஃது பெரும்பாலும் உணவுக் கோளாறே. மெல்லிய ஓடுள்ள முட்டைகள், சில சமயங்களில் கருப் பையிலும், முட்டை வெளிவரும் போதும் உடைந்துவிடும்.

**மாறுபட்ட நிறங்கொண்ட கருவுள்ள முட்டைகள் :**

கோழியின் உணவில் சிலவித உணவுப் பொருள்கள்இருக்கும் பொழுது மஞ்சள் வெண்மைக் கருக்களின் நிறம் மாறலாம்.

சூல்பையிலிருந்து பெயர்ந்து கருக் குழலில் அங்கங்குத் தங்கி தன்னிடமுள்ள கருவின்வளர்ச்சிக்கு வேண்டிய பொருள்களை, அங்கங்கே சேர்த்துக் கொண்டு சுமார் 25 மணி நேரத்தை எடுத்துக் கொண்டு பத்திரமாக வெளியே வந்து சேர்வது விந்தையிலும் விந்தையே! எனவே முட்டையின் பயணம் ஒரு விசித்திரப் பயணமாகும்.

—டாக்டர் பா. சின்னதுரை,

**அதிக முட்டைகள் பெறுவது எப்படி ?**

கூடுதலாய் முட்டையிடும் 'கோழி' தேவையா ? அதற்கு நல்லதோர்கோழிக் குஞ்சு, நலந்தரும் தீவன வகைகள், நல்ல நிருவாகம் ஆகிய மூன்றும் தேவை.

இம்மூன்றும் சேர்ந்து இணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் அதிக முட்டைகளும் சத்தான முட்டைகளும் பெற்றிடலாம்.


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.
## படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர வினியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !

# நோய்களும் தடுப்பும்

**போ**துவாக முன்பெல்லாம் கோழிகளுக்குச் சில கொடிய நோய்கள் வந்து எல்லாக் கோழிகளும் இறந்து விடுவதுண்டு. அதனால் கோழிப் பண்ணை வைப்பதில் இலாபமில்லை எனப்பலர் கருதுகின்றனர். கோழிகளுக்கு நோய் வருவது உண்மையே! ஆனால் அந்த நோய்கள் கோழிகளைத் தாக்காமல் காத்துக்கொள்ள நோய்த் தடுப்பு முறைகள் உள்ளன. எனவே, குறித்த காலத்தில் கோழிகளுக்குத் தடுப்பு ஊசி போடுவதால் நோயைத் தடுக்க முடியும். கோழிப் பண்ணையில் நோய் வந்தபின் காப்பது சிரமம். ஆகவே மருத்துவ வசதிகள் எல்லா இடங்களிலும் கிடைப்பதால் கோழிகளுக்கு நோய்கள் வராமல் தடுக்கத் தடுப்பு முறைகளை மேற்கொள்வதே பயனுடையதாகும்.

### கோழிக் காய்ச்சல் நோய்

கோழிக் கழிச்சல் (இராணிகட்') நோயினால் குஞ்சுகள் அதிகம் பாதிக்கப்படும். ஆனால் எந்த வயதிலும் இந்நோய் வரலாம்.

**தடுப்பு முறைகள் :**

1. ஒரு நாள் குஞ்சுகளுக்குத் தடுப்பு ஊசியும், 8 முதல் 10 வாரக் குஞ்சுகளுக்குக் கோழிக் கழிச்சல்—தடுப்பு ஊசியும் கட்டாயம் போட வேண்டும்.

2. நோய் உள்ள கோழிகளைத் தனியாகப் பிரித்து விட வேண்டும்.

### கோழி அம்மை

இந்நோய் எல்லா வயதுக் கோழிகளையும் தாக்கும். இதன் அறிகுறிகள் பின்கண்டவாறு இருக்கும்.

1. கோழிகளின் கொண்டையிலும், கண்களைச் சுற்றிலும் சிவந்த புள்ளிகள் தோன்றும்.
2. சில சமயங்களில் 'மரு' தோன்றிய இடங்களில் புண்ணாகியும், கண்கள் இருட்டாக்கியும் பாதிக்கப்படுகிறது.

**தடுப்பு முறைகள் :**

1. இரண்டு வாரக் குஞ்சுகளுக்கு 'கோழிச்சின்ன அம்மை' தடுப்பு ஊசி (தொடையில் மயிர்க்கால்களில் தடவுவது)



தடுப்பு ஊசி போடப்படுகிறது

6 வாரக் குஞ்சுகளுக்கு கோழி பெரிய அம்மைத் தடுப்பு ஊசி (இறக்கைகளின் இடுக்கில் போடுவது)

2. மரு 'தோன்றிய இடங்களில் 'டிஞ்சர் அயோடின்' அல்லது 'போரிக்' களிம்பு தடவலாம்.

3. கோழிகளை நெருக்கமாக வைக்கக்கூடாது.

### கோழிச்சளி நோய்

(Coryzar)

இந்நோய், குஞ்சுகளை அதிகம் பாதிக்கின்றது. முட்டையிடும் கோழிகளுக்கு வந்தால் முட்டை உற்பத்தி 50 சத விகிதத்திற்குப் பாதிக்கப்படுகின்றது.

**தடுப்பு முறைகள் :**

1. குஞ்சுகளையும், பெரிய கோழிகளையும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் வைத்து வளர்க்க வேண்டும்.

2. பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு உடனே வைட்டமின் சத்துக்களைக் (ரோவிஸாபில்', விட்டாபிள்') கொடுக்கலாம்.

### கோழி 'ரூப்' நோய்.

இந்நோய் கோழிச்சளி நோயைப் போலவே தோன்றும். தீனியில் வைட்டமின் சத்து (வைட்டமின்-ஏ) குறைவால் நோய் வருகின்றது.

**தடுப்பு முறைகள் :**

1. வைட்டமின் சத்துக்கள் நிறைந்த பொருள்களைத் தீனியில் சேர்க்க வேண்டும்.

2. குதிரைமசால், அகத்தி, சணப்பை போன்றவைகளைக் கொடுக்கலாம்.

3. நோய்வாய்ப்பட்ட கோழிகளுக்கு 'ரோவிஸால்' 'விடாபிளன்டு' போன்ற மருந்துகள் கொடுக்கலாம்.

### கோழிக்கான தடுப்பு ஊசி அட்டவணை

| வயது | நோய் | தடுப்புமுறை |
|---|---|---|
| ஒருநாள் குஞ்சு | கோழிக் கழிச்சல் | எஃப் தடுப்பு ஊசி (ஆர்.டி வி எஃப்) (நாசித்துவாரத்தில் செலுத்துதல்) |
| 2 வாரக் குஞ்சு | கோழிச்சின்ன அம்மை | பிபிவி (தொடையில், உரோமக் கால்களில் செலுத்துதல்.) |
| 5-7 வாரக் குஞ்சுகள் | கோழிப் பெரிய அம்மை | எஃப் பிவி (இறகின் அடியில் குத்தும் முறை) |
| 8 வாரக் குஞ்சுகள் | கோழிக் கழிச்சல் | ஆர்.டி.வி.கே (ஊசி மூலம் செலுத்தும் முறை) |

மேற்கூறிய தடுப்பு ஊசிகளைப் போக்கிக் கொள்ள, வைட்டமின் சத்துக்களைக் கொடுக்கலாம். ஊசி மூலம் செலுத்தும் கோழிக் கழிச்சல் தடுப்பு ஊசி போடும் முன்பு குடற் புழுக்களுக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

### இரத்தக் கழிச்சல் நோய்

கோழிகளுக்கு மிக எளிதிலும் விரைவாகவும் பாதிக்கும் ஒருவகைக் குடல்நோய் இரத்தக் கழிச்சல் நோயாகும். இந்நோய் 2 வாரம் முதல் 12 வாரம் வயதுள்ள குஞ்சுகளுக்கு எளிதில் வரும். இதில் இரண்டு வகை உண்டு. இரண்டு வாரம் முதல் 8 வாரம் வரை பெருங்குடலில் முதற் பகுதியையும், பெரிய கோழிகளில் பெருங்குடலையும் பாதிக்கும். இரண்டு வகைகளாலும் ஒரே சமயத்தில் பாதிக்கப்படலாம்.

**தடுப்பு முறைகள் :**

1. பழைய கோழி வீடுகள் நன்ருகச் சுத்தப்படுத்திய பின்னரே புதிய கோழிகளை விட வேண்டும். 10 சதவிகித அம்மோனியாவைத் தண்ணீரில் கலந்து தரையையும், பக்கச் சுவர்களையும், மற்றச் சாதனங்களையும் கழுவலாம்.

2. தீனியிலோ, தண்ணீரிலோ 2 வாரம் முதல் 12 வாரம் வரை இரத்தக் கழிச்சல் தடுப்பு மருந்துகளைக் கொடுக்கலாம் (எம்பசின் மிக்ஸ்', 'பைபுரான்', 'ஆம்புரால்' போன்ற மருந்துகள்).

3. நோய்வாய்ப்பட்ட கோழிகளுக்கு 'எம்பசின்', 'காட்ரினல்', 'பைபுரான்', 'அலமெட்', 'ஆம்புரல்', 'சால்', போன்ற மருந்துகளைக் கொடுத்தும் நோயைக்குறைக்க வேண்டும்.

### குடற் புழுக்கள்

குடற்புழுக்கள் குஞ்சுகளையும், வளர்ந்த கோழிகளையும் பாதிக்கின்றன. இவைகளில் தட்டைப் புழுக்களும், உருண்டைப் புழுக்களும் இருக்கின்றன. உருண்டைப் புழுக்களே முக்கியமாகக் கோழிகளைத் தாக்குகின்றன.

குடற் புழுக்களால் கோழிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து, மற்ற நோய்கள் வரக் காரணமாயிருக்கும். முட்டை உற்பத்தி குறையும்; பண்ணையில் இறப்பு விகிதம் அதிகரிக்கும்.

**தடுப்பு முறைகள் :—**

1. ஆழ்குப்பையை ஈரம் படாதவாறு பாதுகாக்க வேண்டும்.

2. குஞ்சுகளுக்கு 8-வது

வாரத்தில் குடற்புழு நீக்க மருந்து கொடுக்கலாம். பின் 2 மாதங்களுக்கு ஒரு முறை புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும்.

உருண்டைக் குடற்புழுக்களுக்கு 'சேஃபர்சால்', 'வென் மக்ஸ்', 'ஆண்டிபார்' போன்ற மருந்துகளைக் கொடுக்கலாம். தட்டைப் புழுக்கள் இருந்தால் 'டைசெஸ்டரல்' மருந்தைக் கொடுக்கலாம். ஒரு கோழிக்கு ஒரு மாத்திரை விதம் கொடுக்க வேண்டும்.

| | மருந்து | உபயோகிக்கும் அளவு (குடிநீரில் 100 கோழிக்கு) | கிடைக்கும் அளவு | 100 கோழிக்கு மருந்துக்காகும் செலவு |
|---|---|---|---|---|
| | | | | ரூபாய். |
| 1. | ஆண்டிபார் | 75 மி.லி. மருந்து | 100 மி.லி. | 2.40 |
| 2. | சேஃபர்சால் | 15 மி. லி4 லிட்டர் குடிநீர் | 100 மி.லி. 450 மி.லி. | 2.40 |
| 3. | வெர்பன் | 37.5 கி.கிராம் 16 லிட்டர் குடிநீர். | 60 கிராம் பாட்டில் | 3.17 |
| 4. | ஆப்ரிகால். | 650 கிராம் 13 லிட்டர் குடிநீர். | 100 மி.லி. | 1.50 |
| 5. | ஜெர்மக்ஸ் | பெரிய கோழிகளுக்கு 60 மி.லி. 4 லிட்டர் குடிநீர் (குஞ்சுகளுக்கு 30 மி.லி. 4 லிட்டர் தண்ணீர்) | 100 மி.லி. | 2.73 |
| 6. | பைபிரசின் அடிபேட். | ½ மாத்திரை 1 கிலோ எடைக்கு மேல் உள்ள கோழிக்கு | 25 மாத்திரை 200 மாத்திரை (பெரிய கோழிக்கு) | 7.20 |

### பெரு ஈரல் நோய்

இந்நோய் சாதாரணமாக நன்கு வளர்ந்து முட்டையிடும் வயதையடைந்த போதும், நிறைய முட்டையிடும் தருணத்திலும் கோழிகளைத் தாக்குகின்றன.

தடுப்பு முறைகள் :—

1. நோய்வாய்ப்பட்ட கோழிகளையும் சந்தேகமுள்ள கோழிகளையும் உடனே நீக்கி விட வேண்டும்.

2. கோழித் தீனிகளில் 'நெப்டீன்', '3நைட்ரோ டிஎம்-5', 'டெர்ராமைசின்' போன்ற மருந்துகளைக் கலந்து கொடுக்கலாம்.

### கோழிகளுக்கு ஒட்டுண்ணிகள்

கோழிகளுக்குப் பேன், உண்ணி போன்ற பூச்சிகளும் வருவதுண்டு. சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்தால் இத்தகைய பூச்சிகள் உருவாகும்.

தடுப்பு முறை :

1. கோழிகளை நன்கு வளர்த்துச் செழுமையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

2. கோழி வீடுகளில் மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

3. பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு 1 சத டி.டி.டீ மருந்து அல்லது 1:500 பாகம் மால்த்தியான் கலந்த தண்ணீரைத் தெளிக்கலாம்.

மேற்கூறிய முறையில் கோழிகளுக்குத் தடுப்பு முறைகளைக் காலத்தில் செய்தால், கோழிப்பண்ணை தொடர்ந்து வருவாய் தரும் ஒரு தொழில் என்பதில் ஐயமில்லை!

## ஓசூர் கால்நடைப் பண்ணையின் பணி!

ஓசூர் கால்நடைப் பண்ணையில் 'வெள்ளை லெக்கார்ன், வெள்ளை போங்தா பர்க்லி, வெள்ளை போங்தா ஆஸ்ட், எம். லைன், ஆஸ்டிரலார்ப், கருப்பு மைனர்க்கா, சிவப்புப் போங்தா ஆகிய மேனாட்டுக் கோழி இனங்கள் வளர்க்கப்படுகின்றன. கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ளோருக்கு முட்டைகள், கோழிகள், சேவல்கள் பஞ்சாயத்து யூனியன் மூலம் விற்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணை கோழி அபிவிருத்திப் பணியில், மாநிலத்தில் பெரும் பங்கு வகித்துள்ளதுடன், அகில இந்தியக் கண்காட்சியில் பல பரிசுகளும் பெற்றுள்ளது. 19—1—70 முதல் இப்பண்ணையில் அதிக அளவு கோழிக்குஞ்சு பொரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல் முறைக்கு வரத் தொடங்கிற்று. இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 20,000 குஞ்சுகள் கோழியின விரிவாக்க நிலையங்களுக்கு வினியோகிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் இப்பண்ணையில் 2,62,323 குஞ்சுகளும், 12,78,527 முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன; 3,04,026 முட்டைகள் இன விருத்திக்காக விற்கப்பட்டன. 67,904 கோழிகள், 1,47,862 குஞ்சுகள் இன விருத்திக்காக விற்கப்பட்டன.

# தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்



— பி. என். வேதநாராயணன் ஐ. ஏ. எஸ்.

செயலாளர்,
வேளாண்மைத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழகத்தின் உழவர் பெருமக்களில் பெரும்பாலோர் சிறு நிலக்கிழார்கள்! அவர்களுக்கு வேளாண்மை மூலமாகக் கிடைக்கும் வருமானம் போதுமானதல்ல! வேளாண்மை மூலமாக ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆகவே, ஒரு துணைத் தொழிலை மேற்கொண்டாலொழிய போதிய வருவாய் கிடைக்கும் வாய்ப்பில்லை. கோழி வளர்ப்பினைத் துணைத் தொழிலாகக் கொள்வதின் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்ய இயலும். இந்நோக்கத்துடன் உழவர் பெருமக்கள்—குறிப்பாகச் சிறு நிலக்கிழார்கள்—கோழி வளர்ப்பில் ஆர்வம் கொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப் பெறுகின்றன. அவைகளில், சிறுநிலக்கிழார்கள் மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைத் தொழிலாளர் மேம்பாட்டுத் திட்டம், கிராம வளர்ச்சித் திட்டம், ஸ்டேட் பாங்க் நிதி உதவியுடன் கோழி வளர்ப்பு மும்முரத்திட்டம் முதலியன குறிப்பிடத்தக்கவை. கடந்த இரண்டு ஆண்டுகளாக இத்திட்டங்கள் மூலமாக உழவர் பெருமக்களுக்குக் கோழி வளர்ப்பில் கணிசமான ஆர்வம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,700 உழவர் பெருமக்களுக்குக் கோழிப் பண்ணை அமைப்பதற்காக உதவும் திட்டம் நவம்பர் 1972-ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை 1,400 உழவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது கோழிகளும் முட்டை இட ஆரம்பித்துள்ளன. அதன் காரணமாக நாள் ஒன்றுக்கு சுமார் 50,000 முட்டைகள் உற்பத்தியாகும் நிலை இன்று உருவாகியுள்ளது. இது நாள்தோறும் அதிகரித்து வருகிறது. ஒரு இலட்சம் முட்டை வரை உற்பத்தியாகும் வாய்ப்பு உள்ளது. இந்நிலையை எதிர்நோக்கித் தமிழக அரசு துவக்கியுள்ள நிறுவனமே, 'தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்'.

கோழி வளர்ப்புத் தொழில் மூலமாக உரிய பலன் கிடைக்க வேண்டுமானால், உற்பத்தியாகும் முட்டைகள் தயக்கமில்லாமல், உழவர்களிடமிருந்து வாங்கப்பெறல் வேண்டும்; அதுவும் போதிய இலாபம் கிடைக்கும் விலையில் கொள்முதல் செய்யப் பெறல் வேண்டும். அதேபோன்று கோழிகளுக்கான சத்தான தீவனம் தட்டில்லாமல், நியாயமான விலையில் கிடைக்கவும் செய்வதும் அவசியம். அதிக முட்டையிடும் தன்மையுடைய உயரினக் கோழிகளும், உழவர்களால் வளர்ப்பதற்குத் தகுந்த பருவ வயதுடையனவாகப் போதிய அளவில் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆயிரக் கணக்கான உழவர் பெருமக்களைக் கோழிப்பண்ணை தொழிலில் ஈடுபடுத்தும் பொழுது, பல்லாயிரக் கணக்கான முட்டைகளுக்கான சந்தை நிலவரத்தை ஏற்படுத்துவதும், ஆயிரக் கணக்கான டன்கள் கோழித் தீவனத்தை உற்பத்தி செய்து, வினியோகிக்க ஏற்பாடு செய்வதும் அவசியமாகிறது. அதேபோன்று ஆயிரக்கணக்கான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வது, போதிய பருவம் வரை வளர்ப்பது, நோய் தடுப்பு முறைகளை மேற்கொள்ளுதல், வினியோகிப்பது ஆகியவைகளும் இன்றியமையாததாகின்றன. இவ்வாறு விரிவான அளவில் கட்டுக் கோப்பான முறையில் இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் வழங்கி, வாணிப முறையில் செயலாற்ற ஒரு நிறுவனத்தினால்தான் முடியும்.

இன்று பொதுவாக தமிழ் நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக உள்ளது என்றாலும், மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத புரதச் சத்துணவுகள் குறைவாகவே கிடைக்கின்றன. முட்டை ஒரு சிறந்த உணவு! இது, நியாயமான விலையில் பரவலாகக் கிடைக்க வேண்டுமானால், அதற்கான ஏற்பாட்டையும் வாணிப முறையான நிறுவனமே ஏற்பாடு செய்ய இயலும். இக்காரணங்களாலேயே தமிழ்நாடு அரசு, கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்காக அவ்வித நிறுவனம் ஒன்றை அமைக்க 8-5-73

அன்று ஒப்புதல் அளித்தது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அலுவலர்களையும் நியமித்தது. 12-7-73 அன்று இந்திய கம்பெனிகள் சட்டங்களின்படி 'தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்' (The Tamil Nadu Poultry Development Corporation) பதிவு செய்யப்பெற்றுச் செயலாற்றத் துவங்கியுள்ளது.

இந்த நிறுவனம் முழுவதும் தமிழக அரசிற்கே சொந்தமான தனியார் நிறுவனமாகும் (Government owned private company). இதற்கு ஒப்புதல் அளிக்கப்பெற்ற மூலதனம் ஒரு கோடி ரூபாய். இதுவரை இந் நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாகப் பெறப்பெற்ற மூலதனம் பத்து இலட்சம் ரூபாய்.

தமிழகத்தில் 38 கோழி இன விரிவாக்க (விஸ்தரிப்பு) நிலையங்களும், மூன்று குஞ்சு பொரிப்பு கோழிப் பண்ணைகளும், கோழி உற்பத்தி, வளர்ப்பு, விநியோகம் ஆகிய பணிகளுக்காக கால்நடை வளர்ப்புத் துறையின் கீழ் செயலாற்றி வந்தன. இவைகளை—இயங்கும் நிலையிலேயே—தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

கோழித் தீவனம் உற்பத்தி செய்ய சென்னையில் ஒரு பெரிய தொழிற்சாலையும், கோவை மாவட்ட அரசூரில் ஒரு சிறிய தொழிற்சாலையும், செயலாற்றி வந்தன. இந்த இரு நிலையங்களும்—இயங்கும் நிலையில்—தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தினால் பொறுப்பேற்கப் பெற்றுள்ளன. இந்த நிலையங்கள் உலக உணவு உற்பத்தி திட்டத்தின் உதவி பெறுபவை. இத்திட்டத்தின் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட 'மும்முர கோழி வளர்ப்பு வட்டாரத் திட்டம்' (Intensive Poultry Development Blocks) 9 வட்டாரங்களில் செயலாற்றுகின்றன. இந்தத்திட்டத்தைச் செயலாற்றும் பொறுப்பையும், படப்பை கிராம கோழிக் குஞ்சுகள் வளர்ப்புத் திட்டம் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாற்றும் பொறுப்பையும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கால்நடை வளர்ப்புத்துறையிடமிருந்து பொறுப்பேற்றுள்ளது.

மேலே கூறிய விவரங்களிலிருந்து இந்த நிறுவனம் வாணிப முறையில் இயங்கும் நிறுவனமாகப் பதிவு செய்யப்பெற்றிருந்தாலும், கோழி வளர்ப்பிற்கான திட்டங்களைச் செயலாற்றவும் பொறுப்பேற்றுள்ளது என்பதும், இதன் காரணமாக கோழி வளர்ப்போரின் நலன் கோழி முட்டைகள், கோழி இறைச்சி உண்போரின் நலன் ஆகியவற்றையும் கவனிக்கும் நிலையில் செயலாற்றும் நிறுவனம் என்பதும் தெளிவாகும்.

அரசிடமிருந்து பொறுப்பேற்கப் பெற்ற நிலையங்களின் சொத்துக்கள் (ஆஸ்திகள்) உரிய முறையில் கணக்கிடப் பெற்று, அவற்றின் தொகை தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்கு வட்டியில்லாக் கடன் தொகையாகக் கணக்கிடப் பெறும்.

இந்த நிறுவனம் தற்சமயம் கீழ்க்கண்ட ஐந்து இயக்குநர்கள் கொண்ட குழுவினால் நிருவாகிக்கப் பெறுகிறது.

1. திரு. பி.என். வேதநாராயணன் ஐ.ஏ.எஸ்., செயலாளர், வேளாண்மைத்துறை.

2. திரு கே. வெங்கடேசன் ஐ.ஏ.எஸ்., இணைச் செயலாளர், நிதித்துறை.

3. திரு ந. ரகுபதி ஐ.ஏ.எஸ்., இயக்குநர், ஊர் வளர்ச்சித்துறை.

4. டாக்டர் வை. இரத்தின சபாபதி ஜி.எம்.வி.சி., பி.எச்.டி., இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித் துறை.

5. டாக்டர் கே.எஸ். சண்முகசுந்தரம் ஜி.எம்.வி.சி., பி.ஜி., இணை இயக்குநர், கால்நடை வளர்ப்புத்துறை.

திரு. பி.என். வேதநாராயணன் அவர்கள் தலைவராகவும், டாக்டர் கே.எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் நிருவாக இயக்குநராகவும் செயலாற்றுகிறார்கள்.

இந்த நிறுவனம் செயலாற்ற ஆரம்பித்ததும், முதல் பணியாகத் திருச்சி மாவட்டத்தில் செயலாற்றும் மும்முரத் திட்டத்தினை ஆய்வு செய்து, உற்பத்தியாகும் முட்டைகளைத் தவக்கமில்லாத நிலையில் சேகரிப்பது, சேமிப்பது, சந்தைகள் வாய்ப்பை விரிவாக்குவது போன்றவற்றிற்கான திட்டங்களை வகுத்து செயலாற்ற ஆரம்பித்துள்ளது. சென்னையில் முட்டை விற்பனையையும் துவக்கியுள்ளது. அதே போன்று, சென்னை தீவனக் கலவை நிலையத்தை விரிவுபடுத்தும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. புதிய உயரினக் கோழிகளை அதிகரிக்கும் நோக்குடன் 'ஹசர் கட்டா' மண்டல கோழிப் பண்ணையிலிருந்து குஞ்சுகளை வாங்கி வளர்க்கும் பணியும், புதிய கலப்பினக் கோழிகளை உற்பத்தி செய்யும் பணியும் துவக்கப் பெற்றுள்ளன.

எத்தொழிலுக்கும் ஆரம்ப நிலைப் பிரச்சினை காலம் உண்டு. அந்த நிலையில் இந்த நிறுவனம் தற்சமயம் செயலாற்றினாலும், விரைவிலேயே பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு, சீரிய முறையில் பணியாற்ற எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

கோழிப்பண்ணைத் தொழிலை இலாபகரமாக நடத்தவும், கோழிப்பண்ணையாளர்களின் வருவாயை அதிகப்படுத்தவும் தமிழ்நாட்டின் மக்களுக்குத் தேவையான அளவு ஊட்டச் சத்து மிகுந்த முட்டைகளையும், கோழி இறைச்சியையும் உற்பத்தி செய்யவும், கோழிப் பண்ணைத் தொடர்புடைய பல தொழில்கள் தமிழ்நாட்டில் மலரவும், பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் உதவிடும் என்பதில் ஐயமில்லை.



உங்களது வருவாய் அதிகரிக்க—

# ஸ்டார்மாஷ் தீவனங்கள்

## உபயோகியுங்கள்

* நோய் அற்ற தன்மை,
* துரித வளர்ச்சி,
* அதிக முட்டையிடும் திறன்,
* தரமுள்ள முட்டைகள்,
* குறைந்த அளவுத் தீனி,
* அதிக தீனி திறன்.

இவை 'ஸ்டார்மாஷ்' தீவனங்கள் உபயோகிப்பதன் மூலம் கிடைக்கும்.

ஸ்டார்மாஷ் தீவனங்கள் விஞ்ஞான முறைப்படி சரியான அளவில் கலக்கப்பட்டுத் தயாரிக்கப்படுவதோடு அல்லாமல் அதன் மூலப் பொருட்களும் முற்றுப் பெற்ற தீவனமும் பரிசோதிக்கப்பட்ட பின்னே விற்பனைக்கு வருகின்றன.

மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்க :

தயாரிப்பாளர் :—

**ஷாவாலஸ் அண் கம்பெனி லிட்.,**
கால்நடைத் தீவனப் பிரிவு,
7, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600001.



# கோழித் தீனி

காட்டுக்கோழி ஓராண்டுக்கு சுமார் 30 முட்டைகளே இடுகிறது. அதிக முட்டையிடுவதற்காகவே உற்பத்தி செய்யப்பட்ட கோழி இதைப் போல் சுமார் எட்டு மடங்கு முட்டைகளிடுகிறது. கோழி வீட்டிலேயே அடைப்பட்டிருக்கும் இன்றைய கோழிக்கு, அதன் மிக அதிக தேவைக்கேற்ப தீனி கொடுப்பது மிகவும் அவசியம்.

கோழித் தீனியில் போதிய ரதமான புரதமும், போதிய புரதத்துடன் சரியான விகிதத்தில் சக்தியும், போதிய சரியான விகிதத்தில் வைட்டமின்களும், போதிய சரியான விகிதத்தில் தாதுப் பொருட்களும் இருக்க வேண்டும். இதைத் தவிர 'காக்சிடியோசிஸ்'' போன்ற வியாதியைத் தடுக்கும் மருந்துகளும், கிருமிகளை ஒடுக்கும் மருந்துகளும், கோழி குஞ்சுகளின் தீனியிலிருக்க வேண்டும். கோழிகள் நெருக்கடிகளிலிருந்து சீக்கிரம் மீள ''ஆண்டிபையாடிக்ஸ்' உதவுகிறது.

சிறு அளவில் கொல்லைப் புறத்தில் கோழி வளர்ப்பவர் தானே கோழித் தீனி கலந்து கொள்வது சிரமமும், செலவதிகமுமான செயலாகும். அதிக கோழி வளர்ப்பவர்களும் கூட்டுறவு முறையிலியங்கும் சிறு கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களும் அவர்களுக்குத் தேவையான கோழித் தீனியை அவர்களே கலந்து கொள்ளலாம்.

எட்டு வாரத்துக்குட்பட்ட வயதுடைய குஞ்சு, 9 முதல் 20 வாரம் வரை வயதுடைய குஞ்சு, 21 முதல் 72 வாரம் வயதுடைய முட்டையிடும் பெட்டை இவற்றின் தீனிகள் வெவ்வேறானவை. இவற்றின் தேவைகளும் வெவ்வேறு. இவற்றிற்கு கொடுக்கக் கூடிய மாதிரி உணவுப் பட்டியல் பின் வருமாறு அமையவேண்டும்.

| தீனி | குஞ்சுத் தீனி (0—8 வாரம்) கிலோ | வளரும் குஞ்சுத்தீனி (9—20 வாரம்) கிலோ | முட்டையிடும் கோழித் தீனி (21—72 வாரம்) கிலோ |
|---|---|---|---|
| மக்காச் சோளம் ... | 125.0 | 150.0 | 162.5 |
| கடலைப் பிண்ணுக்கு ... | 62.5 | 37.5 | 25.0 |
| எள்ளுப் பிண்ணுக்கு ... | 12.5 | 12.5 | 12.5 |
| அரிசித் தவிடு அல்லது கோதுமைத் தவிடு ... | 25.0 | 25.0 | 25.0 |
| மீன் தூள் ... | 25.0 | 25.0 | 25.0 |
| தாதுக் கலவை ... | 6.25 | 6.25 | 6.25 |
| வைட்டமின் கலவை ... | 0.05 | 0.05 | 0.05 |
| கிளிஞ்சல் தூள் ... | ... | ... | 6.25 |

நல்ல தண்ணீரும், தீனியும் கோழிகள் எப்பொழுதும் உண்ணுதற்கேற்ப வைக்கப்பட வேண்டும். முட்டையிடும் கோழிகளுக்கு கிளிஞ்சல்துண்டுகள் எப்பொழுதும் உண்ணக் கிடைக்குமாறு வைக்கப்பட வேண்டும்.

—டாக்டர் க. வேதநாயகம்

## முட்டைகளின் தரத்தைக் காப்பது எப்படி?

1. சுத்தமான முட்டைகளையே உற்பத்தி செய்ய வேண்டும்.

2. நாள்தோறும் நான்கு முறை முட்டைகளைச் சேகரித்தல் அவசியம்.

3. முட்டைகளைக் குளிர்ந்த அறையில் 55 டிகிரி முதல் 60 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தில் சேகரித்து வைத்திட வேண்டும்.

4. முட்டைப் பெட்டிகளைக் குளிர்ந்த இடத்தில் வைத்திருப்பது மிக நல்லது.

5. முட்டையின் குறுகிய பாகம் கீழ் இருக்கும் வண்ணம் பெட்டியில் அடுக்க வேண்டும்.

6. முட்டைகளை வாரம் இரண்டு தடவைகளாவது விற்பனை செய்து விடுவது மிக மிக அவசியம்.

—o—





கோழிகளைக் கொல்வதற்காக உள்ள கருவியின் கூம்புவடிவக் குழாய் களில் கோழிகளைத் தொங்க விட்டு, அவை களின் குரல் வளையை அறுத்து இரத்தம் வடிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் கோழிகள் துடிப்பதில்லை.

# கிலோ ரூபாய் 6-50

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையிலும் சைதாப்பேட்டை, மயிலாப்பூர் ஆகிய இடங் களில் உள்ள கால்நடை மருத்துவமனை களிலும் பதப்படுத்தப்பட்ட கோழிகள் கிலோ ரூபாய் 6-50 வீதம் விற்கப்படுகின்றன.

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் நவீன முறையில் துப்புரவாகக் கோழி இறைச்சி தயாரிப்பதை இப்பக்கத்திலுள்ள படங்கள் விளக்குகின்றன.



வெந்நீரில் அமிழ்த்திய கோழிகளை 'பிளக்கர்' (Plucker) என்னும் கருவியில் இட்டு, கருவியைச் சுற்றச் செய்து இறக்கைகள் அப்புறப் படுத்தப்படுகின்றன.





இரத்தம் வடிந்த பிறகு கோழிகள் 'ஸ்கோல்டர்' (Scalder) என்னும் கருவியில் உள்ள 140 டிகிரி (பாரன்ஹீட்) வெந்நீரில் 2 முதல் 3 நிமிடம் வரை அமிழ்த்தப்படு கின்றன. இதனால் இறகுக்கால்கள் மென்மை யாவதால் இறகுகளை எளிதில் நீக்க முடியும்.





இறகு நீக்கப்பட்ட கோழிகளின் கால்களும், விரல்களும், குடல்களும், துப்புரவான முறையில் நீக்கப்படுகின்றன (Eviseration).

கழுத்துப் பாகத்திலுள்ள தோலே அறுத்து சுவாசக் குழலும், இரைப்பையும் நீக்கப்படுகின்றன. வயிற்றின் அடிப் பாகத்தில் அறுத்து, குடல், ஈரல், இதயம் நுரையீரல் போன்ற உறுப்புகள் வெளியில் எடுக்கப்படுகின்றன.

பின் வயிறு உள்பாகம் நன்கு கழுவப்படுகிறது.

இதயத்தை இரண்டாக அறுத்து அதில் உள்ள இரத்தம் சுத்தப்படுத்தப் படுகிறது.



தூய்மைப்படுத்திய கோழியை பிளாஸ்டிக் பைகளில் வைத்து உடனே குளிரச் செய்தல் (0 டிகிரி முதல் 1 டிகிரி சென்டிகிரேட்).

இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட கோழிகளை 0 முதல் 1 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் 7 நாட்கள் வரையிலும், 23 முதல் 40 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் உறைநிலை பதனப்படுத்தப்பட்டால் 6 முதல் 9 மாதங்கள் வரையிலும் கெடாமல் பாதுகாக்கலாம்.



தூய்மைப்படுத்திய ஈரல், இதயம், இரைப்பை, கழுத்து ஆகிய உறுப்புகள் பிளாஸ்டிக் பையில் அடைக்கப்பட்டுச் சுத்தப்படுத்திய வயிற்றுப் பாகத்திற்குள் வைத்து மூடப்படுகின்றன.





# புழைக்கடைக் கோழிப் பண்ணை

பேராசிரியர்
சி.ஏ.பெருமாள்

**கோ**ழி வளர்ப்பதைச் சற்று தரக்குறைவானதும், அசுத்தமானதுமான ஒரு வீண் பொழுது போக்கெனக் கருதியவன் நான். சுமார் எட்டாண்டுகளுக்கு முன்புதான், நான் கோழி வளர்ப்பை ஒரு பொழுதுபோக்காக மேற்கொள்ளலானேன். அதுவும் எதிர்பாராமல் ஏற்பட்டதே! அறுத்துக் கறி சமைப்பதற்காக வாங்கிய, சிலுவை என்று பொதுவாகக் கூறப்படும் நாட்டுக் கோழிகள் சில எனது கொல்லைப்புறத்தில் தங்கிப் போய்விட நேர்ந்தது. அவைகள் முட்டையிடத் தொடங்கி விடவே, அவற்றைக் கொல்வதையும் தள்ளிப் போட வேண்டியதாயிற்று. அவைகள் பொன் முட்டையிடும் வாத்துகளாகத் தோன்றவே, கொல்ல மனமில்லாமல் வளர்க்க வேண்டியதாயிற்று. இதிலிருந்துதான் கோழி வளர்க்கும் ஆசை ஏற்பட்டது. சென்னைக் கால்நடைக் கல்லூரி, கோழி இன ஆராய்ச்சித்துறை நண்பர் ஒருவரின் உதவியால் முதன் முதலில் பத்து வெள்ளை 'மேயர் இன' கோழிகளை வாங்கி வளர்க்கலானேன். நாட்டுக் கோழிகளைக் கூண்டில் அடைத்து இரைபோட்டு முட்டை எடுப்பது நட்டமானது என்றும், 'வெள்ளை லக்கார்ன்' (White Leghorn) கோழிகள் அடை காக்காததனால் அதிக முட்டைகிடைக்க வாய்ப்பு உண்டு என்றும் அந்த டாக்டர் கூறியதனால்தான், நான் வெள்ளைக் கோழிகளை வளர்க்க சிறியதோர் கூண்டை அமைத்தேன். அதன் பின் 'வெள்ளை லெக்கார்ன்' இனத்தைச் சேர்ந்த பல்வேறு வகைக் கோழிகளையும் 'சிவப்பு போந்தா' (Rhode Island Red 'வெள்ளை ராக்' (White Rock), வான் கோழி முதலிய பலவினக் கோழிகளை வளர்ப்பதிலும், இன ஆராய்ச்சி செய்வதிலும் ஆர்வமடைந்தேன். முதன் முதலில் பொழுது போக்காக (Hobby) தொடங்கிய கோழி வளர்ப்பு, காலப்போக்கில் இலாபம் தரும் ஒரு தொழிலாக, என் வீட்டுப் பின்புறம் உள்ள கொல்லையில் வளர ஆரம்பித்தது. எனது அனுபவங்களையும், அதனால் பெற்ற அனுகூலங்களையும் இங்கே கூற விரும்புகின்றேன்.

எனது வீட்டிற்குப் பின்புறம் காலி இடமென் சிறிது இடமேயுள்ளது. ஒரு பெரிய கோழிப் பண்ணையைத் தொடங்குவது என்பது இயலாது. மேலும் நான் காலை 10 மணிக்கு மேல் மாலை 6 மணி வரையும் அலுவலக வேலையாகப் போய் விடுவதால், சுமார் 50 கோழிகளுக்கு மேல் பராமரிப்பதும் இயலாத காரியமாகும். ஆகவே நான் சுமார் 50 முதல் 75 கோழிகளையே வளர்ப்பது என்ற திட்டத்தில் வீட்டிற்குப் பின்புறமுள்ள காலிப் பகுதியில் (15'×12' 180 சதுர அடி) சுமார் 180 சதுர அடி பரப்பளவில் ஒரு கூண்டை நிறுவினேன்.

கூண்டின் அடியில் நல்ல காங்கிரீட் தளம் போட்டு 9'' அங்குல உயரத்துக்கு மரத்தூள் கொட்டியுள்ளேன். இதை ஆண்டுக்கொரு முறை மாற்றவிட்டுப் புதிய மரத்தூள் கொட்டி வருகிறேன். இரை போடுவதற்கான நான்கு பெட்டிகளும், தண்ணீர் வைப்பதற்கான வசதிகளும், முட்டையிடத் தேவையான மண் பானைகள், போன்ற வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. சுமார் 60 கோழிகள் வளர்க்கப்படும் இந்தக் கூண்டை இரண்டாகப் பிரித்து வைத்திருக்கின்றேன். சில சமயங்களில், ஒரு தனி ரகக் கோழி இனத்தைப் பெருக்க வேண்டுமென்றாலும், ஆராய்ச்சிகள் நடத்த வேண்டுமென்றாலும் இந்தத் தனி அறை உதவுகின்றது.

கோழிப் பராமரிப்பு மிகவும் இலகுவான ஒன்றே. விஞ்ஞானம் முன்னேறிவிட்ட இந்தக் காலத்தில், கோழிப் பராமரிப்பு ஒரு சிரமமான காரியமன்று. சென்னைக் கால்நடைக் கல்லூரி, கோழி இன வளர்ச்சித் துறையிலும் (Poultry Science Department) நந்தனம் கோழி ஆராய்ச்சி நிலையத்திலும் அடை வைப்பதற்குத் தேவையான கோழி முட்டைகளை வாங்கி, அடை வைத்துக் குஞ்சு பொரித்து வளர்த்துள்ளேன். இது கொஞ்சம் சிரமமான காரியமாகும். அடைகாக்கப் போதிய அளவு நாட்டுக் கோழிகள் கிடைப்பதில்லை. மேலும் 10 குஞ்சுகளுக்கு மேல், ஒரு கோழியின் மூலம் கிடைப்பதுமில்லை. ஓரிரு ஆண்டுகள் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்த நான், மேற்கூறிய துறை மற்றும் நிலையத்தினரின் ஆலோசனைப்படி இம்முறையைக் கைவிட்டுவிட்டு, அவர்களிடமே தேவையான கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்கலானேன். சாதாரணமாக 10 முதல் 12 வாரம் வரை அவர்களால் பாதுகாக்கப்பட்ட கோழிக் குஞ்சுகள், அங்கிருந்து வேறு இடம் சென்றாலும் ஒரு தொந்தரவுமின்றி செவ்வனே வளர்கின்றன. நான் இது வரையும் ஒரு வாரம் வயதான கோழிக் குஞ்சுகளில் இருந்து, 12 வாரம் வரை வயதான குஞ்சுகள் வாங்கி வளர்த்துள்ளேன். டாக்டர்களின் ஆலோசனையைப் பெற்று அவ்வப்போது 'ராணிக்கெட்' மற்றும் அம்மை நோய் போன்ற நோய்களுக்குத் தேவையான தடுப்பு ஊசி முதலானவற்றைக் கொடுத்து வருகிறேன். விஞ்ஞான ரீதியாக டாக்டர்கள் தரும் ஆலோசனையோடு, நானும் சில விதிகளைக் கடைப்பிடித்து வருகிறேன். பொதுவாகக் கோழிக் கூண்டு இயற்கைச் சூழ்நிலையை உடையதாக இருக்க வேண்டும் (Natural Environment) நாம் கோழிகளுக்குத் தேவையான

இயற்கைச் சூழ்நிலையைக் கூண்டிற்குள் உருவாக்க வேண்டும். நாள்தோறும் கூண்டை மேலெழுந்தவாரியாகப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். அன்றாடம் தண்ணீரை மாற்றுவதோடு, பாத்திரத்தையும் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பின்பு குளிர்ந்த சுத்தமான தண்ணீரை வைக்க வேண்டும். நாள்தோறும் ஒவ்வொரு கோழிக்கும் சிறிதளவேனும் 50 கிராம் கீரை கொடுக்க வேண்டும். அவ்வப்போது கொஞ்சம் கிளிஞ்சல் துண்டுகள் கொடுக்க வேண்டும். அவ்வப்போது ஏதாவது சிறு பிரச்சினைகளுக்கு டாக்டர்களைக் கலந்து வேண்டிய மருந்து கொடுக்க வேண்டும்.

நான் மேற்கூறியவாறுதான் எனது கொல்லைப்புறக் கோழிப் பண்ணையைப் பராமரித்து வருகிறேன்.

கோழிகளுக்குக் கோழித் தீவன வாரியத்திடமிருந்து ஒழுங்காக, நிரந்தரமாக உணவு கிடைத்துக் கொண்டிருந்தால் ஒருவிதத் தொல்லையும் இல்லை. ஏனெனில் கிலோ தீனி விலை 75 காசு. அதுவும் நல்ல தரமான தீனி. தீனிப் பிரச்சினைதான் முக்கியமான பிரச்சினையாகவும், கோழி வளர்ப்பதில் உள்ள முக்கிய முட்டுக்கட்டை யெனவும் கருதுகின்றேன்.

இந்த எட்டு ஆண்டு அனுபவத்தில் கோழி வளர்ப்பது மிகவும் இலாபகரமானது என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். 50 அல்லது 60 கோழிகள் வளர்க்கும்போது, ஏதோ ஒன்றிரண்டு செத்துப் போவதுண்டு. அவற்றையெல்லாம் ஒரு பெரிய இழப்பாகக் கருதுவதற்கில்லை. சென்னைக் கால்நடைக் கல்லூரியினரால் ஆராய்ச்சி செய்து பராமரிக்கப்பட்ட வெள்ளை லெக்கார்ன்—மேயர் வம்ச (White Leghorn—Meyer Strain) கோழிக் குஞ்சுகளை, அவர்களது நந்தனம் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வாங்கினேன். இப்போது என்னிடம் அவைகள்தான் இருக்கின்றன. அவை 5-6 மாதங்களில் முட்டையிட ஆரம்பித்தன. இப்போது அவைகளுக்கு 9 அல்லது 10 மாதம் வயதாகிறது. அவை சராசரி நாள்தோறும் 40 முட்டைகள் இடுகின்றன. அதில் எனது வீட்டுத் தேவைக்குப் போக 35 முட்டையையாவது விற்க முடிகிறது. எனது அனுபவத்தில், கோழியின் விலை, கோழித் தீனி, மருந்து, கீரை போன்ற எல்லாச் செலவிற்கும் போக, கோழி ஒன்றுக்கு மாத மொன்றிற்கு இரண்டு ரூபாய் குறைந்த பட்சம் இலாபம் கிடைக்கிறது. இதைச் சொன்னால் விந்தையாக இருக்கும். சில சமயங்களில் இலாபம் இதை விடக் கூடுதலாய் இருக்குமே தவிர குறைவதில்லை.

சென்னை நகரில், நடுத்தர மக்கள் என்னைப்போல் கோழிப்பண்ணைகள் வைத்தால் அவர்களுக்குச் சற்று வருமானம் வருவதோடு, நாட்டிலிருக்கும் உணவுப்பஞ்சத்தைத் தீர்த்திட சற்றே உதவ முடியும் என்பதில் சற்றும் ஐயமில்லை!






1. பிசின் தயாரித்தல்.
2. வண்ண வேலைப்பாடு.
3. ரொட்டி, 'கேக்' தயாரித்தல்.
4. சாயவேலை.
5. தோலினால் ஆன பொருட்கள் உற்பத்தி.
6. மருந்து தயாரித்தல்
7. 'வார்னிஷ்' தயாரித்தல், பெயிண்டு தயாரித்தல்.
8. பைண்டிங் வேலை.
9. தந்த வேலை.



10. சோப்பு தயாரித்தல்.
11. மை செய்தல்.
12. புகைப்படத் தொழில்.
13. அச்சு வேலை.
14. இரப்பர் தொழில்.
15. தடுப்பு ஊசி மருந்துகள் தயாரித்தல்.
16. உரம் உற்பத்தி.
17. செயற்கைக் கருத்தரிக்கச் செய்தல்.
18. மது தயாரித்தல்.

# தமிழ்நாட்டில் கோழிப்பண்ணை வளர்ச்சி



**டாக்டர் ஜி. வெங்கடாசலம்**

இயக்குநர்,

கால்நடை பராமரிப்புத்துறை

நம் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், அதே நேரத்தில் நமது உணவில் ஊட்டச் சத்துக்களை அதிகரிக்கவும் உள்ள எளிய, விரைவான வழிகளில் ஒன்றாகக் கோழிப்பண்ணைகளின் வளர்ச்சி அமைந்துள்ளது. நமது நாட்டில் உணவுப் பற்றாக் குறையும், நமது மக்களின் உணவில் கடுமையான புரதச்சத்துப் பற்றாக்குறையும்நிலவும் இந்த நேரத்திலே, கோழிப் பண்ணைகளின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது.

கோழிப் பண்ணை, வேளாண்மையில் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. நம் நாட்டு மக்களின் உணவைப் பெருமளவில் சம நிலைப்படுத்துவதில் கோழிப் பண்ணை முக்கிய இடம் பெற்றுள்ளது. ஏராளமான மக்கள் கோழிப் பண்ணைகளின் மூலம் துணை வருவாய் பெற்று வரும்போது, பலர் தங்கள் வாழ்வுக்குக் கோழிப் பண்ணைகளையே நேரடியாகவும், முழு அளவிலும் நம்பியுள்ளனர்.

கோழிப் பண்ணைத் தொழில் தமிழ் நாட்டில் வெகுவாக விரைவாக வளர்ச்சியடைந்துள்ளது. முன்பெல்லாம் வீட்டின் பின் புறத்தில் சிறு அளவில் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்று கோழிப் பண்ணைகள் 500 முதல் 10,000 கோழிகள் கொண்ட, வாணிப அடிப்படையில் இயங்கும் கோழிப் பண்ணைகளாக வளர்ந்துள்ளன. தற்பொழுது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3,000 கோழிப் பண்ணைகள் உள்ளன. அவைகளில் சற்றேறக் குறைய 4 இலட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. ஆகவே, கோழிப் பண்ணை அமைப்பது ஆதாயம் தரும் தொழிலாக மாறியுள்ளது. கோழிப் பண்ணைகளைத் தரத்திலும், எண்ணிக்கையிலும் மேம்படுத்துவதற்காகவும், புரதப் பசியைப்

போக்கிட வேண்டும் என்ற நோக்குடனும், தொழில் நுணுக்க உதவி, கோழிப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான குஞ்சுகள் வழங்குதல், வளர்ப்பதற்கான கோழிகள், தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்தல், விநியோகித்தல் போன்ற பல்வேறு முறைகளைத் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை மேற்கொண்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையைத் திருத்தியமைப்பதற்கு முன்பு (1—1—70-க்கு முன்பு) தனிப்பட்ட கோழிப் பண்ணையாளர்களுக்குக் குஞ்சு பொரிக்கும் முட்டைகள், கோழிக் குஞ்சுகள், வளர்ப்பதற்குத் தகுதியான பருவமடைந்த கோழிகள் ஆகியவற்றை வழங்கவும், கோழிப் பண்ணை பற்றிய அறிவினைப் பரப்பிடவும் தமிழகமெங்கும் கோழி விரிவாக்க நிலையங்களே இருந்தன. அந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளும், கோழிகளும் வரையறைக்கு உட்பட்ட எண்ணிக்கையிலேயே இருந்தன. கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைத் தொழில் பெரும் வளர்ச்சியுற்றது. கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்பட்ட பிறகு, கோழி விரிவாக்க நிலையங்கள் 75-ல் இருந்து 39-ஆக (மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள கோழிப் பண்ணை உட்பட) குறைக்கப்பட்டன. கடந்த ஆண்டில் இந்த 39 நிலையங்களும் 61.24 இலட்சம் முட்டைகளையும், 5.37 இலட்சம் கோழிகளையும் உற்பத்தி செய்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்படுவதற்கு முந்திய ஆண்டில் 75 கோழி விரிவாக்க நிலையங்களாலும் 37.13 இலட்சம் கோழி முட்டைகளும், 5.20 இலட்சம் கோழிகளுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது கோழிப் பண்ணை உற்பத்தி அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. இவ்வாறாகப் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் கோழிப் பண்ணை அமைக்குமாறு உழவர் பெருமக்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

கோழி விரிவாக்க நிலையங்களும், கோழிப் பண்ணைகளும் கடந்த ஆறு ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகள் பின்வருமாறு உள்ளன :

**உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள்**

| ஆண்டு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1967—68... | ... | 30,97,249 |
| 1968—69... | ... | 37,13,786 |
| 1969—70... | ... | 29,97,026 |
| 1970—71... | ... | 41,79,826 |
| 1971—72 | ... | 56,31,295 |
| 1972—73 | ... | 61,24,118 |

**வளர்ப்பதற்காக விற்கப்பட்ட கோழிகள்**

| ஆண்டு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1967—68 | ... | 1,38,600 |
| 1968—69 | ... | 1,08,412 |
| 1969—70 | ... | 1,18,549 |
| 1970—71 | ... | 72,953 |
| 1971—72 | ... | 1,90,533 |
| 1972—73 | ... | 1,79,578 |

**குஞ்சு பொரித்தல் மூலம் பெற்ற கோழிகள்**

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967—68 | ... | ... | 4,10,465 |
| 1968—69 | ... | ... | 5,20,275 |
| 1969—70 | ... | ... | 2,06,290 |
| 1970—71 | ... | ... | 3,99,978 |
| 1971—72 | ... | ... | 5,37,032 |
| 1972—73 | ... | ... | 5,37,462 |

### குஞ்சு பொரிக்கும் நிலையங்கள்

தமிழ்நாட்டில் காட்டுப்பாக்கம், ஓசூர், கப்பலூர் ஆகிய 3 இடங்களிலும் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் உள்ளன. கோழி வளர்ப்பவர்களால் வாங்கப்படும் ஒரு நாள் வயதுடைய இனம் பிரிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளில் பெரும்பாலானவற்றை இம் மூன்று கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்களே வழங்கி வருகின்றன. கோழிப் பண்ணைத் தொழிலில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தின் காரணமாக, ஏராளமான உழவர்கள் -- தங்கள் கோழிகளைக்கொண்டு அடை காக்கச் செய்து குஞ்சு பொரிக்கச் செய்வதற்குப் பதிலாக—ஒரு நாள் வயதுடைய குஞ்சுகளையே வாங்குகின்றனர்.

குஞ்சு பொரிப்பு நிலையங்கள் முட்டைகளை, 'இன்குபேட்டர்' கருவியில் வைத்துக் குஞ்சு பொரிக்கச் செய்து, அவைகளைக் கோழி விரிவாக்க நிலையங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்குகின்றன. இந் நிலையங்கள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் மாதத்திற்கு 20,000 கோழிக் குஞ்சுகளாகும். பொது மக்களின் உடனடித் தேவையை ஈடு செய்ய ஒவ்வொரு நிலையமும் ஓர் ஆண்டில் 2.5 இலட்சம் குஞ்சுகளை உற்பத்தி செய்யவல்லது. இம் மூன்று நிலையங்களும் கீழ்க் கண்டவாறு குஞ்சுகளை உற்பத்தி செய்துள்ளன.

#### ஓசூர் நிலையம்

| ஆண்டு | | | குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1970—71 | ... | ... | 1,22,936 |
| 1971—72 | ... | ... | 2,06,363 |

#### காட்டுப்பாக்கம் நிலையம்

| ஆண்டு | | | குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1970—71 | ... | ... | 64,578 |
| 1971—72 | ... | ... | 82,357 |

#### கப்பலூர் நிலையம்

| ஆண்டு | | | குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1970—71 | ... | ... | 98,811 |
| 1971—72 | ... | ... | 1,47,003 |

### கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப் பெறுவதற்கு முன்பு தமிழ்நாட்டில் 23 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களே இருந்தன. கடந்த 2 ஆண்டுகளில் கால்நடைப் பராமரிப்புத் துறையால் 139 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சங்கங்கள், உழவர்களுக்குத் தேவையான நிதியுதவிகளும், இதர வசதிகளையும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கிடைத்திடச் செய்ய உதவுகின்றன.

ஒவ்வொரு சங்கத்திலும் 100 உழவர்கள் உறுப்பினர்களாக உள்ளதாலும், ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது 100 கோழிகள் வளர்ப்பதாலும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து நாளொன்றுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் முட்டைகளை உற்பத்தி செய்கின்றன.

கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்து உதவ நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்மீன் வந்துள்ளன. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா கடன் உதவியுடன், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம் துவக்கப் பட்டுள்ளது. இவ்வங்கி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களில் கோழி வளர்ப்புக்காக மொத்தம் 1.28 கோடி ரூபாய் கடன் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அதிக முட்டையிடும் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இக் கோழிப் பண்ணைகளை அவ்வப்போது பார்வையிட்டு, அவைகளின் வளர்ச்சிக்குக் கால்நடைப் பராமரிப்புத் துறையினர் உதவி வருகின்றனர். இதுவரை கால் நடைப் பராமரிப்புத்துறை இலாபு நட்டமின்றி சம நிலை கோழித் தீவனத்தை வழங்கி வந்தது.

தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் வெற்றி, முக்கியமாக விற்பனைத் திட்டத்தைப் பொறுத்தே உள்ளது. இதை உணர்ந்தே, விற்பனைத்திட்டம் துவக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளுக்கு நிலையான விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தவும், நியாயமான விலை கிடைக்கவுமே விற்பனைத் திட்டம் துவக்கப்பட்டது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கோழி வளர்ப்பு பற்றிய வாணிபப் பணிகளையும் மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும். இதனால் தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகள் மேலும்வளர்ச்சியுறும்.

# நீரும் கோழியும்

நீர்—குடிநீர் —குடிப்பதற்கான தூய நீர்—கோழிகளுக்கு மிக மிக இன்றியமையாதது!

நீர்—குறை நீர்—தரையில் சிதறும் நீர்—மழைச் சாரல் நீர் அல்லது இதர காரணங்களால் ஏற்படும் நீர்—கோழிகளுக்கு மிகவும் கேடு விளைவிப்பது!

முன்னது இல்லாமல் கெடுவது கோழிகள்!

பின்னது இருப்பதால், ஏற்படுவதால், கெடுவது கோழிகள்!

உயிர் வாழும் எந்த உயிருக்கும் நீர்இன்றியமையாதது! ஏனெனில், உடலின் ஒவ்வொரு அணுவும் ''நீர்க் கோர்வை'' உள்ளது—''நீர்க் கோர்வையால்'' சூழப்பெற்றது—நீர்க் கோர்வையின் மூலமாக ஊட்டச் சத்தைப்பெற்று கழிவை அகற்றி, உயிர் வாழ்வது, செயலாற்றுவது. ஒவ்வொரு உயிரின் உடல் வெப்பமும் ஒரு குறிப்பிட்ட நிலையில் அமையப் பெற்றது. இதை இயற்கையான வெப்ப நிலை என்பர். மனிதனின் இந்த நிலை 98.4 டிகிரி 'பாரன்ஹீட்' ஆகும். இந்த நிலைக்கு, ஒரு குறுகிய அளவு மேலாகவோ அல்லது கீழாகவோ ஏற்படும் நிலையை, உடல் தாங்கவல்லது. உரிய வெப்ப நிலையில் உடலிருக்கும் பொழுது தான், எல்லா அவயவங்களும் ஒரே சீராக இயங்கி, உற்பத்தித் திறன் அல்லது வேலை செய்யும் திறன் அதிகமாகும் நிலை ஏற்படுகிறது. இருக்கும் இடத்தின் வெப்ப தட்ப நிலை, உடல் வெப்ப நிலையைப் பாதிக்க வல்லது. அதற்கேற்றாற்போல் குடி தண்ணீரின் தேவையும் மாறுபடும்.

கோழிகளின் இயற்கை வெப்ப நிலை 106 டிகிரி 'பாரன்ஹீட்'. இதர கால்நடைகளைப் போல், கோழிகளால் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க இயலாது. அலகால் சிறிய அளவு எடுத்து, தலையைத் தூக்கும்; அதன் காரணமாக தண்ணீர் உணவுக் குழாய் மூலமாக உள்ளே செல்லும். இவ்வகையில் தண்ணீரைப் பருகும் பழக்கம் உள்ளவை கோழிகள். ஆகவே, ஒரே சமயத்தில் சிறிய அளவு நீரையே பருகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளதால், கோழிகள் அடிக்கடி தண்ணீர் பருக வேண்டியுள்ளது. கோழிகள் நலமான நிலையிலும், சரியான அளவு முட்டை வைக்க வேண்டிய நிலையிலும் இருக்க வேண்டுமானால், கோழிகள் முன்பாக எப்பொழுதும் தட்டுப்பாடில்லாத வகையில் தண்ணீர் இருக்குமாறு செய்வது மிக அவசியமானது.

ஆழ் கூள முறையில் வீடு அமைத்துக் கோழிகளை வளர்க்கும் பொழுது ஒரு பக்கச் சுவரையொட்டித் தண்ணீர் வாய்க்கால் அமைத்து, அதில் எப்பொழுதும் தூய தண்ணீர் இருக்கும் வகையில் வீட்டை அமைப்பது மிகச் சிறந்த முறையாகும். இந்த வாய்க்கால் அமைப்பில் தண்ணீர் விடும்பொழுது, கோழிவீட்டின் உட்பகுதியில் தண்ணீர் வடியாதிருக்கும் வகையில் உள் விளிம்பை உயர்த்தி அமைப்பது சரியான முறையாகும். அதுவுமல்லாமல் தண்ணீர் வாய்க்காலின் அடிப்பாகம் தகுந்த உயரம் உள்ளதாக —தரை மட்டத்திலிருந்து ஏறத்தாழ 12 அங்குல உயரம் உள்ளதாக— அமைப்பதும் அவசியம். இவ்விதம் உயரமாக அமைப்பதின் காரணமாக கோழி நீரைப் பருகும் பொழுது, தரையில் தண்ணீர் சிந்துவது குறைவுபடும்.

இவ்விதமான கட்டட அமைப்பில்லாத கோழி வீடுகளில் தனியாகத் தண்ணீர் தொட்டிகள் வைக்கப் பெறல் வேண்டும். இவைகளைச் சரியான உயர நிலையில் அமைத்தால் தான், தண்ணீர் தரையில் சிந்தி ஆழ் கூளம் நனைவதைத் தடுக்க இயலும். தண்ணீர் வைக்க அகலமான பாத்திரங்கள்—மட்பாண்டங்கள் கூடப் போதுமானது. அவைகளை மேலிருந்து தொங்கவிட்டுத் தண்ணீர் வசதி செய்வது சுலபமானதும், சிறந்ததுமாகும். எந்த விதமான அமைப்பானாலும் தண்ணீர் ஊற்றும் பொழுது, கீழே சிதறாதவாறும், கோழிகள் தண்ணீர் பருகும் பொழுது சிதறுவது குறையும் வகையிலும், தகுந்த உயரத்தில் தண்ணீர்ப் பாத்திரத்தை அமைப்பது மிகவும் அவசியம். அதிகமான அளவு பாத்திரங்களை உபயோகித்து பரவலாக அமைப்பதின் மூலமாகக் கோழிகளின் சமீபத்திலேயே எப்பொழுதும் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

**டாக்டர்**
**கே. எஸ். சண்முக சுந்தரம்,**
**நிருவாக இயக்குநர்,**
**தமிழ்நாடு கோழி வளர்ப்பு**
**நிறுவனம்.**

போதிய அளவு தண்ணீர் கிடைக்காமலிருக்கும் கோழிகளின் உடல் நலம் பாதிக்கப்படும். சிறகுகள் உதிர ஆரம்பித்து, முட்டை வைக்கும் தன்மை குறைந்து விடும்! ஆகவே நாம் எதிர் பார்க்கும் அளவிற்கு, கோழிகள் அவைகளின் முழு சக்தியின் அளவிற்கு முட்டையிட்டு, நமக்கு உரிய ஆதாயத்தைக்கொடுக்க, நாம் செய்ய வேண்டிய கடமை எல்லாக் கோழிகளுக்கும், எல்லா நேரத்திலும், எளிதில் பருகக் கூடிய நிலையில், தண்ணீர் இருக்குமாறு செய்வதேயாகும்.

தண்ணீர்ப்பாத்திரம் வறண்டால் முட்டை வருமானம் வறண்டுவிடும்!

தீவனப் பற்றாக்குறையை ஓரளவிற்குக் கோழிகள் சமாளிக்க வல்லது. ஆனால் தண்ணீர்ப் பற்றாக் குறையைக் கோழிகளால் சமாளிக்க முடியாது. தண்ணீர்ப் பற்றாக் குறை ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு—முதலுக்கே மோச

மாகக் கூடியது—என்ற உண்மையைக் கருத்தில் கொள்வது அவசியம்.

கோழிகளுக்கான வீடு அமைக்கும் பொழுது, கூரையின் பக்கங்கள் சுவரிலிருந்து நான்கு அடி அகலமிருக்குமாறு தாழ்வாக அமைக்கப் பெறல் வேண்டும். கூரையின் விளிம்பிலிருந்து குறைந்தது மூன்று அங்குல அகலத்திற்காவது 'விளிம்புத் தடுப்பு'. அமைப்பதும் அவசியம். இவ்வாறு அமைப்பதால், காற்றுடன் கலந்த மழை பெய்தாலும், கோழி வீட்டில் மழைச்சாரல் ஏற்படாது. மழைச் சாரல் காரணமாகக் கோழிகள் நனையுமானால் பெரும் நோய் ஏற்பட்டு மரணமடையும். சரிவான முறையில் கூரை அமைக்காத காரணத்தினால் ஏற்படும் மழைச்சாரலைத் தவிர்க்கச் சிலர் கோணிப் பைகளை வலை அடித்த பகுதியில் தொங்க விடுகிறார்கள். இது இன்னும் மோசமானது! தடுப்புச்சாதனமில்லா திருந்தால் மழை பெய்யும் பொழுதுதான் சாரல் இருக்கும். ஆனால் கோணிப் பைகளைக் கட்டுவதால், கோணிகள் நனைந்து, மழை விட்ட பின்னரும் பல மணி நேரங்களுக்குக் கோணியில் உள்ள ஈரத்தினால் ஈரக் காற்று வீசும். இது கோழிகளுக்கு




மிகுந்த கேடு விளைவித்து, இழப்பை ஏற்படுத்தும்.

கூரை அமைப்புச் சரிவாக அமைக்கப் பெற வில்லையானால் மூங்கில் தட்டிகளைக் கூரை விளிம்பில் இணைத்து, 'சாரல் தடுப்பு' அமைப்பதுதான் சிறந்த முறை. சாரலால் நேரடி நனைவு ஏற்பட்டு, கோழிகள் பாதிக்கப் பெறுகின்றன. ஆழ் கூளம் நனைந்து ஈரமாக இருக்கும். தண்ணீர் தொட்டிகளைச் சரியான முறையில் அமைக்காத காரணத்தினால் அல்லது தண்ணீர்ச்சாதனங்களை நிரப்பும் பொழுது தண்ணீர் கீழேசிந்தி ஆழ்கூளம் நனைகிறது. ஆழ் கூளம் எந்தக் காரணத்தினாலாவது நனைந்தால், நனைந்த பகுதியை உடனடியாக அப்புறப்படுத்தி விடல் வேண்டும். இல்லாவிட்டால் கூளத்தில் ஈரம் அதிகமாக இருக்கும்காரணத்தினால், நோய்க் கிருமிகள் அதிக அளவில்பெருகி கோடானு கோடியாகப் பெருகி—பலவிதமான நோய்களுக்குக் காரணமாகி—பெரும் இழப்பைஏற்படுத்தும்.

கோழிகளுக்குக் குடி தண்ணீர் கிடைக்கச் செய்வது பார்ப்பதற்கும், கேட்பதற்கும், செயலாற்றுவதற்கும் சுலபமானது. சுலபம், என்ற காரணத்தினாலேயே கவனிக்கப் பெறாமலிருப்பதும் தண்ணீர் வசதியேயாகும். சிறகுகள் உதிர ஆரம்பிப்பது தண்ணீர் பற்றாக்குறையினால்தான்! சிறகுகள் உதிர ஆரம்பித்தால் 2 மாதங்களுக்கு முட்டையிடுவது பாதிக்கப் பெறும்!

கோழிப் பண்ணையில் வருவாய் இழப்பதற்கு முதல் காரணம் 'தண்ணீர் பற்றாக் குறையே'! எல்லா நோய்களுக்கும் அடிப்படைக் காரணங்கள் குடிதண்ணீர் பற்றாக்குறையும், நனைந்த ஆழ் கூளமும் தான் என்பதைக் கருத்தில் கொண்டு ஆவன செய்தால், உறுதியாக கோழிப் பண்ணையிலிருந்து உரிய வருவாய், உயர்ந்த வருவாய் பெறலாம்.

## உங்கள் கோழிகளுக்குச் செய்ய வேண்டிய நோய்த் தடுப்பு முறைகள்!

1 முதல் 5 நாட்களுக்குள்—'ராணிகட்' நோய்த்தடுப்பு ஊசி (RDVF).

2 வார வயதில்—கோழி அம்மைத் தடுப்பு ஊசி (புரு அம்மை மருந்து).

4 வார வயதில் — மூக்கு வெட்டுதல்.

6 வார வயதில் — மீண்டும் ராணிகட் நோய்த்தடுப்பு ஊசி (RDVK).

8 வார வயதில்—குடல் புழு நீக்குதல். மீண்டும் 2 மாதத்திற்கு ஒரு முறை செய்யவேண்டும்.

10 வார வயதில்—கோழி அம்மைத் தடுப்பு ஊசி.

12 வார வயதில்—கோழிப் பேன் நீக்குதல். மீண்டும் 2 மாதத்திற்கு ஒரு முறை பேன் நீக்குதல்.



# கோழி வீடு

முட்டையிடும் கோழிகள் சிறந்த முறையில் முட்டையிடக் கோழிவீடு தேவை. ஒவ்வொரு கோழிக்கும் குறைந்தது 3 முதல் 4 சதுர அடி அளவாவது இருப்பிடம் கொடுக்க வேண்டும். கோழிகளில் அதிக உற்பத்திக்குத் தகுதியான தட்ப வெட்ப நிலை 60 டிகிரி முதல் 70 டிகிரி வரை பாரன் ஹீட் (15·5 டிகிரி முதல் 21 டிகிரி செண்டி கிரேட்) ஆகும்.

**இடம் தேர்ந்தெடுத்தல்:**

1. கோழி வீடுகள் கட்ட மேட்டுப்பாங்கான இடமும், வடிகால் தன்மையுடனும் இருக்க வேண்டும். இத் தன்மையுள்ள இடம் தண்ணீர் தேங்காமலும், ஈரமாகாமலும் தடுக்கும்.

2. நிழல் தரும் மரங்களும், செடிகளும் இருந்தால் கோழி வீட்டிற்குச் சூரிய வெப்பத்தின் பிரதிபலிப்பைத் தடுத்துக் குளிர்ச்சியைத் தரும்.

3. பண்ணையைச் சிறந்த முறையில் நடத்துவதற்குக் கோழி வீடு, பண்ணையின் மேற்பார்வையாளரின் இருப்பிடத்திலிருந்து தக்க தூரத்தில் இருத்தல் வேண்டும்.

**கட்டடம் கட்ட திட்டமிடுதல்:**

அந்தந்த இடத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு மிகவும் சிக்கன முறையில் கோழி வீடுகளைக் கட்டுதல் வேண்டும். கோழி வீடு கட்டும் பொழுது தெற்கு வடக்கு நீளவாக்கில் அமைத்தால் காலை மாலை சூரிய வெப்பத்தினால் ஏற்படும் தீங்கைத் தவிர்க்க ஏதுவாகும்—கோழி வீட்டினுள் எலிகள் நுழையா வண்ணம் அமைத்தல் வேண்டும்.

**கடை. கால்:**

கடைகால் வாய்க்கால் $1\frac{1}{2}$ அடி ஆழமும், $1\frac{1}{2}$ அடி அகலமும் எடுத்தல் வேண்டும். அதில் 6 அங்குல அளவு செங்கல் சுண்ணும்புக் கலவையோ அல்லது செங்கல்லுடன் கலந்த சிமெண்ட் கலவையோ அடைத்து 9 அங்குல அகலமுள்ள $1\frac{1}{2}$ அடி உயரமும் உள்ள கடைக்கால் சுவர் மேலெழுப்பவேண்டும். அதாவது தரை மட்டத்திற்கு மேல் 6 அங்குலச் சுவர் இருத்தல் வேண்டும். அதற்கு மேல், மேல் சுவர் $4\frac{1}{2}$ அங்குல அகலத்தில் $1\frac{1}{2}$ அடி உயரத்திற்கு வீட்டின் அளவு முழுவதும் கட்டுதல் வேண்டும். கூரை விளிம்பின் உயரம் 6 அடியும், கூரை உச்சிமேடு 8 அடி உயரமும் தரை மட்டத்திலிருந்து இருத்தல் வேண்டும்.

**சுவர்:**

இவ்வாறு கட்டப்பட்ட சுவருக்கும் கூரை விளிம்பிற்கும் இடையில் உள்ள இடத்தை $\frac{1}{2}$ முதல் 1 அங்குலம் வரை அகலமுள்ள கம்பிவலை கொண்டு அடைக்கவேண்டும்.

**கூரை:**

கூரையை 'லைட் ரூபிங்' அட்டையாலோ அல்லது 'ஆஸ்பெஸ்டாஸ்' அல்லது



அலுமினியம் தகடு கொண்டோ அமைக்க வேண்டும். கூரையின் உச்சி உயரம் 6 அடி அளவும், கூரை விளிம்பின் உயரம் 8 அடியும் இருத்தல் அவசியம்.

**தரை:**

நல்ல 'கான்கிரிட்' தரை கோழி வீட்டிற்கு இன்றியமையாததாகும். (ஆழ் கூளங்கள்) (டீப் லிட்டர்) 6 அங்குல உயரமும், எப்பொழும் உலர்ந்த தன்மையுடனும் இருத்தல் வேண்டும். மர அறுவைத் தூள், நெல், உமி, கடலே உமி, கரும்புச் சக்கை இவைகளை ஆழ் கூளப் பொருட்களாக உபயோகிக்கலாம். பொதுவாக 3 முதல் 4 சதுர அடி தரை பரப்பளவு ஒவ்வொரு முட்டையிடும் கோழிக்கும் இருக்குமாறு அமைத்தல் வேண்டும்.

**ஒளி அமைப்பு:**

200 சதுர அடி தரை பரப்பிற்கு 40 'வாட்' மின் குமிழ் விளக்கு ஒன்று வீதம் 6 அடி உயரத்தில் பொருத்தினுல் இரவில் கோழிகள் தீவனம் தின்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மற்ற உபகரணங்கள்:**

**அ. தீவனத் தொட்டி:**

இவை வட்டமாகவோ அல்லது நீள வடிவமுள்ளதாகவோ மரத்தில் அல்லது உலோகத்திஞல் செய்யப்பட்டதாக இருக்கலாம். ஒரு கோழிக்குத் தேவையான தீவனம் உண்ணும் இடஅளவு பின்வருமாறு இருக்க வேண்டும்.

| | நீளத்தொட்டிகள். | வட்டத் தொட்டிகள். |
|---|---|---|
| பருவமடைந்த கோழிகள் | ஒரு கோழிக்கு | (1 முதல் $1\frac{1}{2}$ அடி விட்டம். |
| (20 வாரத்திற்கு மேல்) | 3 முதல் 4 அங்குலம். | 20 கோழிகளுக்கு ஒன்று வீதம். |

**ஆ. தண்ணீர்த் தொட்டி:**

இவை தாமே இயங்குபவைகளாகவோ அல்லது நாள் தோறும் நிரப்பப்படுபவைகளாகவோ இருக்கலாம். நீள அல்லது வட்ட வடிவமுள்ளதாகவும், மரம், பிளாஸ்டிக் அல்லது சிமெண்டிஞல் செய்யப் பட்டதாகவும் அமைக்கலாம்.

தண்ணீர் குடிக்க இடவசதி பின்வருமாறு இருக்க வேண்டும்.

| வயது | தண்ணீர் குடிக்கத் தேவையான இடம் நீளத்தொட்டி. | வட்டத்தொட்டி. (18 அங்குல விட்டம்) |
|---|---|---|
| பருவமடைந்த கோழி | 1 அங்குலம். | 50 கோழிகளுக்கு ஒன்று வீதம். |



தண்ணீர், தீவனத் தொட்டிகள் கம்பி அமைப்புகளால் பாதுகாக்கப் பட வேண்டும்.

**இ. முட்டைப் பெட்டிகள்:**

சுத்தமான முட்டைகள் பெற, ஒரு கோழி மட்டும் ஒரு நேரத்தில் முட்டையிட வசதியுள்ள அல்லது பல கோழிகள் ஏக காலத்தில் முட்டையிட வசதியுள்ள பெட்டிகள் அமைக்கப்பட வேண்டும். இப்பெட்டிகள் மரத்திஞலோ உலோகத் தகடுகளிஞலோ செய்யப்படலாம். இப்பெட்டிகள் தனிப் பெட்டிக்கு 15''×12''×15'' அளவுடனும் பல கோழிப்பெட்டிக்கு 5' நீளமும், 2' அகலமும் 3' உயரமும் அளவுடனும் அமைத்தல் வேண்டும்.

**ஈ. உட்காரும் சட்டங்கள்:**

இவை கோழிகளின் வசதிக்காகவும், கோழிகள் இரவில் தங்குவதற்கும் பொருத்தப்படுகின்றன. இம்மரச் சட்டங்கள் 2''×$1\frac{1}{2}$'' அளவுடன் தரை மட்டத்திற்கு மேல் 18'' உயரத்தில் அமைக்கப்படலாம். ஒரு கோழிக்கு 6 முதல் 9 அங்குலம் உட்காரும் வசதி தேவை.

**உ. கிளிஞ்சல் பெட்டி;**

மரத்திஞலோ, உலோகத்திஞலோ ஆன பெட்டிகளில் தூளாக்கப்பட்ட கிளிஞ்சல் வைக்கப்பட வேண்டும். 50 கோழிகளுக்கு ஒரு பெட்டி அவசியம்.

**ஊ. சாம்பல் தூள் பெட்டி:**

மரத்திஞலோ உலோகத்திஞலோ ஆன பெட்டிகளில் மருந்துடன் கூடிய சாம்பல் தூள்களுடன் டி.டி. டீ அல்லது 'கெமாக்ஸீன்' மருந்து நிரப்பப்பட்டு வைத்தால், கோழிகளின் மேல் உண்ணிகளோ, பூச்சிகளோ இல்லாமல் தடுக்கலாம்.

—டாக்டர் ஆர். டி. மைக்கேல்.



# " சிறு தவறு பெரு நட்டம் "

கோழிப் பண்ணையில் நாள்தோறும் நிகழும் சில சாதாரண தவறுகளை நாம் பொருட்படுத்துவதில்லை! அதனால்பெரும் கேடு விளைகிறது என்பதையும் அறிவதில்லை! கீழே தொகுத்தளிக்கப்பட்டிருக்கும் தவறுகள் உங்கள் பண்ணையில் இருந்தால் அதை உடனே நீக்கிப்பயன் அடையுங்கள்.

| | தவறுகள் | கேடுகள் |
|---|---|---|
| 1 | அசுத்தமான தண்ணீர்த் தொட்டி | பல நோய்களுக்கு அடைக்கலம். |
| 2 | தண்ணீர்ப் பற்றுக்குறை | முட்டைகள் குறையும். |
| 3 | குறைவான தீனித்தொட்டிகள் | முட்டைக் குறைவு. |
| 4 | வைக்கோல் அல்லது மரத்தூள் இல்லாத முட்டையிடும் கூடு. | முட்டைகள் உடையும் |
| 5 | காற்றோட்டம் இல்லாத வீடுகள் | நலக் குறைவு. |
| 6 | தீனித் தொட்டிகளை வழிய நிரப்புவதும் அளவான உயரத்தில் அமைக்காமையும். | தீனி வீணாகும். |
| 7 | சதா மருந்து கொடுத்தல் | தேவையானபோது மருந்துகள் பயனற்று விடும். |
| 8 | பேன்களைப் பெருக விடுதல் | முட்டை உற்பத்தி குறையும். |
| 9 | கட்டிப்போன லிட்டர் | நோய்கள் பரவும். |
| 10 | கிளிஞ்சல்கள் இல்லாமை | முட்டையோடு மென்மையாக அமைந்து உடைந்து விடும். |
| 11 | குறுகிய இடம், அதிக கோழிகள் | ஒன்றையொன்று கொத்திக் கொள்ளும். |
| 12 | இளங்கோழிகளை முட்டை இடுவதற்கு முன், கூடுள்ள வீடுகளுக்கு மாற்றாதிருத்தல். | தரையில் முட்டையிட்டு அவைகள் வீணாக நேரிடும். |
| 13 | வேண்டிய முட்டையிடும் கூடுகள் இல்லாது இருத்தல். | தரையில் முட்டையிட நேரிடும். |
| 14 | நான்கு தரமாவது முட்டைகளைச் சேகரிக்காமல் இருத்தல். | முட்டைகள் வீணாகும். |
| 15 | கால்நடை மருத்துவர்களின் அறிவுரைகளை அசட்டை செய்தல். | நட்டம் |
| 16 | நோய்த்தடுப்பு முறைகளில் கருத்தின்மை | பெருநட்டம். |
| 17 | முட்டைகளை அடுக்காமல் கூடையில் கொட்டி வைத்தல். | முட்டைகள் உடையும் அல்லது அழுகிவிடும். |
| 18 | உதவி இருந்தாலும், உடையவர் பண்ணையைப் பாராதிருத்தல். | நட்டம். |
| 19 | வேண்டாத கோழிகளை அவ்வப்போது நீக்காதிருத்தல். | தீனிக்குக் கேடு. |
| 20 | வயதான கோழிகளையும், இளங் கோழிகளையும் கலந்து வைத்தல். | நோய் பரவும்; முட்டைகள் குறையும். |



# முட்டையில் உள்ள ஊட்டச் சத்துக்கள்.

| வரிசை எண். | ஊட்டச்சத்துக்களின் பெயர். | அளவு. | சாதாரண மனிதனுக்கு நாள் 1-க்குத் தேவையான அளவு. | இரண்டு முட்டைகளில் உள்ள அளவு. | அன்றுடத் தேவைகளில், இரண்டு முட்டைகளில் இருந்து பெறும் சத்து (சதவீதம்). |
|---|---|---|---|---|---|
| 1 | சக்தி | கலோரிகள் | 3,000 | 180 | 6 |
| 2 | புரதச்சத்து | கிராம் | 70 | 13·2—14 | 20 |
| 3 | கொழுப்புச் சத்து | ,, | 50 | 11 | 22 |
| 4 | மாவுச் சத்து | ,, | 570 | .. | .. |
| 5 | சுண்ணும்புச் சத்து | ,, | 0·8 | 0·06 | 8 |
| 6 | பாஸ்பரஸ் | ,, | 0·9 | 0·24 | 30 |
| 7 | இரும்புச்சத்து | மி.கி. | 12 | 3·2 | 26 |
| 8 | அயோடின் | ,, | 0·1 | 0·01 | 10 |
| 9 | வைட்டமின் 'ஏ' | ஐ.யு. (I.U.) | 5,000 | 1,000—1,500 | 20—30 |
| 10 | வைட்டமின் 'டி' | ஐ.யு. (I.U.) | 400 | 100 | 25 |
| 11 | வைட்டமின் 'சி' | மி.கி. | 75 | .. | .. |
| 12 | வைட்டமின் 'பி1' | மி.கி. | 1.5 | 0·12 | 8 |
| 13 | வைட்டமின் 'பி2' | மி.கி. | 2.0 | 0·32 | 16 |
| 14 | நியாசின் | மி.கி. | 20 | 1·20 | 6 |



## முட்டை, பால், அரிசி கோழிக்கறி இவைகளில் உள்ள சத்துப்பொருள்கள்.

| வரிசை எண். | சத்துப்பொருட்களின் பெயர். | முட்டை | பால் | அரிசி | கோழிக்கறி |
|---|---|---|---|---|---|
| 1 | தண்ணீர் | 74% | 87·3% | 13% | 66% |
| 2 | புரதம் | 12·4% | 3·5% | 7% | 20·2% |
| 3 | கொழுப்பு | 11·7% | 3 5% | 1.1% | 12·2% |
| 4 | மாவுச்சத்து | 0·9% | 5% | 78% | 0·6% |
| 5 | நார்ப்பொருள் (ஃபைபர்) | .. | .. | 0·7% | 1% |
| 6 | தாது உப்பு | 1% | 0·7% | 0·8% | .. |
| 7 | கலோரிச் சத்து (100 கிராமில்) | 163 | 65 | 359 | 200 |
| 8 | வைட்டமின்'ஏ'(ஐ.யு.-100 கிராம்) | 1,300 | 140 | .. | .. |
| 9 | வைட்டமின் பி1, (மில்லிகிராம்-100 கிராம்) | 0·26 | 0·04 | 0·26 | 0·2 |
| 10 | வைட்டமின் பி2, (மில்லிகிராம்-100 கிராம்) | 0.04 | 0·18 | 1·3 | 0·3 |
| 11 | பேண்டோதனிக் அமிலம் (மில்லி கிராம் - 100 கிராம்). | .. | 0·31 | 2·5 | 0·7 |

# கலப்பினமும் 'மேயர்' இனமும்

டாக்டர் வை. இரத்தினசபாபதி
கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை

அண்மைக் காலத்தில் கோழிப்பண்ணைத் தொழிலில் ஒரு புரட்சி ஏற்பட்டு வெகு விரைவாகப் பரவி வருவதை நாம் அனைவரும் அறிவோம். அதிக அளவில் தரமுள்ள கோழிகளை உற்பத்தி செய்து, நோயின்றி வளர்ப்பதற்குரிய சூழ்நிலைகள் உருவாகியிருப்பதே இதற்குக் காரணம். இப் புரட்சிக்கு அடிகோலியவை வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'ஆர்பரேக்கர்ஸ்' 'யுனிசிக்ஸ்', 'ஹை-லைன்', 'இராணி ஷேவர்ஸ்' முதலிய கலப்பின வீரியக் கோழிகளே (Hybrids) என்றால் அது மிகையாகாது. இவை 20, 22 வாரங்களுக்குள் முட்டையிடும் பருவம் எய்தி, ஆண்டுக்கு 200-க்கும் குறையாமல் முட்டையிடும் இயல்பு வாய்ந்தவை. ஆதலால் அவற்றிலிருந்து அதிகமான இலாபம் கிடைக்க வழி இருக்கின்றது.




ஆயினும், இக்கலப்பினக் கோழிக்குஞ்சுகள், காலத்தில் கிடைப்பதில்லை. இவற்றின் விலையும் அதிகமாக இருக்கின்றது. மேலும் ஒவ்வொரு தொழிற் பருவத்திற்கும் வேண்டிய கோழிக் குஞ்சுகளை நாம் மேற்படி கோழி இனங்களை விற்பனை செய்யும் நிறுவனங்களில் இருந்தே வாங்க வேண்டிய நீக்கமுடியாத நிர்பந்தம் இயற்கையில் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் இக்கலப்பின வீரியக் கோழிகளிலிருந்து இனவிருத்தி செய்து, அக்கோழிகளை அடுத்த பருவத்திற்கு நாம் உபயோகித்துக் கொள்ள முடியாது. எனவே, நிரந்தரமாக நாம் மேற்கூறப்பட்ட கலப்பினக் கோழி இனங்களின் குஞ்சுகளை வழங்கும் நிறுவனத்தினரையே கோழிப்பண்ணைத் தொழிலுக்கு நம்பி வாழ்வதுடன், அதற்கான அந்நியச் செலாவணியையும் நம் தேவைக்கு ஏற்ப அதிக அளவில் ஆண்டிற்கு ஆண்டு ஒதுக்க வேண்டியுள்ளது.

ஆகவே, கலப்பின வீரியம் என்றால் என்ன? கலப்பின வீரியக் கோழிகளை எவ்வாறு உற்பத்தி செய்வது? அவை ஏன் தம் சந்ததிகளுக்குத் தம் வீரியத்தைக் கொடுப்பதில்லை?' என்று விளக்குவது உடனடியாகத் தேவைப்படுகின்றது. கோழிகளைப் பொதுவாகப் பல இனங்களாகப் பிரிக்கலாம். இனம் என்று சொல்லப்படுவது பல பொதுவான குணங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு கூட்டத்தைக் குறிக்கின்றது. 'வெள்ளை லெக்கார்ன்' (White Leghorn), 'சிவப்பு போந்தா' (Rhode Island Red), 'ஆஸ்ட்ரலார்ப்ஸ்' (Austrolorps), 'வெள்ளை ராக்' (White Rocks) போன்றவை ஒவ்வொன்றும் ஓர் இனத்தைச் சேர்ந்தவை. 'வெள்ளை லெக்கார்ன்' கோழிகள் அனைத்தும் வெள்ளை நிறமுடையவை; ஆண்டிற்கு அதிக முட்டை தரக்கூடியவை. 'வெள்ளைராக்' என்ற இனக் கோழிகள் பத்து வாரங்களுக்குள் அதிக உடல் வளர்ச்சியடைந்து சுவையுள்ள இறைச்சியைக் கொடுக்கக்கூடிய தன்மையுடையவை. ஆனால் அவைகளின் ஆண்டு




முட்டை உற்பத்தித்திறன் மிகக் குறைவாக உள்ளது.

''வெள்ளை லெக்கார்ன்'' இனக்கோழிகள் பொதுவாக அதிக முட்டைகள் இடக் கூடியவை எனினும், எல்லாக் கோழிகளும் ஒரே குறிப்பிட்ட அளவில் அதிகமாக முட்டையிடுவதில்லை. தனிப்பட்ட கோழிகளிடம் அதிக வேறுபாடுகள் இருக்கலாம். சில 120 முட்டைகளைக் கொடுக்கக் கூடியவையாகவும், சில, 230 முட்டைகள் கொடுக்கக் கூடியவையாகவும், பெரும்பாலானவை 150 முதல் 180 முட்டைகள் வரை கொடுக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. இந்த வேறுபாடுகள் இயற்கையின் நியதி! இந்த வேறுபாடுகளை ஆராய்ச்சியின் மூலம், கோழிகளைத் தனித் தனியே கூண்டில் முட்டையிடும்படிச் செய்து அளந்து, நிர்ணயிக்க முடியும். இவ்வித ஆராய்ச்சி மூலம் கணிக்கப்பட்டு 200-க்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் கோழிகளைத் தனியே பிரித்து அவற்றின் சந்ததிகளை ''உள்இனக் கலப்பு'' (In breeding) முறையில் இனப்பெருக்கம் செய்வதன் மூலம், அச்சந்ததிகள் அதிக முட்டைகள் கொடுக்கும் இயல்பைப் பெறுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு சந்ததியையும் அளந்து ''உள்இனக்கலப்பு''ச் செய்வதன் மூலம் அதிக முட்டைகள் தரக்கூடிய ஒரு வம்சத்தையே (Strain) நாம் உற்பத்தி செய்யமுடியும். இந்த வம்சங்களுக்கு இனங்களைப் போல், சிறப்பு இயல்புகள் உண்டு. அதேபோல் ஒவ்வொரு இயல்புக்கும் தனித் தன்மையுள்ள வம்சங்களைத் தேர்வு மூலம் நாம் உற்பத்தி செய்ய முடியும். உதாரணமாக வெள்ளையினக் கோழிகளிலிருந்து 20 வாரத்தில் முட்டையிடும் பருவம் எய்தக் கூடிய ஒரு வம்சத்தையோ, அதிக எண்ணிக்கையில் முட்டையிடக்கூடிய ஒரு வம்சத்தையோ, பெரிய முட்டையிடக்கூடிய ஒரு வம்சத்தையோ, நாம் உருவாக்க முடியும்.

ஒரு வம்சத்தை உற்பத்தி செய்வதற்குக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பிடிக்கும்! மேலும் அதற்கென ஏராளமான கோழிகளை வைத்து, அவற்றிற்குத் தனித் தனியே கணக்கெடுத்து இனச் சேர்க்கை செய்வதற்குரிய ஆராய்ச்சிச் செலவுகளும் அதிகம். ஆராய்ச்சியின் முழுப் பலன் கிடைக்கும் போது ஆராய்ச்சிக்கெனச் செலவிடப்படும் தொகையானது வீண் போகாது என்பதை யாவரும் அறிவர்.

இரண்டு இனங்களையோ, அல்லது இரண்டு வம்சங்களையோ, நாம் வம்ச விருத்திக்காகக் கலப்புச் செய்யும்போது அவற்றின் சந்ததிகள் (Hybrids) தம் தாய் தந்தை இனம் அல்லது வம்சங்களைவிட அதிக வீரியம் உள்ளவையாக அமைகின்றன என்பது பாரம்பரிய இயலின் (Law of Genetics) ஒரு பொதுவான விதி. ஆயினும் எல்லாக் கலப்பின அல்லது கலப்பு வம்ச சந்ததிகளும் இந்த வீரியத்தைப் பெற்றிருப்பதில்லை. சில இனங்கள் அல்லது சில வம்சங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து அதிக வீரியத்தை அளிக்கும் இயல்பைப் பெற்றிருக்கின்றன. அவை எவை? எந்த இரண்டு இனங்களை, அல்லது எந்த இரண்டு வம்சங்களைச் சேர்ந்த கோழிகளைக் கலப்புச் செய்யும்போது, அதிக வீரியத்தைக் கொடுக்கின்றன என்பதைப் பரிசோதனை மூலமே நாம் கண்டறிய முடியும். இப் பரிசோதனை மிகவும் கடினமானது; அதிகச் செலவுள்ளது; நாள் பிடிக்கக் கூடியது; முடிவில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெற்றி கிடைக்கலாம்; அல்லது கிடைக்காமலும் இருக்கலாம்! வெற்றி கிடைத்தால் அதையே ஆராய்ச்சியின் பலன் என்று கூறுகிறோம்!

'மேயர்' இனமுட்டைகள்




ஒன்றின் எடை 58 கிராம்

உதாரணமாக அதிக முட்டையிடக்கூடிய 5 வம்சங்களை நாம் உற்பத்தி செய்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவற்றின் ஆண்டுச் சராசரி முட்டை எண்ணிக்கை கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**5 வம்சங்களின் (Strains) உற்பத்தித் திறன்**

| வம்சம் | ஆண்டு உற்பத்தித் திறன் (ஆண்டு சராசரி முட்டை உற்பத்தி) | மதிப்பு |
|---|---|---|
| 1 | 200 | 3 |
| 2 | 205 | 2 |
| 3 | 210 | 1 |
| 4 | 180 | 4 |
| 5 | 170 | 5 |

வம்சக் கலப்பு ஆராய்ச்சியில் ஒவ்வொரு வம்சத்தையும் மற்றொரு வம்சத்துடன் சேர்க்கை செய்து, அக் கலப்பு வம்சத்தின் முட்டைத் திறனை ஆராய்கின்றார்கள். கலப்பு வம்சத்தின் முட்டைத் திறன் கீழ்க்கண்ட பட்டியலில் தரப்பட்டுள்ளது.

**கலப்பினம் அல்லது கலப்பு வம்சக் கோழிகளின் சராசரி உற்பத்தித் திறன்**

**ஓர் ஆண்டில் அளிக்கும் முட்டையின் எண்ணிக்கை**

| இனம் அல்லது வம்சம் | | பெட்டைகள் 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| சேவல்கள் | 1 | | 200 | 210 | 205 | 180 |
| | 2 | | | 200 | 250 | 190 |
| | 3 | | | | 180 | 225 |
| | 4 | | | | | 200 |

மேற்கண்ட ஆராய்ச்சியின் முடிவைக் கூர்ந்து நோக்கும்போது வம்சம் 2-யும் 4-யும் கலப்புச் செய்யும்போது உண்டாகும் சந்ததிகளின் (Hybrids) உற்பத்தித் திறன் 250 முட்டைகள் என்றும் அவை மற்ற எந்த வம்சத்தையும்விட அதிகமாக இடுகின்றன என்றும் அறிகின்றோம். இது, வம்சம் 2-க்கும் வம்சம் 4-க்கும் உள்ள இயற்கையில் அமைந்த சிறப்பு இயல்பாகும். திரும்பத் திரும்ப இந்தச் சோதனைகளைச் செய்வதன் மூலம் இதே முடிவுகளே கிடைக்கின்றன. ஆகவே வம்சம் 2-யும், வம்சம் 4-யும் வம்ச வளர்ச்சி செய்து அதிக அளவில் உற்பத்தி செய்கின்றார்கள். இவற்றின் கலப்பினால் பிறக்கும் குஞ்சுகளை விற்பனைக்குக் கொடுத்து ஆராய்ச்சியின் பலனை உற்பத்தியாளர்கள் பெறுகின்றனர். மேற்படி தனி வம்சங்களை (2-யும் 4-யும்) ரகசியமாகவே இவர்கள் வைத்திருக்கின்றார்கள். அப்போது தான் அவர்கள் இந்த ஆராய்ச்சியின் முழு இலாபத்தையும் பெறமுடியும். இதே போல ஓரினக் கலப்பு, ஈரினக் கலப்பு, மூவினக் கலப்பு, நாலினக் கலப்புகளும் செய்ய முடியும். அவற்றில் பலன் இருக்கின்றதா, இல்லையா, என்பது புதையல் ஆராய்ச்சியைப் போன்றதாகும்.

இக்கலப்பின வீரியக் கோழிகள் வம்ச விருத்திக்கு ஏற்றவையல்ல! அவற்றின் குஞ்சுகள் தம் தாயைப் போல் இருப்பதில்லை. இதுவும் இயற்கையின் நியதியே! எனவே, கலப்பின வீரியக் கோழிகள் முட்டை உற்பத்திக்கு மட்டுமே சிறந்தவை.

நம்முடைய நாட்டில் தனி வம்சங்களை இதுவரை யாரும் பெரும் அளவில் உற்பத்தி செய்யவில்லை. இன்னும் ஆராய்ச்சி அளவிலேயே இங்கும் அங்குமாக ஓரளவுக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர். ஆராய்ச்சிக்கான நிதியும், இதர வசதிகளும் அதிக அளவில் கிடைக்காதவரையில் இது நம் நாட்டிற்கு ஒரு குறை எனலாம். குறைபாடுகள் விரைவில் நீக்கப்படுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேற்சொன்ன முறைகளின் மூலம் ஒன்றிரண்டு வம்சங்கள் உற்பத்தியாகி உள்ளன. 'மேயர்' என்ற இனம் ஒன்று இம் முயற்சியில் காணுவதற்குரிய நிலையை அடைந்துள்ளது. 1962 முதல் 72 வரை மரபியல் ஆராய்ச்சி மூலம் (Genetics and Breeding) தேர்வினச் சேர்க்கை செய்து, இந்த ''மேயர்'' வம்சம் உற்பத்தி செய்யப்பட்டு, அவை தற்போது சோதனையாகச் சில பண்ணையாளர்களிடம் வளர்ந்து வருகின்றன. கீழ்க் கண்ட சிறப்பு இயல்புகளை ''மேயர்'' இனம் பெற்றுள்ளது.

'மேயர்' இனத்தின் சிறப்பியல்புகள்

| | | |
|---|---|---|
| 1. | முதல் முட்டையிடும் வயது (சராசரி).. | 155 நாட்கள் |
| 2. | 30 விழுக்காடு (30%) முட்டைகள் கிடைக்கும்போது கோழிகளின் வயது | 174 நாட்கள் |
| 3. | 50 விழுக்காடு (50%) முட்டைகள் கிடைக்கும்போது கோழிகளின் வயது | 183 நாட்கள் |
| 4. | 36 வார வயதிற்குள் இடும் முட்டையின் சராசரி எண்ணிக்கை .. | 69 முட்டைகள் |
| 5. | 72 வார வயதிற்குள் இடும் முட்டைகளின் சராசரி எண்ணிக்கை | 200-க்கு மேல் |
| 6. | குஞ்சுகளின் மரண விழுக்காடு (0 முதல் 20 வாரம் வரை) .. | 12% |
| 7. | 20 வாரத்திலிருந்து 72 வாரம் முடிய உள்ள காலத்தில் மரண விழுக்காடு.. | 11.9% |

மேற்கூறிய தகவல்கள் இக் கோழிகளை வளர்க்கும் பண்ணையாளரிடம் இருந்தும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்தும் சேகரிக்கப்பட்டனவாகும். இந்த 'மேயர்' வம்சம் பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் வெப்ப தட்ப நிலைகளுக்குத் தகுந்த வகையில் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருநாள் வயதுள்ள பெட்டைக் குஞ்சின் விலை தற்போது அரசுப் பண்ணையில் இரண்டரை ரூபாய் ஆகும். இது தனிவம்சம் ஆதலால் இதற்குப் பிறக்கும் சந்ததிகளும் இதே மாதிரி வீரியம் உள்ளவையாக இருக்கும். இதை வம்ச விருத்தி செய்வது மிகவும் சுலபம்.

இவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து மக்களுக்குக் கிடைக்கும் வகையில் வசதி செய்து கொடுப்பதற்கு தமிழக அரசு ஆவன செய்து கொண்டு இருக்கின்றது. மேலும் இதே போலப் பல உயர் ரக வம்சங்களை ஏற்படுத்திக் கலப்பு வீரியக் கோழிகளை உற்பத்தி செய்வதற்கும் திட்டங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன.








## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

# சேமிப்புப் பழக்கமே
# எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



# கால்

கால்நான்தான்; காலென்றால் நாற்றங் காலா?
'கலகல'நீர் வாய்க்காலா? படியின் அண்ணன்
போல்இருக்கும் மரக்காலா? விழாந டத்தப்
போடுகின்றீ ரே! அந்தப் பந்தல் காலா?
நாலின்மேல் கோடிட்டே ஒன்று போட்டு
நாலிலொரு பாகமென்பீர்! அந்தக் காலா?
நூலினிலே 'கா'போன்ற நெட்டெ ழுத்தை
நோக்குங்கால் கால்காண்பீர்! அந்தக் காலா?

மணவீட்டின் அரசாணைக் காலா? அல்ல!
மண்ணுலகில் உமைநடக்க வைக்கும் கால்நான்!
உணவாக்கிக் கொள்ளும்மலைப் பாம்பு காற்றை!
உலகத்தில் அக்காற்றின் நிலைமை என்ன?
தினம்அதற்குப் பெரும்அலைச்சல்; அதைக்'கால்' என்று
தேன்தமிழில் குறிப்பிடுவர்! நானும் கால்தான்!
எனைஇதனால் நீர்அலைய வைத்தி டாதீர்!
ஏங்கிடுவே னா?இல்லை! வீங்கு வேன்-நான்!

பாம்புக்குக் கால்இல்லை; ஆனால் நீங்கள்
பாம்பின்கால் பாம்பறியும் என்று சொல்வீர்!
ஆம்! வீட்டில் கோழிக்கால் ஆட்டுக் காலால்
ஆன'ரசம்' எனச்சொன்னால் 'ஆகா!' என்பீர்!
நாம்எண்ண முடியாத வண்ணம் கால்கள்
நகரும்மர வட்டைக்கு! தாம ரைக்கோ
காம்புக்கால்! அதுஒற்றைக் காலில் நிற்கும்!
கருவண்டிற் கோஎன்றும் கால்கள் ஆறு!



நாற்காலி முக்காலி தெரிந்தி ருக்கும்
நல்லோரே! காலிருக்கும் கார ணத்தால்
மேற்போக்காய் எவனும்உமைக் காலி என்றால்
மேல்மண்டை அவனுக்குக் காலி என்பீர்!
போர்ப்போக்கே தன்பொழுது போக்காய்க் கொண்ட
புகழ்ச்சோழன் கல்லணையைக் கட்டி வைத்தான்!
பேர்கேட்டால் கரிகாலன் என்பீர்! இன்றும்
பெரும்யானைக் கால்காரன் 'கரிகா லன்தான்!'









சிவன்காலோ உதைத்ததுவாம் எமனை! தூணைச்
சினத்துடனே உதைத்ததுவாம் இரணி யன்கால்!
கவனிப்பேன்: நீர்என்றால் உதைக்கின் றீர்கள்
காற்பந்தை; சிலசமயம் மனைவி தன்னை!
தவறிப்போய் எவனையும்நான் மிதித்து விட்டால்
தாடையிலே ஏன்தட்டிக் கொள்ளு கின்றீர்?
அவன்அறையும் முன்னாலே தட்டிக் கொண்டால்
அறையாமல் விட்டிடுவான் என்ப தாலா?

பெண்பெருமை திரு. வி. க. எழுதி வைத்தார்;
பிறர்முன்னால் நீர்பெருமை அடித்துக் கொள்வீர்!
என்பெருமை தெரியாது சண்டை வந்தால்
'ஏய்!காலை ஒடித்திடுவேன்!' என்கின் றீர்கள்!
பெண்தலைமேல் பேன்நடக்கும், சிக்கிக் கொண்ட
பின்மரண தண்டனையை அனுப விக்கும்!
மண் இதனை நீர்பூமா தேவி என்பீர்!
மரணம்வரை இவள்மேலே நான்ந டப்பேன்!

தையலதும் தறிநெசவும் நடக்கும் என்றால்!
'தை!தக்கா! தை! என்றே நடன மாடும்
தையலுக்கும் என்றால்தான் பணம்கி டைக்கும்!
தவழ்குழந்தை உதைக்கும்கால் பெறுமே முத்தம்!
வையாதீர் உண்மையினைச் சொன்னேன் என்று;
வாழ்வில்உம் பையனைநீர் உயர்த்த யாரோ
"ஐயாவின் காலினிலே விழு!", என் கின்றீர்!
"அவர்தலையில் விழு! என்று சொல்ல மாட்டீர்!"

முள்ளையெல்லாம் பேனாவின் முள்ளைப் போல
மூடியிட்டு மூடுங்கள்! மிதிய டிக்குச்
சொல்லுங்கள் எனைக்கடிக்க வேண்டாம் என்று!
சிறுபிள்ளை யாய்நீங்கள் இருந்த நாளில்
தள்ளாடிக் கொண்டிருந்தேன்; எனக்கு வாய்த்த
தக்ககுரு நாதர்நடை வண்டி என்பேன்!
இல்லைநான் என்றால்நீர் நொண்டி என்பேன்!
இன்னுடலின் சுமைதாங்கி நானே என்பேன்!

புலவர் பொன்னிவளவன்

பொருள்களை விளங்கச் செய்வது விளக்கு, அது இருளில் ஒளியைத் தந்து இன்பமூட்டுகிறது. பண்டை நாட்களில் இருளுக்கு அஞ்சிய மனிதர்கள், அதனையோட்டிய ஞாயிறு, திங்கள், தீ ஆகியவற்றைத் தெய்வமெனக் கொண்டனர். காலப்போக்கில் ஞாயிறு, திங்களாகிய இயற்கை ஒளியேயன்றிச் செயற்கை ஒளியையேற்ற விளக்கினைக் கண்டது மனித அறிவு. மனித வாழ்வில் விளக்கு இன்றியமையாப் பொருள். மாலை மறைந்து இருள் சூழுமுன் விளக்கை ஏற்றி ஒளியை உலாவ விடுகின்றனர் இல்ல நங்கையர். மங்கையர் விளக்கேற்றும் காட்சியை இலக்கியங்கள் நயம்படப் பேசும்.

வெள்ளியினாலாகிய வளை இறுகின முன்கையைக் கொண்ட மங்கை; அவள் மூங்கில் போலும் தோளினையும், மெத்தென்ற சாயலினையும், முத்தையொத்த பல்லினையும் உடையவள்; காதணிவரை நீண்டுள்ளதும் குளிர்ச்சி பொருந்தியதுமான கயற்கண்ணாள், மழைக்காலம்; மாலைப் பொழுதினை அறிய இயலவில்லை! வீட்டில் பூந்தட்டில் பசிய காம்பையுடைய பிச்சிமலர் அரும்புகள் இட்டு வைக்கப்பட்டுள்ளன; அவை பொழுது மறையும் வேளையில் மலரும் இயல்பு கொண்டவை; மாலை தோன்றியதும் அவ்வரும்புகள் இதழ் விரித்தமையால் இல்லமெங்கும் மணம் சூழ்கிறது; அதுகொண்டு மங்கை மாலைப் பொழுதினை அறிகின்றாள்; உடனே இரும்பாற் செய்த தகளியில் நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி நெல்லையும் மலரையும் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்கி நிற்கின்றாள்.

# விளக்கும் விரிகுறளும்

சு. செல்லப்பன்



'வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்
பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது'

விளக்கேற்றி நிற்கும் மங்கையரை ஓவியப்படுத்தும் இவ்வரிகள் நெடுநல்வாடையில் காணப்படுகின்றன.

இருளை ஓட்டி அச்சத்தை நீக்குவதால் விளக்கு மங்கலப் பொருளாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டில் மங்கல நிகழ்ச்சிகள் அனைத்திலும் விளக்குகள் ஏற்றி வைக்கப்படுகின்றன. மேனாட்டிலும் மங்கல நிகழ்ச்சிகளில் மெழுகுவர்த்திகளை ஏற்றி ஒளியூட்டுகின்றனர். நன்மை செய்யும் எதுவும், எவரும் விளக்கோடொத்துப் பேசப்படுவர். குடும்பத்தைத் திறம்பட நடத்தும் தலைவி 'குடும்ப விளக்கு' எனப் பாராட்டப்படுகின்றாள். நைந்து கிடந்த மக்கட் சமுதாயத்தைத் தம் அரிய உழைப்பினால் முன்னுக்குக்கொண்டு வருபவர்கள் நாட்டில் விளக்கேற்றி வைத்த நன் மக்களாகப் போற்றப்படுகின்றனர். மக்கள் மனத்தில் தோன்றும் அறியாமை, ஆணவம் போன்ற மாசுகள் இருள் என்றும், அவற்றை ஓட்டுபவை விளக்கு என்றும் உருவகிக்கப்படும் வழக்கம் இலக்கிய மரபாக இருந்து வருகிறது.

அகல், அதில் பெய்யப்படும் எண்ணெய், எண்ணெய்யில் நனைந்து கிடக்கும் திரி, திரியின் நுனியில் சுடர், அகலினைத் தாங்கும் தண்டு—இவற்றின் சேர்க்கையே விளக்கு. திருக்குறளில் விளக்குறுப்புகள் அனைத்தையும் காணுகின்றார் ஒரு புலவர். அறத்துப்பாலாகிய அகலில் பொருட்பாலாகிய திரி கிடத்தப்பட்டுள்ளது; அதன்மீது இன்பத்துப்பால் என்ற நெய் வளர்க்கப்பட்டுள்ளது. திரியின் நுனியில் வள்ளுவனாரின் செம்மைநலம் சான்ற சொல் சுடராக எரிகிறது. இந்த அகல் விளக்கை வெண்பாவாகிய தண்டு தாங்குகின்றது. இவ்வாறாகக் குறள் விளக்கு, வள்ளுவனாரால் ஏற்றப்பட்டுள்ளது. மற்ற விளக்குகளுக்கும், குறள் விளக்குக்கும் ஒரு பெரிய வேறுபாடுண்டு. பிற விளக்குகள் புற இருளை—உலக இருளை ஓட்டுவன. குறள் விளக்கோ உள்ளத்தில் படிந்துள்ள இருளை, மனமாசை அகற்றுகின்றது.

அறம்தகளி, ஆன்ற பொருள், திரி, இன்பு
சிறந்தநெய், செஞ்சொல், தீ, தண்டு—குறும்பாவா!
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

இவ்வாறு திருக்குறளை உள்ளிருள் நீக்கும் விளக்காக உருவகிக்கின்றவர் நப்பாலத்தனார் என்ற பெரும் புலவராவார்.

அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய மாசுகள் மனத்தை இருளடையச் செய்கின்றன. அம்மாசுகளற்ற ஒளி மனம், மக்கட்குத் தேவை. மனத்தே மாசுகொண்டு புறத்தே தூய்மையாக இருத்தல் பொருளற்றது. எது அறம்? என்ற வினாவிற்குத் திருவள்ளுவர்,

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்''

என்கிறார். ஒருவன் தன் மனத்தில் குற்றமற்றவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே! புறத்தூய்மை கொண்டு அகத்தூய்மையின்றியிருத்தல் பொற்கலத்தில் நஞ்சைப் பெய்து வைத்திருப்பதற்கொப்பாகும். மனமாசினை அகற்ற வேண்டும் என்று சொல்வதோ எளிது; செயலிற் காட்டுவதோ அரிது.

''துனி வெளுக்க மண்ணுண்டு
தோல் வெளுக்கச் சாம்பருண்டு
மணி வெளுக்கச் சாணையுண்டு''

என்று கூறிய பாரதி, ''மனம் வெளுக்க மார்க்கமில்லையே'' என்று ஏங்கித் தவிக்கின்ருர். திருவள்ளுவரோ, மனம் வெளுக்க வழி சொல்கிருர். வாய்மையே அவ்வழி. ''புறத்தூய்மை நீரிஞல் ஏற்படும். அகத் தூய்மையோ வாய்மையால் உண்டாகும்'' என்பது அவர் பொன்மொழி. ஒருவன் தன் நெஞ்சம் அறிய ஒரு பொய்யைச் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னுல் அவன் நெஞ்சே அவனை வருத்தும் என்றும் அவர் குறிப்பிடுகின்ருர். பொய்மை பாவமெல் லாம் விளைகின்ற பூமி. ''தான் கெட்டுப் போனுலும் பெரியோர்களுக்குக் கெடுதி உண்டாக வேண்டும் என்று நினையற்க; தன் உடம்பிலுள்ள சதை முழுவதும் வற்றி உடல் வெறும் எலும்புக் கூடானுலும் உண்ணத் தகாத பகைவர்கள் கையில் உள்ள உணவைப் பெற்று உண்ணற்க! வான் சூழ்ந்துள்ள இவ் வுலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தா லும் பொய்யோடு கலந்த சொற்களைப் பேசற்க'' என்கிறது நாலடியார். பொய் அறவே அகன்று வாய்மையே எங்கும் நிலவ வேண்டும். ''வாய்மையின் வழிநின்று மன் னுயிர் ஓம்பும் அருளாளர்க்கு எய்தாத அரும் பொருள் எதுவும் இல்லை'' என்பார் இளங் கோவடிகள்.

இத்தகைய சிறந்த வாய்மையை வள்ளுவர் விளக்கு என்கிருர். புறத்திருளை ஓட்டுகின்ற உலக விளக்குகளெல்லாம் விளக்குகள் ஆகா. சான்ருேர்க்கு மனத்திருள் நீக்கும் பொய்யா மையாகிய விளக்கே விளக்காகும்.

'' எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.'' (299)

இக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர் ''உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத அறி யாமையாகிய இருளை வாய்மை ஓட்டுதலின் அதனைப் பொய்யா விளக்கு என்ருர் வள்ளுவர்'' எனக் குறிப்பிட்டுப் பொய்யா விளக்கின் பெருமையைப் புலப்படுத்து கின்ருர். அகத்தூய்மையே-அக ஒளியே வேண் டப்படுவதாதலின் அடியவர்கள்கூட இறை வனை உள விளக்காகக் காண்கின்றனர்.

'' அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளற என்னுளத் தேற்றிய விளக்கே !
துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே ! ''

என்கிருர் இராமலிங்கஅடிகள். குமரகுருபர அடிகள் மீனுட்சியம்மையை 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோவிற் கேற்றும் விளக்கே' எனப் புகழ்ந்துரைக்கின்ருர். ''உண்மைக்குச் செய் யும் மிகப் பெரிய வழிபாடு யாதெனில் அதைப் பயன்படுத்துவதே ஆகும்'' (The greatest homage we can pay to the truth is to use it). என்பது அறிஞர் எமர்சன் வாக்கு. இதைப் பின்பற்றி வாய்மையை நடைமுறைப் படுத்த வேண்டுவது மனித குலத்தின் தலையாய கடமையாகும்.

திருவள்ளுவர், ஒருவன் பிறந்த குடியை குன்ரு விளக்கு என்று குறிப்பிடுகிருர். வாழை யடி வாழையெனத் தொடர்ந்து அழிவின்றி இருத்தலான் அது என்றும் அவிதல் இல்லா நந்தா விளக்காகிறது. இந்த நந்தா விளக்கை



யும் அழிக்கும் வல்லமை படைத்த ஒன்று உண்டு. அதுவே சோம்பல் என்ற இருள்! விளக்கொளி பட்டவுடன் இருள்மாயும்; ஆனுல் சோம்பல் என்ற இருளோ தான் படர்வதன் மூலம் குடி என்னும் நந்தா விளக்கையே அவித்துவிடும் வல்லமையைப் பெற்றிருக்கிறது.

'' குடியென்னும் குன்ரு விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் '' (601)

ஒருவன் தன் குடியாகிய மங்காத விளக்கின் மீது சோம்பல் என்ற இருளைப் படர விட்டு விடக்கூடாது. அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது அவ னுக்கு முன்னரே அழிந்துவிடும் என்று மற் ெருரு குறளிலும் திருவள்ளுவர் குறிப்பிடுகின் ருர். சோம்பல் மன உணர்வுகளை மரமரக்கச் செய்கின்றது. சோம்பலாளன் நடமாடும் பிணத்திற்கு ஒப்பாவான். எனவே பிறந்த குடியை மேன்மேலும் உயர்த்த வேண்டு மென்பவர் சோம்பலின் கொடுமையை நன்குணர்ந்து அதனை விலக்கி முயற்சியாளர் களாகத் திகழவேண்டும்.



பொருளின் பெருமையோ பேசும் தர மன்று! அதன் சிறப்பைப் பேசாத நூல்கள் இல்லை. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் நடுவணதாகிய பொருள் எய்த இருதலையும் உள்ள அறமும், இன்பமும் தாமே வந்தடையும் என்கிறது நாலடி.

'' வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் ''

''அருளுடையாரும் மற்று அல்லாதவரும் பொருளுடையாரைப் புகழாதார் இல்லை'' என்கிறது பழமொழி. வள்ளயாபதியோ செல் வம், ''குலம் தரும்; கல்வி கொணர்ந்து முடிக்கும்; அலந்த கிளைகள் அழிபசி தீர்க்கும்' எனப் பொருளின் பெருமையைப் பேசு கிறது. ''கல்லானேயானுலும் கைப்பொருள் ஒன்றுண்டானுல் எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்''—இது பணத்தின் செல் வாக்கைப் பற்றி நல்வழி நவில்வது.

சீவகசிந்தாமணி,

'' வென்றி ஆக்கலும் மேதகவு ஆக்கலும்
அன்றியும் கல்வி யோடழ காக்கலும்
குன்றி னூர்களைக் குன்றென ஆக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னுய்பொருள் செய்யுமே ''

எனச் செப்புகின்றது. செல்வம் வெற்றியை உண்டாக்கும்; மேம்பாட்டைத் தோற்று விக்கும்; இவைகளேயன்றி, கல்வியையும் அழகையும் சேர்க்கும்; மெலிந்தவரையும் மலையென வலியுடையராக்கும்.

பொருள், குன்றினார்களையும் குன்றென ஆக்குமென்கிறார் திருத்தக்கதேவர். திருவள்ளுவர் இன்னும் அழகாக.

**''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லது இல்லை பொருள்''**

எனப் புலப்படுத்துகின்றார். ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் பொருள் மதிப்புடையவராகச் செய்து விடுகின்றது எனின் அப்பொருளைவிடச் சிறப்புடைய பொருள் வேறென்ன இருக்கமுடியும்? பொருள் இல்லாதவர்களை அவர்களிடம் வேறு எத்தகு சிறப்பு இருந்தாலும் எல்லாரும் இகழ்வர். எந்தவிதமான நன்மை இல்லாவிட்டாலும் செல்வரை எல்லாருஞ் சிறப்புச் செய்வர். இதுவே உலக இயற்கை.

இத்தகைய சிறப்புவாய்ந்த செல்வத்தைத் திருவள்ளுவர் விளக்காக உருவகிக்கின்றார். மற்ற விளக்குகளுக்கும் இந்தப் பொருள் விளக்குக்கும் வேறுபாடு உண்டு. சாதாரண விளக்கினை எடுத்துக்கொண்டு போனால் அது தான் உள்ள இடத்தில் மட்டுமே இருளையொழிக்கும். பொருள் விளக்கோ அதனை வைத்துக்கொண்டிருப்பவன் நினைக்கின்ற இடத்திற்கெல்லாம் சென்று அங்குள்ள பகையிருளை ஓட்டுகின்ற அரிய விளக்காகும்.

**''பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று''**

**(753)**



''ஈட்டி எட்டியவரை பாயும்; பணம் பாதாளம்வரை பாயும்'' என்பது பழமொழியல்லவா?

பகைவர் செருக்கினை அறுக்கப் பணத்தை விடக் கூர்மையான வாள் இல்லை என்பதால் அதனை ஒருவன் தேடிச் சேர்க்க வேண்டும் எனக் கட்டளையிடுகிறார் திருவள்ளுவர். இவ்வாறு பொருளின் பெருமையைக் கூறுவதால் அதனை எந்த வழியிலாவது சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதால் பொருளை அறவழியில் ஈட்ட வேண்டும் என்ற அறிவுரையையும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.



''ஒருமனதாயினர் தோழி, இந்தத் திருமண மக்கள் என்றும் வாழி'' என உற்றோரும் மற்றோரும் வாழ்த்தத் தலைவனும் தலைவியும் இல்லறம் புகுகின்றனர்; கருத்தொருமித்து ஆதரவுபட்ட இன்ப வாழ்க்கையில் ஒழுகி வருகின்றனர். பொருளீட்டத் தலைவன் வெளியூர் செல்ல வேண்டியவனாகின்றான். தன் கருத்தைக் குறிப்பால் தலைவிபால் உணர்த்துகிறான். இதைக் கேட்ட தலைவியோ, வளைதளர, வாய் துடிப்ப, கண்கள் நீருகுக்க, ''கண்ணோட்டமின்றிப் பொருளை விரும்பி அகல்விரேல் அகல்க. அதனால் ஒன்றும் கெட்டுவிடாது'' என அழுது அரற்றுகிறாள். தலைவன் தான் பொருளீட்டப் பிரிய வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி, ''கார்ப்பருவத்தில் கட்டாயம் வந்துவிடுவேன், அதுவரை ஆற்றியிருத்தலே முறை'' என்று அவள் குழல் திருத்தியும் கன்னம் வருடியும் வேண்டி நிற்கிறான். அவளோ ''பிரிந்து செல்லாத நிலைமையிருந்தால் என்னிடம் சொல்லுங்கள்! பிரிந்து சென்றால் 'வந்தேன்' என்ற சொல்லை அப்போது வாழ்ந்திருப்பவரிடம் சொல்லுங்கள்'' எனப் பொருமுகின்றாள். பின்னர் ஒருவாறு தேற்றித் தலைவன் பிரிகின்றான். பிரிவினால் தலைவியின் மேனியில் பசலை படர்கிறது. காதலர் பிரிந்ததும்,



உடனே பசலை படரும் தன்மையைத் தன் வாழ்க்கை நிகழ்ச்சியை உவமையாக்கித் தலைவி ஒருத்தி கூறுவதாகக் குறுந்தொகையில் பரணர் ஒரு பாடலைப் பாடியுள்ளார். தான் நாள்தோறும் நீர் மொண்டு வரும் கேணியில் ஒருவகைப் பச்சைப் பாசி படர்ந்திருப்பதைத் தலைவி காண்கிறாள். நீர் முகக்கப் பாத்திரத்தை உள்ளே அழுத்தும்போது பாசி அகல்கிறது. பாத்திரத்தை எடுத்த மறுகணமே பாசி மீண்டும் படர்ந்து நீரை மறைக்கிறது. அந்நீர்ப்பாசியைப் போன்றே பசலையும் இருப்பதைத் தலைவி உணர்கிறாள். தலைவன் தழுவுங்கால் விலகியும் அவன் பிரியுங்கால் பரவியும் நிற்கிறது.

''ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி யற்றே பசலை, காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே''

**(குறுந்தொகை 397)**

''நோக்கவே தளிர்த்து, நோக்காது இமைப்பினும் நுணுகும் நல்லாராகிய'' மகளிரின் பிரிவாற்றாமையை இன்னும் நுணுக்கமாக விவரிக்கின்றார் திருவள்ளுவர். அவர் படைத்துக் காட்டும் இல்லத் தலைவி பசலையூர்வதற்கு விளக்கொளியை உவமையாக்குகிறாள். நீர்ப்பாசி சிறிதுசிறிதாக அகல்வதையும் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வந்து மூடுவதையும் நாம் கண்ணால் காண முடியும். ஆனால் இருவில் ஒளி பரவுவதையும், ஒளி நீங்கியதும் இருள் படர்வதையும் நாம் பார்க்க முடிவதில்லை. கண்ணால் பார்த்தறிய முடியாத அவ்வளவு விரைவில் அவை நடக்கின்றன. வள்ளுவரின் இல்லத் தலைவி, விளக்கினுடைய மறைவினால் இருள் வந்து மூடுகின்ற விரைவே போல், தலைவன் தழுவுதலைத் தளர்த்தும் பசலை வந்து தன்மேல் ஊர்ந்து விடுவதாகக் குறிப்பிடுகின்றாள்.

**''விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு''**

**(1186)**

''தலைவனைத் தழுவிக் கிடந்தேன். அப்போதெல்லாம் இப்பசலை எங்கு மறைந்திருந்ததோ தெரியவில்லை. அவனைத் தழுவுதலினின்றும் சிறிது அகன்றேன். அவ்வளவு தான்! பசலைநிறம் உடனே வந்து பரவி விட்டது'' என்று பசலையால் வரும் பருவரலை மேலும் விவரிப்பாள். தலைவன் விரைவில் திரும்புவானாக! அவள் பசலை நிறமும் விளக்கொளி கண்ட இருள்போல் ஓடுவதாகுக!

வாய்மையே பேசவேண்டும்; சோம்பல் கூடாது; பொருளைச் சேர்க்க வேண்டும்; பிரிவற்ற, மகிழ்ச்சி பொங்கும் இல்வாழ்வு அமைதல் வேண்டும் என்பன திருக்குறளில் விளக்கு பரப்பும் ஒளியில் நாம் காணும் பொருள்களாகும்.



# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அர்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

## வட்டி விகிதங்கள்

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

**காலாந்திர கணக்கு:**—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

**நிரந்தர கணக்கு:**—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

•மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட $\frac{1}{2}\%$ கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு:** தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.


கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம், நவீன விவசாய முறைகள் பற்றி விவசாயிகளுக்குத் தபால் மூலம் கற்பிக்கும்!


அக்டோபர் திங்கள் முதல் அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அகவிலைப் படியாக மேலும் 10 ரூபாய் வழங்கப்படும் என்று முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளார்!


செய்தியே!
சித்திரமே!
கிராமங்களில் வீடு கட்டுவதற்குத் தனி வாரியம் அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது!

# பார்த்தோம்! படித்தோம்!

மைய அரசு கொண்டிருக்கும் கடன் கொள்கை மாற்றப்பட வேண்டும்—நல்லவை செய்யப்பட வேண்டும்—மாநிலங்களும் கடன் வசூலிக்க அனுமதிக்கப்பட வேண்டும்—என்று தமிழக முதல்வர் கருதுவது நியாயமான கருத்து—மெய்யான வாசகம்! அனைத்திந்தியப் பொருளாதார மாநாட்டில் ஆணித் தரமாக இதனைத் தெரிவித்த முதல்வர் பாராட்டுக்குரியவர்.

தா. சண்முகநாதன், திருச்சி—4.

ஆட்டோ-ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு இயங்கி வருகிறது என்பதை எளிய தமிழில் தெரிவித்திருக்கிறீர்கள்.....முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள் எனது பாராட்டை!

ஏ. செல்லையா, சென்னை—15.

'இகபண' என்று எங்கேயோ கேட்டதாக எனக்கு நினைவு உண்டு. 'தமிழரசு' 16-10-73 இதழைப் பார்த்த பிறகுதான், ஜப்பான் நாட்டில் மலர்களை அடுக்கி வைக்கும் கலையைத்தான் 'இகபண' என்று கூறுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்!

மேகலா, போடிநாயக்கனூர்.

பக்கிங்காம் கால்வாய் என்றால் நான் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருந்தேன்! அடேயப்பா! எவ்வளவு சிறப்புமிகு செய்திகளை அந்தக் கால்வாய் தந்திருக்கிறது?

கே. இராமநாதன், சென்னை-2.

மக்கள் தொடர்புத் திட்டம் என்ற கட்டுரையைப் படித்தேன். தமிழக அரசு உண்மையாகவே மக்கள் நலம் நாடும் அரசு என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது கட்டுரை....! தமிழக அரசின் திட்டம் அனைத்தும் மக்களுக்காகவே அமைந்துவருகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று!

எஸ். முருகன், கோவில்பட்டி.

அண்ணல் காந்தி அடிகள் கிராம ராஜியத்தை வலியுறுத்தினார். அவரது கருத்தைத் தமிழகஅரசு போற்றிப் புகழ்ந்து கொண்டாடி வருகிறது. இந்தக் கருத்தை, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

முத்து. மாணிக்கம், நாமக்கல்.

அப்பப்பா! புள்ளி விவரம் என்றால் என் அண்ணன் காத தூரம் ஓடுவார். 'தமிழரசு' இதழில் வெளி வந்த 'புள்ளியியலின் சிறப்பு' என்ற கட்டுரையைப் படித்து விட்டு மிகவும் பாராட்டிவிட்டார் போங்கள்!

அ. கன்னிகா, செய்யாறு.

ஐ.நா. மன்றத்தின் பணிகளைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறீர்கள். மக்கள் தொகைப் பணியிலும் ஐ. நா. மன்றம் ஈடுபட்டிருக்கிறது என்பதை இப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன்.

வே. இந்திராணி, மதுரை—1.

'உலகில் இரண்டு கிளிகள்' தொடர் கதை சுவையாகவே வந்து கொண்டிருக்கிறது. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். டாக்டர் நர்மதா—வக்கீல் மணிவாசகன் இருவருக்கும் மகனைப் பிறந்த பாபு அடிக்கடி டிரங் கால் செய்கிறானே! அவன் ட்ரங் கால் சார்ஜ் கொடுப்பதில்லையோ?

கே. நஞ்சப்பன், ஊட்டி.

நஞ்செய், புஞ்செய் நிறைந்த எங்கள் தஞ்சை மாவட்டத்தில் தாளடி மகசூல் பெருகுவதற்கு அரிய வழிவகைகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். நன்றி.

க. முத்துக்குமார். பேராவூரணி.



சாமி...

# வெண்பாப் போட்டி

## 65. எண்ணும் பெருமை இவை

* சாலை, அணை வாய்க்கால்; சான்ற குடியிருப்பு;
ஆலைத் தொழில்பலவும் ஆக்கினார்—கோலமிகு
கண்முகாம்; மின்வசதி; கல்வியென எம்மரசில்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

பண்ணார் தமிழோ பயிற்று மொழியாகி,
மண்ணாள் நிலைபெற்று வாழ்கிறது;—கண்ணொளியை
நண்ணாரும் பெற்றார் நலங்காண்; நாமெல்லாம்
எண்ணும் பெருமை இவை.

—துறவி, அரியலூர்.

உண்ண உணவும் உடுத்திட நல்லுடையும்
கண்ணுக் கொளிவழங்கும் காரியமும்—'சென்னை'யினை
வண்ணத் தமிழ்நாடாய் மாற்றியதும் செந்தமிழர்
எண்ணும் பெருமை இவை.

—சு. தங்கப்பன், சின்கோனா.

வீட்டுமனை ஈதல், விளைநிலம் வித்தீதல்
நாட்டின் தொழில்வளர்ச்சி நன்றாதல்,—நாட்டமுடன்
கண்ணொளி நல்கல், கருத்தில் இருத்தியே
எண்ணும் பெருமை இவை.

—புலவர் இரசை அதன், தெற்குத் தெரு.

சான்றோர்கள் கூட்டுறவு, சன்மார்க்க நன்னோக்கம்,
வேண்டாத சாதிகுல வேரழுகத்—தீண்டாதார்
பெண்கொண்டு நாட்டின் பெருமைக்கு வாழ்வேன்யான்
எண்ணும் பெருமை இவை.

—சுவித. வே. கள்ளிப்பாளையம்.

சேரன்தன் தம்பி சிலம்பில் இசைத்ததமிழ்
காருலவும் வங்கக் கடலோரம்—சீருடைய
கண்ணகி தன்கதையைக் கல்லில் வடித்தனர்காண்!
எண்ணும் பெருமை இவை.

—ம. சக்குபாய், உடுமலை.

வள்ளுவரும் பாரதியும் வாழ்ந்துயர்ந்த நாடிதுகாண்
துள்ளுதமிழ் அண்ணாவும் தோன்றினார்—கள்ளமிலா
எண்ணம் இவர்கொண்டார் எம்நெஞ்சில் வாழ்கின்றார்
எண்ணும் பெருமை இவை.

—இராச. உமாமகேஸ்வரி, கணியூர்.

விழியற்றார் மீண்டும் விழிபெறலும்; வாழ
வழியற்றார் வாழ்ந்திடலும்; பாழும்—தொழுநோயர்
புண்ணாற்றிப் புத்தொளியைச் சேர்ப்பதுவும்; இவ்வாட்சி
எண்ணும் பெருமை இவை.

—து. திருநாவுக்கரசு, எம். ஏ., அரியலூர்.

அண்ணா பெயரால் அழகான மேம்பாலம்!
மின்னும் அணையா விளக்கு!—அண்ணாவின்
பொன்னும் பெயராலே போக்கு வரவுவண்டி
எண்ணும் பெருமை இவை.

• —இரா. வேதநாயகன், வடமாதிமங்கலம்.

தாழ்த்தப்பட் டார்க்குச் சலுகை; நிலப்பட்டா;
ஏழ்மைதொழு நோயுற்றார்க்(கு) இல்லங்கள்—வாழ்வொத்த
கண்ணொளிவ ழங்கிடுதல் கண்டோம்; தமிழர்நாம்
எண்ணும் பெருமை இவை.

—பகவதி அப்பன், சென்னை—5.

தமிழரசின் மாண்பைத் தரைபுகழிப் பாரீர்!
அமிழ்தாம் உணவதிகம்!—தமிழெழுதிலும்!
மண்ணும் உழவர்க்கே! மாத்தொழிலு ழைப்பார்க்கே!
எண்ணும் பெருமை இவை.

—திருஞானசம்பந்தன், திருச்சி—1.

---

*பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
புலவர் ச. மருதமுத்து. கன்னிகா பரமேஸ்வரி
உயர்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை.

கற்காடும் முட்புதரும் கா,கழனி யாயின; 'செய்'
அற்றாரும் பெற்றிட்டார்; ஆகா! நாம்—பெற்றவளம்
மின்னும்; தொழிற்பெருக்கம்; மேலாக நாட்டுடைமை;
எண்ணும் பெருமை இவை.

—மா. சு. ஜெயராமன், ஓலைப்பாடி.

உயிர்காக்கக் காற்றுதவும்; ஊன்காக்க நீராம்;
பயிர்க்கோ கதிரொளியாம் பாராய்!—துயிலற்று
மண்ணில்நாம் வாழ்ந்திடவே மாஉதவி செய்யியற்கை;
எண்ணும் பெருமை இவை.

—இல. ஆலையமழகன், வல்லம்.

கண்ணுள் கருமணியாம் கன்னித் தமிழொன்று;
அண்ணன் வழியாம் அறிவொன்று—மண்ணுள்ளே
விண்ணுலகும் காணும் வளமொன்று; சான்றோர்கள்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், ஆலங்குடி.

வீசுங் குளிர்நிலவும் வெண்முகிலும் வெள்ளியுடன்
பேசுங் கவிதையெனப் பெற்றதுதான்—காசினியில்
பண்ணோ டுறவாடும் பாவலர்க் கென்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

உண்ணாமை, கள்ளை! உறங்காமை, தன்பணியில்!
எண்ணாமை, தீமை! இரவாமை,—எந்நிலைக்கும்!
விண்ணுயர மண்வாழ்வின் வெற்றிக்குச் சான்றோர்கள்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் புனிதாமணாளன், ஓலைப்பாடி.

ஒப்பிலா நன்குறள் ஓதரிய பன்னூற்கள்
செப்பரிய நுண்கலைகள், சீர்வளங்கள்—செப்பமுறும்
பண்ணும் பரதமும் பார்வியக்க என்நாட்டார்
எண்ணும் பெருமை இவை.

—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

கண்ணோக்குங் கன்னித் தமிழ்புரத்தல்; உண்மகிழ்ந்
துண்ணு முனைவிற்றான் தன்னிறைவு;—விண்முட்டும்
வண்ணமனை; பேருந்து நாட்டுடைமை; எஞ்ஞான்றும்
எண்ணும் பெருமை இவை.

—பிச்சையம்மாள், செந்துறை.

ஆதித்தி ராவிடனும் அர்ச்சனைகள் செய்வதற்கு
நீதிதே வன்முன்பு நிற்கின்றாய்!—சோதிமிகும்
பொன்னும் உவந்தளித்துப் பொய்ச்சாதி யென்கின்றாய்
எண்ணும் பெருமை இவை.

—மா. சே. இராசு, திருப்பூர்.

பட்டியலைச் சொல்லிடவா? பைந்தமிழில் பாடிடவா?
மட்டில்லா நம்மரசின் மாப்பெரிய—திட்டமெலாம்
செந்நெற் கழனிக்குச் சேரும் உரம்போலாம்,
எண்ணும் பெருமை இவை.

—ஜெயா தங்கமுத்து, வே. கள்ளிப்பாளையம்.

இயல்பாக முல்லைய சையுநிலை கண்டு
இசைவோடு தேரினை ஈந்தான்—திசையெங்கும்
பண்ணுள் உறையும் பைந்தமிழ் ஈகையினை
எண்ணும் பெருமை இவை.

—பாரதி சங்குப்பிள்ளை, பவானி.

தன்னுயிர் ஈந்தேனும் தாய்நாடு காப்பதும்;
என்றும் பிறர்க்கென வாழ்வதும்;—தன்மொழியைக்
கண்ணாக யெண்ணியே காத்தலும்; பண்புடையார்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா.

முல்லைக்குத் தேர்கொடுத்தான்! முத்துநீர்க் கங்கையின்
எல்லைவரை போய்வென்றான்! இன்னும்கேள்,—கல்லெடுத்தான்
கண்ணகிக்கு! கைப்பற்றினான் கடாரம்! நற்றமிழன்
எண்ணும் பெருமை இவை.

—வினோதலீலன், இரா. வெள்ளோவாடு.

அண்ணலார் காந்தியார் அன்பு நெறித்தொண்டும்
அண்ணாவின் கொள்கை அதன்வழி—நண்ணிய
ஒண்புகழ் ஆட்சியும், இம்மண்ணில் என்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—வ. சீ. கிருட்டிணமூர்த்தி, தேசிபள்ளி.

தொழுநோயர்க் கில்லம்; தொழிலில் வளர்ச்சி
பழுதில்லாப் பாமரர்க்குப் பட்டா;—உழுவாரின்
எண்ணம்போல் வாழ்வு; எழுச்சியுள்ள ஆட்சியில்நாம்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் சாமி. வரதராசன், கல்லணை.

## வெண்பாப் போட்டி

கண்ணொளி காட்டினர்; கைவண்டி மாற்றினர்!
புண்படு வார்க்கும் புதுவாழ்வாம்!—கண்டோம்யாம்!
எண்ணம் பெரிதாம் எழிலார் கலைஞரை,
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

காவிரி ஆறும் கனிந்த தமிழ்மொழியும்
பூவிரித்துப் போற்றும் புகழ்க்குறளும்—பாவாய்கேள்!
மண்ணுலகில் என்றும் மணித்தமிழ் நாட்டினர்
எண்ணும் பெருமை இவை.

—ப. தப்புசாமி, திருச்சி—4.

அண்ணலாம் காந்தி அடைந்த 'சுதந்திரம்',சீர்
அண்ணு 'தமிழ்நா(டு)என் ருக்கியபேர்,—அண்ணன்பின்
நண்ணுங் கலைஞர் நடாத்தும் 'தமிழாட்சி'
எண்ணும் பெருமை இவை.

—புலவர். கோம்பைச் சீரான், கோம்பை.

காடுமே டெல்லாம் கதிர்விளையும் நஞ்செயெனப்
பாடுபட்ட ஏழைமகன் பசித்துன்பம்—ஓடுதற்(கு)
உண்ணும் உணவில் புரட்சிபல செய்தோம்காண்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வே. நடராசன், எரகுடி.

நெல்லில் புதுமை, நிகரில்லா வாரியங்கள்,
சொல்லில் பொதுவுடைமை, சோர்வின்மை—தொல்லையிலாக்
கண்சிகிச்சை, எல்லார்க்கும் கல்விநலம் நம்மரசில்
எண்ணும் பெருமை இவை.

—வ. அண்ணுமலை, ஆ. தெற்கூர்.

கண்ணும் உயர்கல்வி ஈதலும்; ஏழைதன்
கண்ணுக்கும் நல்லொளி யூட்டலும்;—தண்மதியே
எண்டிசையுந் தமிழோங்கச் செய்தலும்; யாவுமே
எண்ணும் பெருமை இவை.

—கு. இராமசாமி, அத்திபட்டி.

தொகுத்த பொருளீட்டிச் சுற்றமெலாங் கூட்டிப்
பகுத்துண வூட்டிப் பயிற்றும்—பகுத்தறிவு
கண்ணும் கருத்தும் கலந்த மணவாழ்க்கை
எண்ணும் பெருமை இவை.

—தமி, எழும்பூர்.

பாவிரியப் பாடும் பசுமைப் புரட்சிக்குக்
''காவிரி''யில் ''கங்கை'' கலக்கவிடின்,—காவிரியும்
கண்விரிய நெல்விரியும்; காராளர் சொல்விரிய
எண்ணும் பெருமை இவை.

—கே. சுதர்சனம், ஞாயிறு கிராமம்.

''பொங்கி வரும்அருவி, போர்வீரர் வ.உ.சி.,
எங்கும் தவழ்தென்றல், தண்பொருனை,—மங்காத
பண்ணிசைத்த பாரதியார் பார்'' என்று நெல்லையுளார்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் இரா. மதனகோபால், பி.ஏ.,தென்காசி

உற்பத்திச் சாதனங்கள் ஊருக்குச் சொந்தமெனில்
அற்றுவிடும் செல்வந்தர் ஆதிக்கம்—பொற்கொடியே
கண்ணொளி தந்த கலைஞரிதைச் செய்கின்ருர்
எண்ணும் பெருமை இவை.

—கோ. கலைமணி, புதுவை—4.

அன்னைமொழி வளர்த்தோம்! அஃதை அழித்தொழிக்க
முன்னின்ற பேரை முறியடித்தோம்!—இந்நிலத்தை
வண்டமிழே ஆள வழிவகுத்தோம்! மாற்ருரும்
எண்ணும் பெருமை இவை.

—த.ச. தவசிமணி, அருப்புக்கோட்டை

கண்ணொளியும் கல்விக் கருத்தொளியும் மாநிலத்தில்
தண்ணெனவே மின்னொளியும் தான்வழங்கி—உண்மகிழ
எண்ணத் தொலையாத ஏழையர்தம் வாழ்வே நீ
எண்ணும் பெருமை இவை.

—அ. மீனுட்சி அரங்கராசன், கூத்தங்குடி.

தாயாம் தமிழ்உணர்ந்தோம், தன்மானம் காத்திட்டோம்
காயாம் மொழித்தீ கடிந்தொறுத்தோம்—மாயாத
புண்ணுடைய நெஞ்சிற் புகழ்மருந்தாய் நாளைநாம்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் நா. தண்டபாணி, பூங்குடி.

அன்(பு) அகிம்சை, சத்தியம், ஆழ்ந்த தமிழ்ப்பற்று,
நன்றி மறவாமை, நல்லொழுக்கம்,—தன்னுட்டை
இன்னுயிர் ஈந்தேனும் காத்திடுதல் என்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—கா. பவுன், எருமைநாயக்கன்பட்டி.




"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள், கவலை உனக்கிலை, ஒத்துக் கொள்" என்றார் நாமக்கல் கவிஞர்.

உண்மைதான்! ஏதேனும் ஒரு கைத்தொழில் நமக்குத் தெரிந்தால்—தளராத ஊக்கம்—அயராத உழைப்பு—புதுமை நாடும் உணர்வு முதலியன இருந்தால் நாம் நம்முடைய வாழ்க்கையை வளமுடைய தாக்கிக் கொள்வதோடு நமது நாட்டையும் பொருளாதாரச் செழுமையுடையதாக்கிட முடியும். செல்வச் சீமைகளிலெல்லாம்—பொருள் வளம் கொழிக்கும் பூமிகளிலெல்லாம் கைத்தொழில்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றன. ஜெர்மனியின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 13 விழுக்காட்டினரைக் கைத்தொழில்கள் வாழ்விக்கின்றன. பல்வேறு தொழில்களும் பாங்குறத் திகழும் பர்மிங்ஹாம் நகரில் உள்ள தொழிற்சாலைகளில் பாதிக்குமேல் குடிசைத் தொழில்கள் தாம் என்பது குறிப்பிடத் தக்கது. தொழில் வளம் கொழிக்கும் ஜப்பானில், 5-க்கும் குறைந்த தொழிலாளரைக் கொண்ட குடிசைத் தொழில்களில் 55 விழுக்காட்டினர் ஈடுபட்டுள்ளனர். இன்னும், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ப்ரான்சு, ஹாலந்து ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் பெரும் பகுதியும் குடிசைத் தொழில்களில் உருவாகும் பொருள்களே என்பது குறிப்பிடத் தக்கது.

பொதுவாகச் செல்வச் செழிப்பிலே நீந்தித் திளைக்கும் நாடுகளே—பொருளாதார வளம் கொழிக்கும் நாடுகளே கைத்தொழில் வளர்ச்சியில் இத்துணை ஈடுபாடு கொண்டுள்ளன என்றால், பொருளாதாரத் துறையில் பின்தங்கிய—இன்னும் வளர்ச்சியடையாத—ஏழை எளிய மக்களே மிகுதியுடைய நமது நாடு இத்துறையில் எத்துணை ஈடுபாடு கொள்ள வேண்டும்? நமது நாடு, கைத்தொழில் வினைஞர்கள் பல்கிப் பெருகியுள்ள நாடு. எனினும், தொழில் தெரிந்த ஏழைத் தொழிலாளர்கள் பலர், தொழில் புரிவதற்குத் தேவையான வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாத காரணத்தால் அவர்கள் நல்வாழ்வு பெற இயலாமல் ஏக்க வாழ்வு வாழ்வதை—வறுமையில் வாடி உழல்வதை நாம் அன்றாடம் காண்கின்றோம். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா வழி நின்று விரைந்து பணியாற்றும் தமிழக அரசு, கைத்தொழிலாளர் கவலையைப் போக்கப் பல்துறை ஒத்துழைப்பும் உதவியும் நல்கி வருகிறது. அவ்வகையில் கைத்தொழில், வளர்ச்சிக்கும் கைத்தொழிலாளர்களின் நல்வாழ்வுக்குமாக அமைந்தது தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சி நிறுவனம்.

இது 1973 ஜூலை கடைசி வாரத்தில் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 1-8-73-லிருந்து அது பணியாற்றத் தொடங்கியுள்ளது. இதன் அதிகாரம் பெற்ற மூலதனம் 50 இலட்சம் ரூபாய். இதில் 75 விழுக்காடு தொகையை அரசாங்கம் போடும். பாக்கி 25 விழுக்காடு தொகையைத் தொழில் வினைஞர்களும் தொழில் வினைஞர் கூட்டுறவுச் சங்கங்களும் போடுகிறார்கள்.

தொடக்கப் பணியாக இந்த நிறுவனம் விற்பனைப் பணிகளை மட்டுமே மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் பரவலாக உள்ள 9 அரசாங்க விற்பனை நிலையங்களை இது மேற்கொண்டுள்ளது. இனியும் தமிழ்நாடு தொழில் வினைஞர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைச் சேர்ந்த 5 விற்பனை நிலையங்களை விரைவில்

இது மேற்கொள்ளும். விரைவில் டில்லியில் ஒரு விற்பனை நிலையத்தை இது தொடங்க இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கச் சுற்றுலாத் துறை இயக்குநரின் ஒத்துழைப்புடன் பம்பாயில் தனது பொருட்களை இது ஏற்கெனவே விற்கத் தொடங்கி விட்டது. முதல் ஆண்டிலேயே இந்த நிறுவனம் ரூபாய் 1 கோடி பெறுமானமுள்ள பொருட்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. எந்த ஒரு தனி நிலையத்தின் விற்பனையைவிட இது அதிகமானதாகும்.

தமிழ்நாட்டில் கைத்திறன் தொழில் பொருள்கள் பல திறப்பட்டன. மாமல்லபுரத்தில் கல்லைச் செதுக்கிச் செய்யப்படும் சிற்பங்கள், சுவாமிமலை வெண்கலப் பதுமைகள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்பட்ட வெண்கல உலோகப் பொருட்கள், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, வடஆர்க்காடு மாவட்டம் முதலிய பகுதிகளில் செய்யப்படும் பனை ஓலைப் பொருட்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்படும் கோரைப் பாய்கள், கலைத்திறன் மிக்க தஞ்சாவூர் தட்டுகள், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தயாரிக்கப்படும் ஆலய திரைச் சீலைப் பொருட்கள், சென்னை, விருத்தாச்சலம் ஆகிய பகுதிகளில் தயாரிக்கப்படும் கலைத்திறன் மிக்க பாண்டங்கள், நாகர்கோயில்,விருதுநகர், மதுரை ஆகிய இடங்களில் தயாராகும் நுட்பமான மர வேலைப்பாடுகளைக் கொண்ட பொருள்கள் முதலியவை குறிப்பிடத் தக்கவை.

இன்று தொழில் வினைஞர்களையும், கைத்திறன் தொழிலையும் எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்சினைகள் வருமாறு :—

கலைத்தொழில் திறன் படிப்படியாக மறைந்துவரும் நிலையை, தனிப்பட்ட தொழில் வினைஞர்களுக்கு நிதி வசதி கிடைக்காமை, உற்பத்தி முறைகளை மேம்படுத்த வல்லுநர்கள் கிடைக்காமை, விற்பனை வசதி இல்லாததால் இடைத்தரகர்கள், தொழில் வினைஞர்களின் உழைப்பைச் சுரண்டும் நிலை ஆகியவை குறிப்பிடத் தக்க சிக்கல்களாகும். இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் களையத் தமிழ்நாடு அரசாங்கத்தின் தொழில் துறை முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பனை ஓலைப் பொருட்களிலிருந்து வெண்கலச் சிற்பங்கள் செய்வதுவரை பல்வேறு கைத்திறன் தொழில்களிலும் பயிற்சி அளிக்க 19 உற்பத்தி-பயிற்சி நிலையங்கள் உள்ளன. தந்தையிடமிருந்து மகனுக்கு என்று வழிவழியாக வரும் தொழில்திறன், குறைந்து மறைந்து போய்விடக் கூடாது என்பதே இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும். இந்த உற்பத்தி-பயிற்சி நிலையங்களின் விளைவாகத் தொழில் திறன் பரவலடைந்து, உற்பத்தியும் பெருகியிருக்கிறது. தொழில் வினைஞர்களுக்கு நிதி வசதி கிடைக்கச் செய்யவும், அவர்களுடைய பொருட்களுக்கு விற்பனை வசதி காணவும் தொழில் வினைஞர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது. தமிழகம் முழுவதிலுமுள்ள 300க்கு மேற்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 50 விழுக்காட்டுக்கு மேற்பட்ட சங்கங்கள் தொழில் வினைஞர்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சி நிறுவனம் 'பூம்புகார்' மூலம் விற்பனை மட்டுமே இப்போது மேற்கொண்டுள்ளது. படிப்படியாக இது, மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், தொழில்உத்திகளை மேம்படுத்தல், திருந்திய முறைக் கருவிகளைத் தொழில் வினைஞர்களுக்கு வழங்குதல், திருந்திய முறைகளில் பயிற்சியளித்தல், வாங்குவோரின் தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்பப் பொருட்கள் உற்பத்தி ஆகியவைகளிலும் இது கவனம் செலுத்தும். தமிழ்நாடு அரசாங்கத்தின் தொழில்துறை அனைத்திந்தியக் கைத்திறன் தொழில் வாரியம் ஆகியவற்றுடன் இந்த நிறுவனம் இணைவான முறையில் ஒத்துழைத்துப் பணியாற்றும்.

கைத்திறன் தொழில்கள் கிராம மக்களுக்கு வேலை வசதி அளிக்கின்றன. அத்துடன் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி வசதியையும் பெற்றுத் தருகின்றன. எனவே நாட்டின் பொருளாதாரத்தில் இந்தத் தொழிலுக்குரிய பங்கு மிகமிக முக்கியமானது.

அண்மையில் தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகம் சென்னை இராசாசி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த 'பூம்புகார்' கைத்திறன் பொருட்காட்சியை 4-10-73ல் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தப் பொருட்காட்சியில் உலோகத்தாலான சிற்பங்கள், கல்லில் செதுக்கிய சிலைகள், கவின்மிக்க காகிதக் கூழ்ப் பொம்மைகள், மரத்தாலான கதைகள், தெரகோட்டி எனப்படும் சுட்டமண் சுதைகள், மெழுகால் துணிகளில் எழுதப்பட்ட வண்ணத் திரைச்சீலைகள், கடுக்காய் போன்ற பொருள்களிலிருந்து வண்ணங்கள் தயாரித்து அவற்றால் வரையப்பட்ட 'கலம்காரி' எனப்படும் திரைச் சீலைகள், பல்வேறு அளவுள்ள அழகிய வேலைப்பாடுள்ள குத்து விளக்குகள், நுட்பமான வேலைப்பாடமைந்த தஞ்சைக் கலைத் தட்டுக்கள், தாஜ்மகால் தஞ்சைப் பெருங்கோயில் , திருவரங்கம் கோயில் போன்ற தோற்றப் பொலிவுடைய தக்கைப் பொருட்கள், பல வண்ணக் கண்ணாடி பதித்த பூரண கும்பங்கள், துணிப் பொம்மைகள், பனங்கொட்டையில் இயற்றை நார் கொண்டு தயார் செய்யப்பட்ட-சுவர்களில் அழகுறத் தொங்கவிடத் தக்க கலைகள், கொட்டாங்குச்சியைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்வேறு அமைப்புடைய அழகிய பூச்சாடிக்கள், ஒயின் கப்புகள், ஆமை ஓட்டினால் செய்யப்பட்ட பல்வேறு அலங்காரப் பொருள்கள், நமது பண்டைய இசைக்கருவிகள்-அவற்றின் வடிவமைப்புகள், எருமைக் கொம்பாலான பல்வேறு பறவைகள், மிருகங்களின் மாதிரிகள், பனைஓலைத் தடுக்குகள், அலங்காரக் கூடைகள், பனை ஓலையிலான வண்ணப் பூக்கொத்துக்கள், மூங்கிலிலான பூச்சாடிகள், கலை வண்ணம் காட்டும் மேசை விளக்குகள், பீங்கான் பொருட்கள், காட்பாடி அருகிலுள்ள காரிகிரி கிராமத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டே அங்கு தயாரிக்கப்படும் காரிகிரி மட்பாண்டங்கள், மதுரையில் தயாராகும் புகழ்பெற்ற சுங்குடிச் சேலைகள், பத்தமடை, சீர்காழி முதலிய இடங்களில் தயாராகும் பட்டு-கோரைப் பாய்கள், சணப்பை நாரினால்



தயாரிக்கப்பட்ட அழகிய- நீடித்து உழைக்கக்கூடிய ரத்தினக் கம்பளங்கள், தரை விரிப்புகள், கார்களில் பயன்படுத்தும் விரிப்புகள் இப்படி எத்தனையோ பொருட்கள்! அத்தனையும் தமிழகத்திலுள்ள கைத்தொழிலாளர்களின் கைவண்ணத்தையும் தொழில் திறனையும், தொழில் நுட்பத்தையும் எடுத்துக் காட்டி நிற்பன!

இந்தப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துக் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் உரையாற்றுகையில்,

''ஒருநாட்டின் கலையை, பண்பாட்டை, அந்த நாட்டின் கைத்திறன் மிக்க பொருட்கள் வெளிநாட்டினருக்கு எடுத்துக் காட்ட உதவுகின்றன. நமது நாட்டுக் கைத்தொழிற் பொருட்கள் இவ்வகையில் நமது கலாச்சாரத்தை எடுத்துக் காட்டக் கூடியவை.

நமது நாட்டில் சிறந்த கைத்தொழிற் பொருட்கள் அழகாகத் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் நமது நாட்டுக் கைத்தொழிற் பொருட்களை வாங்கிச் செல்ல விரும்புகிறார்கள். அப்படி வாங்கிச் செல்லும்போது, அவர்கள் நமது நாட்டுக் கலாசாரத்தையும் வாங்கிச் செல்கிறார்கள் என்று பொருள். அப்படிப்பட்ட நிலையிலுள்ள இத்தகைய கலைப் பொருட்களைத் தயாரிக்கும் கலைஞர்களுக்குப் பல உதவிகள் செய்ய இந்தக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

''இந்தப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களுக்குப் 'பூம்புகார்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொருட்காட்சி பொது மக்களிடையே தமிழ்நாட்டுக் கைத்தொழிற் பொருட்களின் சிறப்பை எடுத்துக் காட்ட உதவும்'' என்று குறிப்பிட்டார்.

பொருட்காட்சி, 4-10-73 முதல் 11-10-73 வரை நடைபெற்றது. ஏராளமான மக்கள் பொருட்காட்சியைப் பார்வையிட்டு தமிழகக் கைவினைஞர்களின் தொழில் திறனை வியந்து சென்றனர். பொருட்காட்சியில் சுமார் 16,000 ரூபாய் மதிப்புள்ள கைத்திறன் தொழிற் பொருட்கள் விற்பனையாயின.

'பூம்புகார்' தமிழகத்தின் கைத்தொழில் வினைஞர்களின் வாழ்வில் எழுச்சியும் இன்பமும் ஊட்டி, நாட்டுப் பொருளாதாரத்திற்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

— சாமி பழ

# பாக்கு உற்பத்தி

கொட்டைப் பாக்கு, இந்தியாவின் புகழ்பெற்ற ஒன்றாகும். நம்முடைய ஆண்டு உற்பத்தி 1·35 இலட்சம் டன்கள். இது ஏறக்குறைய ரூ. 60 கோடி பெறுமானமுள்ளது. அநேகமாக, பாக்குச் சேமிப்பின் அளவில் பாதி மைசூரில் கிடைக்கிறது. பாக்கினுடைய விலை—அதன் வடிவம், அளவு, சுவை, தரம் போன்றவைகளைப் பொறுத்திருக்கிறது!



மிகப் பழங்காலத்திலேயே பாக்கைப் பற்றிய குறிப்புகள் வடமொழி மத இயல் நூல்களில் காணப்படுகின்றன. பாக்கு முதன் முதலில், கி.மு. 340-ல் ஹெரோடோடஸ் என்பவரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உணவிற்குப் பின்னர் வெற்றிலை, பாக்குப் போடுதல் ஒரு சிறந்த பழக்கம் என கி.பி. முதல் நூற்றாண்டில் எழுந்த சில சாத்திர நூல்கள் கூறியிருக்கின்றன.

ஆசியாவில் வெற்றிலை பாக்குப் போடும் பழக்கம் உண்டென்பதை முதன் முதலில், 1298-ல் குறிப்பிட்டவர் ஐரோப்பாவைச் சேர்ந்த மார்கோ போலோ ஆவார். அதற்குப் பின்னர் அநேக ஐரோப்பிய எழுத்தாளர்களும் வாஸ்கோடகாமா போன்ற சுற்றுலாப் பயணிகளும் இதையே தெரிவித்திருக்கிறார்கள்.

பாக்கு, பண்டைய மலேசியாவைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது. பின்னர் அது அங்கிருந்து கிழக்கு இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கும் இறுதியில் இந்தியாவுக்கும் பரவியது. இருந்தாலும் இந்தியா, மலேசியா இலங்கை ஆகிய நாடுகள் பாக்கு உற்பத்தியில் முதன்மையாகத் திகழ்கின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் பாக்கு உற்பத்தியாகும் வங்காளத்தின் அநேக பகுதிகள் பாகிஸ்தானுடன் சேர்ந்துவிட்டன. இந்தியாவில் கேரளம், மைசூர், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் பாக்கு பயிராகின்றது. தமிழ்நாடு, மராட்டியம், மேற்கு வங்கம், கோவா போன்ற மாநிலங்களின் சில பகுதிகளிலும் இது பயிராகிறது.

நாட்டின் மொத்தப் பாக்கு உற்பத்தியில் மைசூர் 40 சதமும், கேரளம் 35 சதமும், அஸ்ஸாம் 20 சதமும் உற்பத்தி செய்கின்றன.

அனுபவமிக்க ஒரு தொழிலாளி எந்தவொரு வடிவங்கொண்ட பாக்கானாலும் மணிக்கு 6 முதல் 8 கிலோ வரை வெட்ட முடியும். பாக்கின் தரம் அதனுடைய வயது முதிர்ச்சியை ஒத்துக் காணப்படுகிறது. அதிக வயது முதிர்ச்சியடைந்தவை குறைந்த தரத்தைத் தருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883

# கலை செறிந்த நாட்டின் கவின்மிகுந்த படையல்!



இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**61 -வது குலுக்கல் நாள்: 13-11-1973**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**

*கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;*
*இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை - 2*
*விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,*
*மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9*

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்